# முஹம்மதுற்றஸூலுல்லாஹ்

صلى الله عليه وسلم



எம்.ஐ.எம். அமீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

605634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் (ﷺ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முஹம்மதுர்ரஸூலுல்லாஹ் (ﷺ)

**(மக்காக் காலப்பகுதி)**

**முஹம்மது இப்றாஹிம் ஆலிம்சாஹிப்**

**முஹம்மது அமீன்**

*முதுநிலை விரிவுரையாளர்.*

*பேராதனைப் பல்கலைக்கழகம்*

28 JUN 2007

**அல்ஹஸனாத் வெளியீட்டுப் பணியகம்**

**'முஅஸ்ஸஸதுல் ஹஸனாத்'**

F67, ஹிஜ்ராகம,

ஹெம்மாதகம.

605634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Muhammadurrasulullah (ﷺ)
(Mecca Period)

Author (c) : M.I.M. Ameen
F64/1, Hijragama
Hemmathagama

Published by : Al-Hasanath Publishers
'Mu'assasathul Hasanath'
F67, Hijragama
Hemmathagama

Date : 20-02-2002

Printed by : M J M Printers
119, Main Street, Mawanella.

Price : Rs. 90/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சமர்ப்பணம்

இறைதூதை மக்கள் முன் வைக்க
முயற்சிக்கும் இறையடியார்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பதிப்புரை

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

"முகம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் அழகியதொரு முன்மாதிரி மனித சமுதாயத்துக்குண்டு" என்ற அல்குர்ஆனின் கருத்து, முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்வைப் பல கோணங்களில் இருந்து முன்வைக்க அறிஞர்கள் பலரைத் தூண்டியுள்ளது. இதனால் நபி (ஸல்) அவர்கள் பற்றிய நூல்கள் தமிழ்மொழி உட்பட உலக மொழிகள் பலவற்றுள் வெளிவந்துள்ளன. இருந்த போதும் தமிழ்மொழி வாசகர்களின் தேவையை நிறைவு செய்யப் போதுமான நூல்கள் இன்னும் பல வெளிவர வேண்டிய தேவையுண்டு.

பேராதனைப் பல்கலைக்கழக அறபு-இஸ்லாமிய நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளரான எம்.ஐ.எம்.அமீன், நீண்ட காலக் கற்பித்தல் அனுபவத்தின் பலனாகப் புரிந்து கொண்ட தேவையை நிறைவேற்றுமுகமாக எழுதியுள்ள முகம்மதுற்றஸூலுல்லாஹ் (ஸல்) எனும் நூலை அல்ஹஸனாத் வெளியீட்டுப் பணியகம் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது. அவரது முன்னைய நூல்களுக்கு வாசகர்கள் அளித்த ஆதரவைப் போன்று இந்நூலுக்கும் ஆதரவளித்து, பல நூல்களை வெளியிட ஊக்கமளிக்குமாறு வாசகப் பெருமக்களாகிய உங்களை அன்புடன் வேண்டுகிறேன்.

எம்.ஐ.எம். ஹஸன் B.A. (Dip. In. Edu)
பணிப்பாளர்,
அல்ஹஸனாத் வெளியீட்டுப் பணியகம்,
முஅஸ்ஸஸதுல் ஹஸனாத்,
67, ஹிஜ்ராகம,
ஹெம்மாதகம.

28 JUN 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முன்னுரை

அன்பும் அருளும் மிக்க அல்லாஹ்வின் அருள் நாடி ஆரம்பிக்கின்றேன்.

முகம்மத் (ஸல்) அவர்கள் பற்றி பல்வேறு மொழிகளில் நூற்றுக்கணக்கான நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழ் மொழியிலும், முகம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பல கோணங்களில் இருந்து நோக்கி எழுதப்பட்ட நூல்கள் சில வெளிவந்துள்ளன. அவர்களது வரலாறு பற்றிய நூல்கள் ஆங்கிலம், தமிழ், அறபு, சிங்களம் முதலாம் மொழிகளில் இலங்கை வாசகர்களுக்கும் வாசிக்கக் கிடைக்கின்றன. இருந்த போதும், தமிழ் மொழி மூலம் உயர் கல்வி பெறும் மாணவர்களின் தேவையை நிறைவேற்றப் போதுமான இஸ்லாமிய நூல்கள் தமிழ் மொழியில் குறைவாகவே உள்ளன. குறிப்பாக மாணவர்கள் அறிவியல் ரீதியாக அணுகி, விடைகளைத் தயாரிக்கத் துணையாகும் நூல்கள் மிகக் குறைவே. உயர்கல்வி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் கூடிச் செல்வதால், இத்தேவை நிறைவு செய்யப்படல் வேண்டும் என்பது உணரப்பட்டுள்ளது. அதே வேளை, சாதாரண வாசகர்களும் புரிந்துகொள்ளத் தக்கதாக நூல்கள் முன்வைக்கப்பட வேண்டிய தேவையும் நம் நாட்டில் உண்டு. ஆதலால் முடிந்த வரை இலகு நடையில் கருத்துக்களை முன்வைக்க இந்நூலில் முயற்சி செய்யப்பட்டுள்ளது.

நபிமார் வரிசையில் முகம்மத் (ஸல்) அவர்கள் மிகவும் இளையவராவார். வரலாற்றுக் காலத்தைச் சேர்ந்தவர். மற்றெந்த நபிமாரதும் வரலாற்றைப் போலல்லாது, பிறப்பு முதல் இறப்பு வரையிலான, அவரது வரலாறு அவதானிக்கப்பட்டு வாய்மொழி மூலமும் எழுத்து வடிவிலும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

ஸஹாபாக்கள் முகம்மத் (ஸல்) அவர்களின் சொல், செயல் குணப்பண்புகள், அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள், அவரது தோற்றம், அங்க வடிவு முதலாம் அம்சங்களை மிக உன்னிப்பாக அவதானித்துள்ளனர். தாடியின் நரைமயிர், தலை சீவுதல், உணவு உண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முறை, குளித்தல், உடுத்தல், உரையாடுதல் முதலாம் அம்சங்களைக் கூட அவர்கள் அவதானித்துள்ளனர்.

அவர்களின் மரணத்தை அடுத்து, அவர்கள் பற்றிய தகவல்களை அறிய இளம் தலைமுறையினரும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றோரும் அதிக ஆர்வம் காட்டினர். அவர்கள் ஸஹாபாக்களிடம், முகம்மது (ஸல்) பற்றிய பல்வேறு துறைத் தகவல்களைக் கேட்டறிந்தனர். இவ்வாறு திரட்டிய தகவல்களைக் கொண்டு இறைதூதர் பங்குபற்றிய போர்கள் பற்றிப் பேசும் "மகாதி" என்றழைக்கப்பட்ட நூல்களையும், அவர்களின் வரலாற்றைப் பற்றிப் பேசும் "சீறா" என்றழைக்கப்பட்ட நூல்களையும் ஆரம்ப காலத்தில் எழுதினர். அது முதல், அவர்களின் வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் இருந்து நோக்கி எழுதும் முயற்சி தொடர்ந்து இன்று வரை நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. "ரஹ்மதுல் லில் ஆலமீன்" உலகினர்க்கோர் அருட்கொடை, "இன்னக லஅலா குலுகின் அழீம்" (நிச்சயமாக நீங்கள் உயர்ந்த குணப்பண்புகளையுடையவர்கள்), "ஸிராஜம் முனீரா" (பிரகாசிக்கும் ஒளிவிளக்கு) என்றெல்லாம் வல்ல அல்லாஹ்வாலே பாராட்டப்பட்ட அவ்விறைதூதரின் வாழ்க்கையை முழுமையாக ஒரே பார்வையில் பார்க்கக்கூடியதாக வடித்துத் தருவதில் இன்னும் எவரும் பூரண வெற்றி பெறவில்லை. எந்தத் தரத்தில் இருக்கும் எவருக்கும் பொருந்தக் கூடிய, அழகிய முன்மாதிரிகளை அவர் ஒருவரில் மாத்திரமே காண முடிகிறது. முன்னைய நபிமார்கள் ஒவ்வொருவரிடமும் இருந்த சிறப்பியல்புகள் ஒவ்வொன்றையும் கூட்டுமொத்தமாகவே அவரில் காண முடிகிறது. ஆதலால் உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் அவர் ஓர் அழகிய முன்மாதிரிப் புருஷராக, ஒளிவிளக்காக விளங்குகின்றார். இவற்றையெல்லாம் ஒரு நூலில் வடித்துத் தருவதில் எவரும் முழுமையாக வெற்றி பெற முடியாது. இந்நூலிலும் உயர்கல்வி மாணவர்களின் தேவைக்கு முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால் சுட்டிக்காட்டப்பட வேண்டிய பல அம்சங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இருந்த போதும், தமிழ் மொழி மூல வாசகர்களின் தேவையில் ஒரு பகுதியை நிறைவேற்ற இந்நூல் உதவி செய்யும் என்று நம்ப முடியும்.

இந்நூலை வெளியிடத் துணைநின்ற நண்பர்கள் அச்சகத்தார்கள், அல்ஹஸனாத் பதிப்பகத்தார்கள் ஆகியோருக்கு எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.ஐ.எம்.அமீன்,
முதுநிலை விரிவுரையாளர்,
அறபு இஸ்லாமிய நாகரிகத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | X-XI |
| முகம்மது (ஸல்) அவர்களின் முன்னோர்கள் | 01-05 |
| யானை ஆண்டு | 06-07 |
| சிறுவர் முகம்மது | 08-11 |
| ஹர்புல் பிஜார் | 12-13 |
| ஹில்புல் புளுல் | 14-15 |
| அல் அமீன் | 16-17 |
| திருமணம் | 18-21 |
| க.்.பா புனர்நிர்மாணம் | 22-25 |
| ஹிராவில் தியானம் | 26-28 |
| வஹி அருளப்படல் | 29-31 |
| இரகசிய அழைப்பு | 32-33 |
| பகிரங்க அழைப்பு | 34-35 |
| இறைதூதை எதிர்த்ததேன் | 36-40 |
| குறைசியரின் எதிர் நடவடிக்கைகள் | 41-57 |
| அபீசீனிய ஹிஜ்ரத் | 58-62 |
| இஸ்லாம் மக்காவில் காலூன்றல் | 63-66 |
| மி.்றாஜ் | 67-74 |
| அகபா உடன்படிக்கை | 75-81 |
| மதீனாவை நோக்கி | 82-89 |
| மதீனா சாசனம் | 90-99 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# முகம்மது (ஸல்) அவர்களின் முன்னோர்கள்

முகம்மது (ஸல்) அவர்கள், இப்றாஹீம் (அலை) அவர்களின் மகன் இஸ்மாஈல் (அலை) அவர்களின் வழித்தோன்றல்களில் ஒருவராவார். எனினும் முகம்மது (ஸல்) முதல் அத்னான் என்பவர் வரை மட்டுமே அவர்களது முன்னோர்களின் பெயர் அட்டவணையைச் சரியாக வரலாற்றாசிரியர்களால் குறிப்பிட முடிந்துள்ளது.

அத்னான் முதல் இஸ்மாஈல் (அலை) வரையிலான தலைமுறையினரின் பெயர்களை அட்டவணைப்படுத்தும் போது வரலாற்றாசிரியர் கருத்து முரண்படுவர். எனினும் இஸ்மாஈல் (அலை) அவர்களுடன் அட்டவணையைப் பூரணப்படுத்துவதில் அனைவரும் கருத்தொற்றுமைப்படுகின்றனர். இஸ்மாஈல் (அலை) அவர்களின் பன்னிரண்டு பிள்ளைகளில் ஒருவரான கிதார் என்பவர் ஹிஜாஸில் வாழ்ந்தார். அவரது பரம்பரையில் வந்தவரே அத்னான் என்பவராவார். இவ்விருவருக்குமிடையே நாற்பதுக்கும் அதிகமான தலைமுறையினர் இருந்தனர் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுவர். பிரசித்தி பெற்ற தலைவர்களை மட்டும் அரேபியர் மனதில் பதித்து வைத்ததால் நீண்ட காலத்துக்கு முன்பு இருந்த எஞ்சிய தலைமுறையினரை அவர்களால் குறிப்பிட முடியவில்லை என்பர்.

இறைதூதரின் முன்னோர்களின் பெயர்கள் கீழ்வருமாறமையும்: முகம்மது (ஸல்) ➡ அப்துல்லாஹ் ➡ அப்துல் முத்தலிப் ➡ ஹாசிம் ➡ அப்துல்மனாப் ➡ குசை ➡ கிலாப் ➡ முற்றத் ➡ க.்.ப் ➡ லுஅய் ➡ .்.காலிப் ➡ பிஹ்ரு (குறைசி) ➡ மாலிக் ➡ நழ்று ➡ கினானா ➡ குதைமா ➡ முத்ரகா ➡ இல்யாஸ் ➡ முழர் ➡ நிதார் ➡ மஅத் ➡ அத்னான்.

இறைதூதரின் முன்னோர்களில் பலர் கோத்திரத் தலைவர்களாகவும், கண்ணியம் மிக்கவர்களாகவும், தளபதிகளாகவும் இருந்து புகழ் பெற்றுள்ளனர். அவர்களில் சிலரின் வீரமும், கொடையும், ஞானமும் மிகப் பிரபல்யமானவை. மிக இனிமையான குரலையுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முழர் என்பவரின் கூற்றுக்கள் இன்றும் பழமொழிகளாக வழங்கப்பட்டு வருகின்றன. லுக்மானுல் ஹகீம் பெற்றிருந்தது போன்ற ஞானத்தை இல்யாஸ் என்பவர் பெற்றிருந்தார். பிஹ்ரு என்பவர் ஒரு கொடை வள்ளல். இவரே குறைசி என்றழைக்கப்பட்டார். இவருக்குப் பிறந்தவர்களே "குறைசியர்" எனப்பட்டனர். இவருக்கு முன்னுள்ளோர்கள் கினானாக்கள் என்றழைக்கப்பட்டனர். பிஹ்ரு கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் முதற் பத்துக்களில் பிறந்தார் என்பர். க.்.பு என்பவர் வெள்ளிக்கிழமைகளில் மக்களுக்கு நல்லுபதேசம் செய்தார். பிற்காலத்தில் தன் பரம்பரையில் நபி ஒருவர் தோன்றுவார் என்றும், அவரைப் பின்பற்றுமாறும் ஆலோசனை நல்கினார். உமர் பின் கத்தாப் (றழி) அவர்களின் முன்னோரில் எட்டாம் தலைமுறையினராகவும் இவர் உள்ளார். நபிகளாரின் முன்னோரான முற்றத் என்பவர், அபூபக்ர் (றழி) அவர்களின் ஆறாம் தலைமுறையினராகவும் உள்ளார். கிலாப் என்பவரில், முகம்மது (ஸல்) அவர்களின் தாயார் ஆமினாவின் தலைமுறை இணைகிறது. இன்று வரை வழக்கில் உள்ள அறபு மாதங்களின் பெயரை இவரே சூட்டினார்.

குசை என்பவர்தான் முதன் முதலில் குறைசி என்றழைக்கப்பட்டார் என்றொரு கருத்தும் உண்டு. இவர் நபிகளாரின் முன்னோரில் புகழ் மிகப் பெற்றவர். இவரது காலப்பகுதியில் "குதாஆ" கோத்திரத்தவரான ஹுலைல் என்பவரே க.்.பாவின் பாதுகாவலராக இருந்தார். இவரது மகள் ஹுலைலாவை குசை விவாகம் புரிந்ததன் வழி, க.்.பாவின் பாதுகாப்புப் பொறுப்பை இவர் பெற்றுக் கொண்டார். அங்குமிங்குமாகச் சிதறி வாழ்ந்த தன் கோத்திரத்தவர்களை மக்காவின் பத்ஹா எனும் பள்ளத்தாக்கில் குடியேற்றி ஒன்று திரட்டினார். இதன் காரணமாகத்தான் இவர் "குறைசி" (ஒன்று திரட்டியவர்) எனப்பட்டார். இக்காரணம் பற்றியே அவர் "முஜம்மி" என்றும் அழைக்கப்பட்டார். நாளடைவில் மக்காவினதும் அதன் அயல் பாகத்தினதும் பரிபாலகராக அவர் அங்கீகரிக்கப்பட்டார். இப்றாஹீம் (அலை) அவர்களின் பின்பு, க.்.பாவை இவரே புனர் நிர்மாணம் செய்தார். அவர் ஒரு சிறந்த நிருவாகி. "தாருன் நத்வா" எனும் இல்லத்தை அமைத்து, அங்கு அனைத்துச் சமூகப் பிரச்சினைகளையும் கலந்துரையாடினார். புனித யாத்திரை செய்வோருக்கான நீர் வழங்கல் (ஸிகாயா), உணவு வழங்கல் (ரிபாதா) என்பவற்றைப் பொறுப்பேற்று நிறைவேற்றினார். "ஹிஜாபா" அல்லது "ஸதானா" எனப்பட்ட க.்.பாவின் சாவியை வைத்திருக்கும் பொறுப்பும் அவரிடமே இருந்தது. மது அருந்துவதைத் தவிர்க்குமாறு தனது மரணத் தருவாயில் தன் பிள்ளைகளுக்கு ஆலோசனை நல்கினார். அவரது கூற்றுக்கள் சில இன்று வரை பழமொழிகளாக வழங்கி வருகின்றன.

குசைக்கு ஆறு பிள்ளைகள் இருந்தார்கள். மூத்த பிள்ளையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அப்துத்தார் என்பவரிடம் க.'.பாவின் பல்வேறு வகையான பொறுப்புக்களை குசை வழங்கினார். எனினும் அவரது திறமையீனம் காரணமாக அடுத்த சகோதரரான அப்துல் மனாப் அப்பொறுப்புக்களை நாளடைவில் கையேற்றார். இதனால் குறைசியரின் தலைமைத்துவம் அப்துல் மனாபை அடைந்தது. உதுமான் (றழி) அவர்களும் இமாம் ஷாபிஈயும் இவரது வழித்தோன்றலில் வந்தவர்களேயாவர். அப்துல் மனாபிற்கு ஆறு ஆண்பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஹாசிம் என்பவரே ஆளுமை கூடியவராக இருந்ததால், அவரே அப்துல் மனாபின் வாரிசானார். ஹாசிமின் மூத்த சகோதரரான அப்துஸ் சம்ஸ் தனது பொறுப்பில் இருந்த "ஸிகாயா", "ரிபாதா" பணிகளையும் ஹாசிமிடம் ஒப்படைத்தார். ஹாசிமின் நிர்வாகத் திறமையாலும் தாராளத்தன்மையாலும் பெரும் புகழ் பெற்றார். இதனால் அப்துஸ் சம்ஸின் மகனான உமையா அவர் மீது பொறாமைப்பட்டு, ஹாசிமின் தலைமைத்துவத்தை போர்க்களத்தில் எதிர்த்தார். போரில் உமையாவை ஹாசிம் வெற்றி கண்டார். உமையாவின் இந்நடவடிக்கை பற்றி மூத்த தலைவர்கள் தாருன் நத்வாவில் ஒன்றுகூடி வழங்கிய தீர்ப்புக்கு இணங்க, மக்காவில் இருந்து உமையா பத்து வருடங்களுக்கு நாடு கடத்தப்பட்டார். பனூ ஹாசிம்களுக்கும் பனூ உமையாக்களுக்குமிடையே நிலவும் நீண்டகாலப் பகைமைக்கு இந்நிகழ்வே அடிப்படையாகியது.

ஹாசிம் ஒரு புகழ் பெற்ற வர்த்தகர். மாரியில் யெமனுக்கும் கோடையில் சிரியாவுக்குமான வர்த்தகக் கரவன்களைக் கொண்டு செல்லும் மரபை இவரே ஏற்படுத்தினார். இவரது காலத்தில் மக்காவில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தின் போது மக்காவாசிகளுக்கு இலவச உணவு வழங்கினார். வர்த்தகத்துக்குச் செல்லும் வழியில் மதீனாவில் வைத்து, பனூ நஜ்ஜார் கோத்திரப் பெண்ணான "ஸலாமா" என்பவரால் ஈர்க்கப்பட்டதால் அவரை விவாகம் புரிந்தார். இவ்விவாகத்தின் பின், சிரியாவுக்கு வர்த்தகத்துக்காகச் சென்ற போது, கி.பி. 510 இல் அங்கு காலமானார். இவருக்கு சலாமா மூலமாக ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு "சைபா" என்று பெயரிட்டனர். ஹாசிமின் சகோதரர் முத்தலிப் என்பவர் இதனைக் கேள்விப்பட்டு மதீனாவுக்குச் சென்று, எட்டு வயதை எட்டியிருந்த சைபாவை மக்காவுக்கு அழைத்துவந்தார். இந்த சைபா என்பவர்தான் வரலாற்றில் அப்துல் முத்தலிப் என்றழைக்கப்படுகின்றார்.

அப்துல் முத்தலிப் இறைத்தூதரின் பாட்டனார் ஆவார். அவர் ஒரு கொடைவள்ளல். ஏழைகளுக்கு மட்டுமன்றி, பறவைகட்கும் மிருகங்களுக்கும் உணவையும் தானிய வகைகளையும் வழங்கினார். இதனால் அவர் "முத்இமுத் தயர்" என்றழைக்கப்பட்டார். தனது இறுதிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காலப் பகுதியில் சிலைகளுக்கு வணக்கம் செலுத்துவதைத் தவிர்த்து வாழ்ந்தார். சிறுவராக இருந்த முகம்மது (ஸல்) அவர்களை இவரே பராமரித்து வந்தார். தூர்ந்து போயிருந்த "ஸம்ஸம்" கிணற்றைக் கண்டுபிடித்து, மீண்டும் தோண்டியமை அவரது மிகப் பெரிய பணியாகும். இக்கிணற்றைக் கண்டு பிடித்துத் தோண்டும் பாக்கியம் தனக்குக் கிட்டினால், தனது ஆண்பிள்ளைகளில் ஒருவரை இறைவனுக்குப் பலியிடுவதாக நேர்ச்சை வைத்திருந்தார். இதனை நிறைவேற்றுவதற்காக க:.பாவில் "காஹினின்" துணையை நாடினார். அவர் அதிர்ஷ்ட அம்பை எடுத்தபோது, முகம்மது (ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ்வின் பெயர் அதிற் குறிப்பிடப்பட்டிருந்தது. அதனால் அப்துல் முத்தலிப் அப்துல்லாஹ்வைப் பலியிட, ஸம்ஸம் கிணற்றருகே இருந்த "இஸாப்", "நாஇலா" எனும் இருசிலைகளுக்கிடையே கொண்டு சென்றபோது, அவரது சகோதரிகள் அழுது புலம்பினார்கள். நரபலியிடும் மரபை இது ஊக்குவிக்கும் என்பதால் அப்துல்லாஹ்வைப் பலியிடுவதை சமூகத்தின் சிலரும் ஆதரிக்கவில்லை. அதனால் அவர்கள் மாற்று வழி பற்றிச் சிந்தித்தனர்.

அப்துல் முத்தலிப் எதிரிபில் வாழ்ந்த தெய்வீக ஈடுபாடும் பக்தி சிரத்தையுமுடைய ஒரு பெண்மணியிடம் ஆலோசனை கேட்டார். அவள் மக்காவில் ஒருவருக்கு வழங்கும் நட்டஈட்டுத் தொகை யாதென்று வினவ, பத்து ஒட்டகை என்று பதிலளித்தார். அதனைச் செவிமடுத்த அப்பெண், நீங்கள் மக்காவுக்குச் சென்று, ஓர் அம்பில் அப்துல்லாஹ்வின் பெயரையும், மறு அம்பில் பத்து ஒட்டகை என்றும் குறித்து உங்கள் தெய்வத்தின் முன்நிலையில் அதிர்ஷ்ட அம்பை எடுங்கள். அப்துல்லாஹ்வின் பெயர் குறிப்பிடப்பட்ட அம்பு வரின், ஒட்டகையின் எண்ணிக்கையை பத்துப் பத்தாக அதிகரியுங்கள் என்றார். இவ்வாறு அதிர்ஷ்ட அம்பை எடுத்த போது, ஆரம்பத்தில் அப்துல்லாஹ்வின் பெயரே தொடர்ந்து வந்ததால் நூறு ஒட்டகை வரை ஒட்டகையின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியேற்பட்டது. அதன் பின் அதிர்ஷ்ட அம்பை எடுத்த போது, நூறு ஒட்டகை என்ற தெரிவு கிடைத்தது. இதனால் திருப்தியடையாத அப்துல் முத்தலிப், மீண்டும் மீண்டும் அதிர்ஷ்ட அம்பை எடுத்தார். மூன்று முறையும் நூறு ஒட்டகை என்ற முடிவே கிடைத்ததால் அப்துல் முத்தலிப் திருப்தியடைந்து நூறு ஒட்டகைகளைப் பலியிட்டார். இத்தகவலை வாகிதி எனும் ஆரம்ப கால வரலாற்றாசிரியர் குறித்துச் சென்றுள்ளார். இப்னு இஸ்ஹாக் எனும் வரலாற்றாசிரியர் தரும் தகவலின்படி, மக்காவின் மேன்மக்கள் கூடிக் கலந்துரையாடி, நூறு ஒட்டகைகளைப் பலியிடுமாறு ஆலோசனை நல்கியதற்கு ஏற்ப, அப்துல்லாஹ்வுக்குப் பதிலாக நூறு ஒட்டகைகள் பலியிடப்பட்டன என்றறிய முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அப்துல் முத்தலிபுக்கு பத்து ஆண் பிள்ளைகளும் ஆறு பெண்பிள்ளைகளும் இருந்தனர். இவர்களில் முகம்மது (ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ், அபூதாலிப், சுபைர் ஆகிய மூவரும் பாத்திமா எனும் பெண்ணுக்குப் பிறந்தவர்களாவர். அப்பாஸ் (றழி), ழிறார் எனும் இருவரும் நதிலா எனும் பெண் மூலமும், ஹம்ஸா (றழி), மகூம் எனும் இருவரும் ஹாலா பின்த் வஹப் மூலமும், அபூலஹப் என்பவர் லுப்னா எனும் பெண் மூலமும், கய்தாக் என்பவர் மம்னஆ எனும் பெண் மூலமும் பிறந்தவர்களாவர். இவர்களில் அப்துல்லாஹ் என்பவரே வயதில் மிகவும் இளையவர்.

அப்துல்லாஹ்வுக்கு 24 வயதான போது, அவரைக் கூட்டிக் கொண்டு அப்துல் முத்தலிப் யத்ரிபுக்கு சென்றார். அங்கு வஹப் இப்னு அப்துல் மனாப் இப்னு ஸுஹ்றா என்பவரது மகள் ஆமினாவை அப்துல்லாஹ்வுக்கு விவாகம் செய்து வைத்தார். அறேபியர் மரபின்படி மூன்று தினங்கள் வரை மனைவியின் வீட்டில் தங்கிய பின், அப்துல்லாஹ் தன் மனைவியைக் கூட்டிக் கொண்டு மக்கா வந்தார். சில தினங்களின் பின் சிரியா சென்ற வர்த்தகக் குழுவுடன் அப்துல்லாஹ்வும் வர்த்தகத்தில் சென்றார். மீண்டு வரும் வழியில் நோயுறவே யத்ரிபில் தங்கினார். சில தினங்களில் அவர் அங்கு இறந்தார். பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த நாபி.்கா என்பவரின் வளவில் அடக்கம் செய்யப்பட்டார். அப்போது அவரது மனைவி ஆமினா கருவுற்றிருந்தார். அப்துல்லாஹ் ஐந்து ஒட்டகைகளையும், ஆட்டு மந்தை ஒன்றையும், உம்மு ஐமன் எனும் அடிமைப் பெண்ணையும் விட்டுச் சென்றார். அவர் விட்டுச் சென்ற சொத்துக்கள் அவர் ஒரு செல்வந்தர் என்று கருத இடமளிக்கவில்லை. ஆயினும் அவர் உழைக்கும் திறனுள்ள ஒரு வாலிபர். அவரது தந்தை உயிர் வாழ்ந்ததால் அவரது சொத்தின் பாகம் அப்துல்லாஹ்வுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யானை ஆண்டு

யெமன் பிரதேசத்தைப் பரிபாலித்த அப்ராஹாஅல் அஷ்ரம் என்பவன், தன் குடிமக்கள் க∴பாவைத் தரிசிக்கச் செல்வதைத் தவிர்க்கும் நோக்குடன், தலைநகர் ஸன்ஆவில் கட்டப்பட்டிருந்த கும்டான் எனும் புகழ் பெற்ற கட்டடத்துக்கருகே "குல்லைஸ்" என்ற ஆடம்பர ஆலயத்தைக் கட்டி அலங்கரித்தான். க∴பாவுக்குச் செல்வதைத் தவிர்த்து அவ்வாலயத்துக்கு வருமாறு அறேபியருக்கு அழைப்பு விடுத்தான். இருந்த போதும், யெமனியர் உட்பட அறேபியர் எவரும் க∴பாவைத் தரிசிப்பதைத் தவிர்க்கவில்லை; குல்லைஸ் ஆலயத்துக்கு வரவும் இல்லை. இதனால் ஆத்திரம் அடைந்த அப்ரஹா, க∴பாவை உடைத்து எறிவதே, தான் கட்டிய கோயிலுக்கு மக்களை ஈர்க்க உள்ள ஒரே வழி என்று கருதினான். அதற்காக, தன் படையை மக்காவை நோக்கிக் கொண்டு சென்றான். அப்படையில் மஹ்மூத் என்று பெயர் சூட்டப்பட்ட ஒரு யானையுடன் மொத்தம் பதின்மூன்று யானைகள் இருந்தன. இதனால் அப்படை யானைப்படை என்றழைக்கப்பட்டது. இப்படையை எதிர்த்து யெமனைச் சேர்ந்த சஹ்ரான் கோத்திரத்தவரான தூநபார் என்பவரும், நாஹிஸ் கோத்திரவரான நுபைல் இப்னு ஹலீம் என்பவரும் தம் ஆயுத பலம் கொண்டு கடுமையாகப் போராடிய போதும், அவ்விருவரையும் அப்ரஹா கைது செய்து சிறை செய்தான். அப்ரஹாவின் படை தாயிபை அடைந்த போது, அப்படை தம் கோயிலை உடைக்கக் கருதவில்லை என்பதால் அதனை எதிர்த்துப் போரிடாது, அவர்களின் வேண்டுகோளை ஏற்று, மக்காவுக்குச் செல்லும் பாதையை நன்கறிந்த வழிகாட்டி ஒருவரை தாயிப்வாசிகள் அவர்களுடன் அனுப்பிவைத்தனர். மக்காவை அடைந்ததும் மக்காவாசிகளுக்குச் சொந்தமான ஒட்டகைகளையும் சில மந்தைகளையும் பிடித்துக் கொண்டனர். அவற்றில் அப்துல் முத்தலிபுக்குச் சொந்தமான ஒட்டகைகளும் மந்தைகளும் இருந்தன. அவற்றைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் அப்துல் முத்தலிப் அப்ரஹாவைச் சந்தித்த போது, தனது ஒட்டகைகளையும் மந்தைகளையும் தருமாறு கேட்டார். அப்ரஹா வியப்படைந்தான். தான் க∴பாவை உடைத்துத் தகர்த்தெறிய வந்ததை அறிந்த பின்னும், மக்காவின் தலைவர் அது பற்றிக் கவலைப்படாது, தனது மந்தைகளைப் பற்றிக் கவலைப்படுவது அவனை வியப்படையச் செய்தது. உமதும் உமது பெற்றோரதும் சமயத் தலைமைப் பீடத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உடைத்தெறிய வந்திருப்பதைப் பற்றிக் கவலைப்படாது, உமது ஒட்டகத்தைப் பற்றி ஏன் இவ்வளவு கரிசனை? என்று அப்ரஹா கேட்டான். ஒட்டகையின் எஜமான் தான் என்றும், க.:.பாவுக்கு ஓர் எஜமான் உண்டு; அவன் அதைப் பாதுகாத்துக் கொள்வான் என்றும் அப்துல் முத்தலிப் பதில் கூறிவிட்டுத் தனது உடைமைகளை மட்டும் மீட்டிக் கொண்டு வந்தார். அதன்பின் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறுமாறு குடிமக்களைக் கேட்டுக் கொண்டார்.

அப்ரஹா படையுடன் வந்து க.:.பாவைத் தகர்க்க முற்பட்ட போது, க.:.பாவின் எஜமானான அல்லாஹ் அபாபீல் எனும் பறவைகளை அனுப்பி, சிறு சிறு கற்களால் தாக்கச் செய்து, அப்பெரும் படையைப் புறங்காட்டச் செய்தான். பறவைகளின் தாக்குதலுக்குட்பட்ட அனைவரது உடலிலும் சின்ன முத்துக்கள் போன்ற கொப்புளங்கள் தோன்றின. அதன் விளைவாக பறவைகளின் தாக்குதலுக்குட்பட்டோர் மாண்டனர். அப்ரஹாவும் மீண்டு செல்லும் போது ஸன்ஆவின் எல்லையில் அந்நோய்க்குள்ளாகி மடிந்தான். இதனை அல்குர்ஆன் பின்வருமாறு மிக அழகாக எடுத்துக் காட்டியுள்ளது.

"(நபியே அப்ரஹாவின்) யானைப் படையினரை உமதிறைவன் எவ்வாறு (அழியச்) செய்தான் என்பதை நீர் (நினைத்துப்) பார்க்க வில்லையா. அவர்களுடைய சூழ்ச்சியை அவன் வீணாக்கிவிடவில்லையா. அவர்கள் மீது பட்சிகளை கூட்டங்கூட்டமாக அவன் அனுப்பி வைத்தான். (கெட்டியான) சுடப்பட்ட, சிறிய கற்களை அவை அவர்கள் மீது எறிந்தன. அதனால் (பட்சிகளால்) கொத்தித் தின்னப்பட்ட கதிர்களைப் போல் அவர்களை அவன் ஆக்கி (அழித்து) விட்டான்"

(105:1-5)

அல்லாஹ்வின் இந்த அற்புத ஆற்றல் மக்காவாசிகளை வியப்பில் ஆழ்த்தியது. இம்முக்கிய நிகழ்ச்சியை மையமாக வைத்து அவ்வாண்டை அறேபியர் "ஆமுல் பீல்" (யானை ஆண்டு) என்றழைத்தனர். அது முதல், அறேபியாவில் ஆண்டுக் கணிப்பு இந்நிகழ்ச்சியை மையமாக வைத்தே இடம் பெற்று வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறுவர் முகம்மது

யானை ஆண்டில் விதவை ஆமினா, அப்துல் முத்தலிபின் வீட்டில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக்குழந்தை பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பன பற்றி வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு உண்டு. எனினும் கி.பி. 570 க்குச் சரியான, யானை ஆண்டின் றபீஉல் அவ்வல் பிறை பன்னிரெண்டு திங்கட்கிழமை அக்குழந்தை பிறந்தது என்ற ஒரு பொதுக் கருத்து அங்கீகாரம் பெற்றுள்ளது. அப்துல் முத்தலிப் அக்குழந்தையை கஃபாவுக்குக் கொண்டு சென்று முகம்மத் என்று பெயர் சூட்டினார். குழந்தை பிறந்த ஏழாம் நாள் ஊர்ப் பிரமுகர்களையும் உறவினர்களையும் அழைத்து அப்துல் முத்தலிப் விருந்து படைத்தார்.

ஆரம்பத்தில் அக்குழந்தைக்கு மூன்று அல்லது ஏழு தினங்கள் தாய் ஆமினா பாலூட்டினார். அதன் பின் அபூலஹபின் அடிமைப் பெண் சுவைபதுல் அஸ்லமிய்யா பாலூட்டினார். அக்காலப் பகுதியில் கண்ணியமிக்க குடும்பத்தவர்கள் தம் குழந்தைகளைப் பாலூட்டுவதற்காக நாட்டுப்புறப் பெண்களிடம் ஒப்படைக்கும் மரபு இருந்தது. அங்கு அக்குழந்தைகள் எட்டு அல்லது பத்து வருடங்கள் வரை வளர்க்கப்படுவர். இம்மரபை அடியொட்டி குழந்தை முகம்மது அவர்களும் ஸஃதிய்யாக் கோத்திரத்தைச் சேர்ந்த ஹலீமா எனும் பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டார். அக்குழந்தை ஹலீமாவிடம் ஆறு வருடங்கள் வளர்ந்ததாக இப்னு இஸ்ஹாக் குறிப்பிட்டுள்ளார். முகம்மது (ஸல்) அவர்களுக்கு பாற்குடிச் சகோதரர் ஒருவரும் சகோதரியர் மூவரும் இருந்தனர். அச்சகோதரர் பெயர் அப்துல்லாஹ் என்பதாகும். பாற்குடிச் சகோதரியர் பெயர்களாவன அனீசா, ஹுதைபா, ஹுதாபா என்பனவாகும். இப்பின்னையவருக்கு சைமா என்ற பெயரும் வழங்கியது. அப்துல்லாஹ்வும் சைமாவும் பிற்காலத்தில் இஸ்லாத்தை ஏற்றனர். ஹலீமாவுடன் கிராமப்புறத்தில் வாழ்ந்த காலத்தில், சிறுவர் முகம்மத் பாலைவனத்தின் தூய அறபு மொழியையும் அங்கிருந்து கற்றுக்கொண்டார். ஹலீமாவின் குடும்பத்தினர் மீதான ஆழ்ந்த அன்பும் பற்றும் அவரிடம் இருந்தன. முகம்மது (ஸல்) கதீஜாவை விவாகம் புரிந்த பின் ஏற்பட்ட பஞ்ச காலத்தில், ஹலீமா முகம்மது (ஸல்) அவர்களைக் காண வந்தபோது, நாற்பது பசுக்களையும் ஓர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒட்டகையையும் அன்பளிப்பாக வழங்கினார்கள். ஹலீமா தன்னைச் சந்திக்க வந்தபோதெல்லாம், அவர் அமருவதற்காகத் தனது சால்வையை விரித்துக் கொடுத்தார்கள்.

சிறுவர் முகம்மதின் ஆறாவது வயதில், தாய் ஆமினா பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த தனது உறவினரைக் காணபிப்பதற்காக அவரை யத்ரிபுக்குக் கூட்டிச் சென்றார். அங்கு ஒரு மாதம் தங்கி, மீண்டு வரும் வழியில், "அப்வா" எனும் இடத்தில் 30 வயதையடைந்திருந்த தாய் ஆமினா நோயுற்று இறந்ததால் அங்கே அடக்கம் செய்யப்பட்டார்கள். அப்வா எனும் இடம் மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள ஒரு கிராமம். அல்ஜுஹ்பா எனும் இடத்திலிருந்து 23 மைல் தூரத்தில் உள்ளது. உடன் சென்றிருந்த அடிமைப் பெண் உம்மு ஐமன், சிறுவர் முகம்மதைப் பத்திரமாகக் கூட்டிவந்து, பாட்டனார் அப்துல் முத்தலிபிடம் ஒப்படைத்தார். தாயின் மரணத்துடன் சிறுவர் முகம்மது, தான் ஓர் அநாதை என்பதை உணர ஆரம்பித்திருப்பார் எனலாம். அவரது அநாதை நிலை பற்றி அல்குர்ஆன் பின் ஒரு சந்தர்ப்பத்தில் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளது.

> "அநாதையாக உம்மைக் கண்ட அவன் (உமக்கு) தங்குமிடமளி(த்து ஆதரி)க்கவில்லையா? திகைத்துத் தயங்கியவராக உம்மைக் கண்ட அவன் நேரான வழியில் (உம்மைச்) செலுத்தினான்"
>
> (93:6-7)

தன் தாயை இழந்த அநாதைச் சிறுவர், அது முதல் தன் பாட்டனாரான அப்துல் முத்தலிப் அவர்களிடம், தனது எட்டாம் வயது வரை வளர்ந்தார். அப்துல் முத்தலிப் அவரை அன்பாகவும் ஆதரவாகவும் அரவணைத்து வளர்த்தார். அவர் மரணிப்பதற்கு முன்பு சிறுவர் முகம்மதைப் பராமரிக்கும் பொறுப்பை அபூதாலிபிடம் ஒப்படைத்தார். அபூதாலிபும், முகம்மது (ஸல்) அவர்களின் தந்தை அப்துல்லாஹ்வும் ஒரே தாய்க்கு, அப்துல் முத்தலிப் மூலம் பிறந்தவர்கள் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும். அப்துல் முத்தலிப் மரணித்ததும் அடக்கம் செய்யப்படும் வரை சிறுவர் முகம்மது தொடர்ந்து அழுது கொண்டே இருந்தார். அப்துல் முத்தலிபின் மரணத்தின் பின் மக்காவின் தலைமைப் பொறுப்பு அபூதாலிபை அடைந்தது.

அபூதாலிப் பொருள்வளம் உடையவரல்லர். பொருள் வளம் கொண்டிருந்த அப்பாஸ் போன்றவர்கள் உலோபிகளாக இருந்தனர். இதனால் அப்துல் முத்தலிபின் மரணத்தின் பின் ஹாசிமிக் கிளையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆதிக்கம் குறைசியரிடையே படிப்படியாகக் குறைந்தது. மக்காவின் பரிபாலனப் பொறுப்பில், ஹஜ்ஜுக்கு வருவோருக்கு நீர் வழங்கல் (ஸிகாயா) பொறுப்பை அப்பாஸ் ஏற்ற போதும், ஏனைய அனைத்துப் பொறுப்புகளும் நீண்ட காலத்தின் பின் உமையாக் கிளையைச் சேர்ந்த ஹர்பு இப்னு உமையா என்பவரை அடைந்தது. இதனால் குறைசிக் கோத்திரத்தவர்களில் ஹாசிமிக்களிடம் இதுகாலவரை இருந்த தலைமைத்துவம் படிப்படியாக உமையாக்கள் வசம் கைமாற ஆரம்பித்தது.

அபூதாலிப் ஏழையான போதும் கண்ணியமானவர்; தாராள மனப்பாங்குடையவர். சிறுவர் முகம்மதை தன் பிள்ளைகளை விடவும் ஆதரித்து அரவணைத்தார். சிறுவர் முகம்மதின் தேவைகளைக் கவனிப்பதில் அதிக அக்கறை காட்டினார். அன்றைய அறேபியர்களின் நடைமுறையைப் பின்பற்றி, சிறுவர் முகம்மது அவர்களும் தன் ஒன்றுவிட்ட சகோதரர்களுடன் சென்று, அபூதாலிபின் ஆடுகளை மேய்த்து வந்தார். அக்கால அறேபியர்களின் பெரும் சொத்து மந்தைகள் என்பதால், ஆடு மேய்த்தல் என்பது அன்றைய சமூகத்தில் குறைவாக மதிக்கப்படவில்லை. சிறுவர் முகம்மது இளமை முதலே பிறருக்குச் சுமையாக இருக்க விரும்பாததால், மந்தை மேய்ப்பதில் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு மனநிறைவு கொண்டார். அக்கால மக்காவில் எழுத, வாசிக்கக் கற்பது செல்வாக்குப் பெற்ற ஒரு மரபாகவோ, காலத்தின் தேவையாகவோ இருக்கவில்லை. சிறுவர் முகம்மதும் எழுத, வாசிக்கக் கற்கவில்லை.

அபூதாலிப் சிரியாவுக்கு வர்த்தகத்துக்காகச் சென்றபோது, பன்னிரெண்டு வயதை அடைந்திருந்த முகம்மது (ஸல்) அவர்களும் உடன் சென்றார்கள். சிரியாவின் தென்பகுதியை அடைந்த போது, புஸ்ரா எனும் இடத்தில் வாழ்ந்த பஹிரா என்னும் மதகுரு, கிறிஸ்தவ மத நூல்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள, எதிர் காலத்தில் தோன்றவுள்ள இறுதி நபிக்குரிய அடையாளங்கள் சிறுவர் முகம்மதிடம் இருப்பதை அவதானித்தார். அச்சிறுவருக்கு மேகம் நிழல் கொடுத்ததையும், மரக்கிளைகள் வளைந்து கொடுத்ததையும் அவர் அவதானித்தார். இதனால் அம்மதகுரு இளைஞர் முகம்மதை அழைத்து, கௌரவித்து, விருந்தளித்து உபசரித்தார். விருந்து வைபவத்தின் போது நுபுவ்வத்தின் அடையாளம் முதுகுப் புறத்தில் இருப்பதை அவதானித்தார் என்றும், யூதர்களின் அபாயம் இருப்பதால் சிறுவர் முகம்மதை மக்காவுக்கு அழைத்துச் செல்லுமாறு அபூதாலிபுக்கு ஆலோசனை வழங்கினார் என்றும் சீரத் இப்னு ஹிசாம், தாரிக் அத்தபரி, தபகாத் இப்னு ஸஅத் முதலாம் ஆரம்பகால வரலாற்று நூல்கள் மூலம் அறிய முடிகிறது. இச்சம்பவம் பற்றிக் கூறும் ஹதீஸின் "இஸ்னாது" நம்பத்தக்கதல்ல என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வரலாற்றாசிரியரான சிப்லி நு்.மானி கருதுகின்றார். இப்னு கையூம் என்பவரும் இதன் இஸ்னாத் பலவீனமானது என்றே கருதுகின்றார்.

கீழைத்தேய வரலாற்றாசிரியர்களான ஸர் வில்லியம், முய்ர், டிரபர், மாகோலியத் என்போர் இச்சம்பவத்துக்கு அதிக அழுத்தம் கொடுத்து நோக்குவர். முகம்மது (ஸல்) தனது தூதின் அடிப்படைக் கோட்பாடுகளை இம்மதகுருவிடமிருந்து கற்றார் என்று இச்சம்பவத்தினூடாக நிறுவ கீழைத்தேய ஆராய்ச்சியாளர்கள் முயற்சிக்கின்றனர். பன்னிரண்டு வயதுச் சிறுவர் ஒருவர் விருந்து ஒன்றின் போது தனக்குப் போதிக்கப்பட்ட செய்தியை அடிப்படையாக வைத்து, உலகளாவிய பசுமைப் புரட்சியை ஏற்படுத்தக் கூடிய தூது ஒன்றை, இருபத்தெட்டு வருடங்களின் பின் முன்வைத்தார். என்ற செய்தியை நடுநிலை நீங்காது நோக்குவோர் ஏற்கமாட்டார்.

இப்பிரயாணத்தின் மூலம் முகம்மது (ஸல்), தான் சிரியாவுக்குச் சென்ற பாதையில் வாழ்ந்த மக்கள், அவர்களின் வாழ்க்கை முறை, சமூக நம்பிக்கை, சம்பிரதாயங்கள் என்பன பற்றி மேலெழுந்தவாரியான அறிமுகத்தைப் பெற்றிருக்க முடியும். மக்கா - சிரியா வர்த்தகப் பாதை பற்றிய அறிவையும், வர்த்தக அனுபவத்தையும், அதில் உள்ள சிரமத்தையும் அறிந்திருக்கக் கூடும்.

சிரியாவுக்கு சென்ற வர்த்தகக் கரவனில் பங்கு கொண்ட அபூதாலிப் குறிப்பிடத்தக்க இலாபத்தை பெறாததால், அதன் பின் அவர் சிரியாவுக்குச் செல்லவில்லை. மக்காவில் தொழில் புரிந்தார். இளைஞர் முகம்மது அபூதாலிபுடன் மக்காவில் தங்கியிருந்தார். மக்காவின் ஏனைய வாலிபர்களைப் போலவே அச்சூழலில் கிடைத்த பல்வேறு அம்சங்கள் பற்றிய அறிவை அவர் பெற்றிருப்பார். கண்ணியமிக்க மாதங்களில் இடம்பெற்ற வர்த்தகச் சந்தை நடவடிக்கைகள், அங்கு இடம் பெற்ற இலக்கிய அரங்குகள் மூலம் வளர்ந்த மொழிவளம், பேச்சாற்றல், முன்னோர்களின் வீரதீரச் செயல் பற்றிய அறிவு முதலானவை பற்றியெல்லாம் அவர் அறிந்திருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஹர்புல் பிஜார்

போர் செய்வது மரபு ரீதியாகத் தடை செய்யப்பட்டிருந்த கண்ணியமிக்க மாதங்களில் ஒன்றான துல்க.்.தா மாதத்தில் இந்த யுத்தம் நடைபெற்றது. இதன் காரணமாக ஹர்புல் பிஜார் என்று இந்த யுத்தம் அழைக்கப்பட்டது. ஹிராவின் மன்னர் அந்நு.்.மான் பின் முன்திர் வருடந்தோரும் உக்காழ் சந்தைக்கு வர்த்தகத்துக்காகப் பொருட்களை அனுப்புவது வழக்கம். குறித்த வருடம் தனது பொருட்களுக்குப் பாதுகாப்பு வழங்கி வழிகாட்ட வல்ல ஒருவரைத் தேடிய போது, பற்றாத் அல்கைஸ் அல்கினானி என்பவரும், உர்வா அல் ஹவாதினி என்பவரும் அப்பணியைப் புரிய முன்வந்தனர். நு.்.மான் பின்னையவரைத் தெரிவு செய்ததால் பற்றாத் பொறாமையுற்று, வர்த்தகக் கரவனைத் தொடர்ந்து வந்து, உர்வாவைக் கொலை செய்து, வர்த்தகக் கரவனையும் சூறையாடிச் சென்றார். இக்குற்றச் செயல் குறைசியரின் ஆள்புல எல்லையில் நடைபெற்றதால் ஹவாதீன்கள் பழிக்குப்பழி வாங்க முனைந்து குறைசியருடன் போரிட்டனர். இப்போர் நான்கு வருடங்களாக நீடித்தது. ஈற்றில் இரு குழுக்களும் பாலைவன மரபை அடியொட்டி சமாதானம் செய்து கொண்டனர். குறைந்த உயிரிழப்பைக் கொண்ட குழு தம்மில் இறந்தோரை விட அதிகமாக இறந்த மறு குழுவின் வீரர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நஷ்டஈடு வழங்குவது பாலைவன மரபாகும். இவ்வழிமுறைக்கு ஏற்ப ஹவாதீன்கள் இருபது பேருக்கு குறைசியர் நஷ்டஈடு வழங்கினர்.

ஹர்புல் பிஜார் போர்த் தொடரின் இறுதிப் போர் நடைபெறும் போது முகம்மது (ஸல்) அவர்களுக்கு வயது பதினைந்தாகும். குறைசிக் குலத்தின் ஒவ்வொரு கோத்திரத்தினரும் இப்போரில் பங்கு கொண்டனர். ஹாசிமிக்களின் கொடியைத் தாங்கி முகம்மது (ஸல்) அவர்களின் பெரிய தந்தையருள் ஒருவரான ஸுபைர் இப்னு அப்துல் முத்தலிப் சென்றார். அவரது அணியில் முகம்மது (ஸல்) இடம்பெற்றிருந்தார்கள். குறைசியர் படையணியின் தளபதியாக அபூசுப்யானின் தந்தையான ஹர்பு பின் உமையா கடமையாற்றினார். இப்போர் அணியில் முகம்மது (ஸல்) பங்கு கொண்ட போதும், அவர் எவரையும் எதிர்த்து ஆயுதம் பிரயோகிக்கவில்லை. எனினும் தம் பக்கம் வந்து விழும் அம்புகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொறுக்கிக் கொடுக்கும் பணியையே அவர் மேற்கொண்டார் என்று கூறுவர். முகம்மது (ஸல்) வாலிபப் பருவத்தில் இருந்ததால் போரிடும் ஆற்றல் பெற்றிருந்தார். தான் இப்போரில் அபூதாலிபுடன் கலந்து கொண்டதாகவும், சில அம்புகளைப் பகைவர்கள் மீது தொடுத்ததாகவும், அவ்வாறு செய்யாதிருந்திருக்கலாம் என்று தற்போதுதான் கருதுவதாகவும், நபித்துவம் கிடைத்த பின் இப்போர் பற்றி ஒரு தினம் கலந்துரையாடும் போது குறிப்பிட்டதாக தபகாதுல் குப்றா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஹில்புள் புளூல்

ஹிசாம், அப்துல் முத்தலிப் முதலாம் குறைசித் தலைவர்களால் மக்காவில் வம்புகளைக் குறைத்து அமைதியை நிலைநாட்ட முடிந்த போதும், அவர்களின் பின் அமைதிநிலை நீடிக்கவில்லை. யுத்த தினங்களில் மட்டுமன்றி, சாதாரண காலங்களிலும் வறியவர்களையும், சாதாரண குடிமக்களையும் வம்பர்கள் துன்புறுத்தலாயினர்; அவர்களின் பொருள்களைக் கொள்ளையடித்தனர். ஹர்புல் பிஜார் யுத்தம் சமாதானமாக முடிவுற்று நான்கு மாதங்கள் கழிந்த நிலையில், யெமனின் ஸபீத் நகரில் இருந்து ஒருவன் தன் பொருட்களை விற்க மக்காவுக்கு வந்தான். குறைசிக் கோத்திரத் தலைவர்களில் ஒருவராகக் கருதப்பட்ட அல் ஆஸ் பின் வாயில் என்பான் அவனது அனைத்துப் பொருட்களையும் விலை பேசி வாங்கிக் கொண்டு, பணத்தைக் கொடுக்கவோ, அன்றேல் பொருட்களைத் திருப்பிக் கொடுக்கவோ மறுத்தான். மக்காவின் முக்கிய தலைவர்களிடம் நிவாரணம் கோரிய போது, அவனுக்கு உதவி செய்ய ஒருவரும் முன்வரவில்லை. இதனால் ஒரு தினம் காலைப் பொழுதில் அம்மனிதன் மக்காவாசிகளின் மரபுக்கியைய அபீ குபைஸ் மலையில் ஏறிச் சத்தமிட்டு, தனக்கிழைக்கப்பட்ட கொடுமைக்கு நியாயம் கோரினான்.

கொடுமைக்குள்ளான இம்மனிதனின் குரல் சுபைர் பின் அப்துல் முத்தலிபின் உள்ளத்தைத் தொட்டது. அதனால் ஹாசிம் கோத்திரத்தவரை அப்துல்லாஹ் பின் ஜுத்ஆன் என்பவரது வீட்டில் அவர் ஒன்று திரட்டினார். இவ்வொன்றுகூடலில் பனூ ஹாசிம், பனூ சுஹ்ரா, பனூ தாஇப் கோத்திரப் பிரதிநிதிகள் பங்கு கொண்டனர். கொடுமைக்குள்ளானவருக்கு ஆதரவாக நின்று அவரது இழப்புக்கு ஈடு செய்யப்படும் வரை அநியாயம் செய்தவருக்கு எதிராகப் போரிடுவதாகவும், மக்காவில் அநியாயங்கள் இழைப்பதற்கு அனுமதியில்லை என்றும் அவர்கள் உறுதி பூண்டு, ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். இவ்வுடன்படிக்கை “ஹில்புல் புளூள் என்றழைக்கப்படுகிறது. இவ்வுடன்படிக்கையில் பங்கு கொண்ட முக்கிய நபர்கள் சிலரின் பெயர்கள் பழ்லு என்ற பதத்தையும் உள்ளடக்கியதாக இருந்ததால், இவ்வுடன்படிக்கை ஹில்புள் புளூள் என்றழைக்கப்பட்டது என்பர். இவ்வுடன்படிக்கைகளில் பங்கு கொண்டோர் ஆஸ் பின் வாயிலைச் சந்தித்து, யெமன் வாசியின் வர்த்தகப் பண்டங்களைப் பெற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொடுத்தனர். இவ்வுடன்படிக்கையில் இளைஞர் முகம்மது (ஸல்) அவர்கள் பங்கு கொண்டது மட்டுமன்றி, அதன் உருவாக்கத்திற்கும் கடுமையாக உழைத்தார்கள். தனக்கு நபித்துவம் கிடைத்த பின்பும் முகம்மது (ஸல்) அவர்கள் இவ்வுடன்படிக்கையைப் பாராட்டியுள்ளார்கள். இத்தகையதோர் உடன்பாட்டுக்குத் தான் மீண்டும் அழைக்கப்பட்டால், அவ்வழைப்புக்குச் சார்பாகவே நடந்து கொள்வேன் என்று அவர்கள் குறிப்பிட்டமை நோக்கத் தக்கதாகும்.

28 JUN 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அல் அமீன்

ஹிஜாஸ் பகுதிகளில் அடிக்கடி சண்டைகள் நடந்த போதும், அவர்களிடையே பகைமை சில தினங்கட்கே நீடித்தது. குறித்த தினத்தில் முடிவு காணாத போர், மறு வருடம் குறித்த ஒரு தினத்தில் இடம்பெறும். ஏனைய தினங்களில் வாழ்க்கை சாதாரண நிலைக்குத் திரும்பிவிடும். இத்தினங்களில் அறேபியர் தமது வழக்கமான வாழ்க்கைப் போக்குக்கு ஏற்ப, வர்த்தகத்திலும், மதுவருந்துவதிலும், வேட்டையாடுவதிலும், பெண்களோடு பொழுதை உல்லாசமாகக் கழிப்பதிலும் ஈடுபடுவர். இத்தகைய உல்லாச வாழ்க்கைப் போக்கு அன்றைய அறேபிய சமூகத்தின் பாராட்டப்படும் மரபாக இருந்தபோதும், இளைஞர் முகம்மது அத்தகைய வாழ்க்கையில் ஈடுபடாமல் ஒதுங்கியே வாழ்ந்தார். அபூதாலிபின் வறுமை நிலையும், அவரின் பாதுகாப்பில் இளைஞர் முகம்மது வாழ்ந்தமையும் உல்லாசப் பொழுது போக்கில் ஈடுபடாமைக்கான காரணங்கள் அல்ல. மாறாக அவரது உள்ளம் உண்மைகளை அறிவதிலும், வாழ்க்கை நிகழ்வுகள் ஊடாக அறிவைப் பெறுவதிலும் அதிக ஆர்வம் கொண்டிருந்தது. அதனால் ஒழுக்கக் கேடுகளிலும் துர்நடத்தைகளிலும் ஈடுபாடு கொள்ள விரும்பவில்லை. அன்றைய அறேபிய வாலிபர்களின் மனப்போக்கிற்கும், வாழ்க்கைப் போக்கிற்கும் மாற்றமாகவே வாழ்ந்தார்கள். ஆதலால் அவரது நடத்தைகள் தூயதாகவும் கண்ணியமானவையாகவும் இருந்தன.

சிறுவர் முகம்மது வாலிபராக வளர்ந்த பின் உறவினருக்குச் சுமையாக வாழ விரும்பவில்லை. ஆதலால் கூலிக்கு மந்தை மேய்ப்பதிலும், பின் வர்த்தகத்திலும் ஈடுபட்டார்கள். அபூதாலிபிடம் இவ்விரு துறைகளிலும் இளமையிலே அவர்கள் ஓரளவு பயிற்சியையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் உண்மை பேசுபவராகவும், நம்பிக்கை, நியாயம் என்பனவற்றைப் பேணுபவராகவும், வர்த்தக நடவடிக்கைகளின் போது நடந்து கொண்டதுடன், வர்த்தகப் பண்டங்கள் பற்றி தவறான தகவல்கள் வழங்குவதையும் முற்றாகப் புறக்கணித்தார்கள். வர்த்தகத்தில் மட்டுமன்றி, வாழ்வின் சகல துறைகளிலும் திறந்த உள்ளத்துடனும், நேர்மையுடனும், வாக்கு மாறாமலும் நடந்து கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒருமுறை முகம்மது (ஸல்) அவர்கள் ஒட்டகைகள் சிலவற்றை ஓர் அறபிக்கு விற்றார்கள். அவ்வறபி ஒட்டகைகளுடன் சென்ற பின், அவ்வொட்டகைகளுள் ஒன்று நொண்டி என்பது ஞாபகம் வந்ததும் உடனடியாக குதிரை ஒன்றில் ஏறி அவனை அடைந்து, நொண்டி ஒட்டகத்தைப் பெற்றுக் கொண்டு, அதற்காக ஏற்கனவே பெற்றிருந்த பணத்தைத் திருப்பிக் கொடுத்தார்கள். அவரிடம் இத்தகைய அழகிய செயற்பாடும், கடமையுணர்வும், உண்மை பேசும் பண்பும் இருந்ததன் காரணமாக, மக்கள் அவரை அஸ்ஸாதிக் (உண்மை பேசுபவர்), அல் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்று அழைக்கலாயினர்.

அக்காலப்பகுதியில் அறேபியர் நம்பிக்கையுடையோரிடம் தம் செல்வத்தை வர்த்தகத்துக்காக வழங்கி, அவர்கள் ஈட்டும் இலாபத்தில் ஒரு குறித்த பகுதியைப் பெற்றுக் கொள்ளும் மரபு இருந்தது. இம்மரபை அடியொட்டி, வாலிபர் முகம்மது (ஸல்) அவர்களிடமும் அவர்கள் தம் செல்வத்தை ஒப்படைத்தார்கள். அவர்கள் அதனைப் பெற்று, வர்த்தகம் செய்து, மிகவும் நாணயமாக நடந்து கொண்டார்கள். நுபுவ்வத்துக்கு முன்பு இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளில் முகம்மது (ஸல்) அவர்களுடன் ஈடுபட்ட பலர், அவர்கள் இறைதூதை முன்வைத்த காலப்பிரிவில், அவர்களின் முன்னைய கால வர்த்தக நடவடிக்கைகளின் நேர்மையான நடத்தைகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்கள். அவ்வாறு பாராட்டியவர்களுள் கைஸ் இப்னு சாயிப், அப்துல்லாஹ் பின் அபூ அல் ஹவ்சா, ஹஸரத் ஸஅத் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமணம்

முகம்மது (ஸல்) அவர்களின் வர்த்தக நடவடிக்கைகள் மக்காவின் முக்கிய பிரமுகர்கள் பலருடன் அவருக்குத் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தன. அத்தகு பிரமுகர்கள் பலர் அவரது உயர் குணப் பண்புகளைப் பிரபல்யப்படுத்தினர். இவை மக்காவின் மிகப் பெரும் வர்த்தகப் பிரமுகராகிய கதீஜாப் பிராட்டியின் காதையும் எட்டின. இதன் காரணமாக, அவர் வாலிபர் முகம்மதுக்கு அழைப்பு விடுத்தார். தனது வர்த்தகப் பொருட்களை சிரியாவுக்குக் கொண்டு செல்லுமாறும், ஏனையோருக்குக் கொடுக்கும் இலாபப் பங்கு போல இருமடங்கு தருவதாகவும் அவரிடம் கூறினார். அதற்கு இணங்கி வாலிபர் முகம்மது சிரியாவுக்கு வர்த்தகத்துக்காகச் சென்றார். (கதீஜா தனது வர்த்தகக் கரவனை சிரியாவுக்குக் கொண்டு செல்ல ஆட்களை அமர்த்துகிறார் என்று கேள்விப்பட்ட அபூதாலிப் கதீஜாவிடம் சென்று, ஏனையோருக்கு வழங்குவது போல இரு மடங்கு கூலி தருவதாயின், வர்த்தகக் கரவனைக் கொண்டு செல்ல தன் சகோதரனின் மகனின் சேவையைப் பெற்றுத்தர முடியும் என்று கேட்டதாகவும், கதீஜா அதற்கிணங்கி வர்த்தகக் கரவனை ஒப்படைத்தார் என்றும் மற்றோர் அறிவிப்பின் மூலம் அறிய முடிகிறது).

முகம்மது (ஸல்) சிரியாவின் வர்த்தகத்தை முடித்துக் கொண்டு, மூன்று மாதங்களின் பின் திரும்பி வந்தார்கள். மக்காவுக்கு அருகேயுள்ள ஸஹ்ரான் எனும் இடத்துக்கு வந்ததும், உடன் சென்றிருந்த கதீஜாவின் அடிமைப் பெண் மைஸராவின் ஆலோசனைக்கிணங்க, முகம்மது (ஸல்) துரிதமாகச் சென்று, நடுப்பகல் அளவில் கதீஜாவின் வீட்டை அடைந்தார். கதீஜா அவரை வரவேற்று அளவளாவினார். வர்த்தகத்தை இலாபகரமாக முடித்த செய்தியையும், சிரியாவிலிருந்து கொண்டு வந்துள்ள வர்த்தகப் பண்டங்களைப் பற்றியும் தனக்கேயுரிய பாணியில் திறமையாக எடுத்துக் கூறினார்கள். இந்நிலையில் மைஸரா வந்து முகம்மது (ஸல்) அவர்களின் உயர் குணப்பண்புகள் பற்றியும், பிரயாணத்தின் போது நபிகளின் நிமித்தம் இடம் பெற்ற அற்புதங்கள் பற்றியும் எடுத்துக் கூறினார். தான் ஏற்கனவே அவர் பற்றிக் கேள்விப்பட்டிருந்த நற்பண்புகளை மைஸராவின் கூற்றுக்கள் உண்மைப்படுத்துவதைக் கதீஜா உணர்ந்தார். முகம்மது (ஸல்) அவர்களின் குணப்பண்புகள், தோற்றம், ஆற்றல், திறமைகள் என்பன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர் மீதான இயல்பான ஓர் அன்பைக் கதீஜாவின் உள்ளத்தில் தோற்றுவித்தன.

கதீஜா பின்த் குவைலித், நபிகளாரின் முன்னோர்களில் ஒருவரான குசையின் வழித்தோன்றலில் வந்தவர். கதீஜா ஒரு தனவந்தர். மக்காவாசிகளின் ஏனைய கரவன்களின் கூட்டு மொத்தத் தொகையின் பெறுமானத்தை அவரது வர்த்தகக் கரவன் கொண்டிருந்தது. கதீஜா ஆதிக் இப்னு ஆஇத் என்பவரையும், அபூஹாலா அந்நப்பாஷ் ம..தூமி என்பவரையும் ஒருவர் பின் ஒருவராக முன்பு விவாகம் புரிந்திருந்தார். முன்னையவர் மூலம் ஒரு குழந்தையையும், பின்னவர் மூலம் இரு குழந்தைகளையும் கதீஜா பெற்றெடுத்தார். விதவையாகிய பின் வர்த்தகத்தில் தனது முழுக் கவனத்தையும் செலுத்தினார். அறேபியப் பிரமுகர் பலர் அவரை விவாகம் செய்ய முன்வந்த போதும், தனது சொத்தின் மீது ஆசைப்பட்டே விவாகம் புரிய விரும்புகின்றனர் என்று கருதி, அவர்களின் கோரிக்கையை நிராகரித்தார். தனிமையாக வாழ்ந்த அவர் ஒழுக்க சீலமான வாழ்வை மேற்கொண்டார். இதனால் மக்காவாசிகள் அவரைத் தாஹிரா (தூய்மையயானவர்) என்றழைத்தனர்.

முகம்மது (ஸல்) அவர்களின் வர்த்தகக் கரவனுடன் சென்று மீண்ட மைஸரா, முகம்மது (ஸல்) அவர்கள் பற்றிக் கூறிய பல தகவல்கள் கதீஜாவைச் சிந்திக்க வைத்தன. முன்னைய வேதங்கள் பற்றி நன்கு அறிந்தவரும், தனது உறவினருமான வரகா பின் நவ்பலிடம் சென்று கதீஜா, மைஸரா கூறிய செய்திகளைச் சொன்ன போது, அவை உண்மை எனின், இவர் இச்சமூகத்தின் மீது அனுப்பப்படும் இறுதி நபியாவார் என்று சுட்டிக் காட்டினார். இது முகம்மது (ஸல்) அவர்கள் மீதான பற்றுதலை அதிகரிக்கச் செய்தது. அதன் விளைவாக, தனது சினேகிதியான நுபைசா பின்த் முன்யா என்பவரை முகம்மது (ஸல்) அவர்களிடம் அனுப்பி அவரது மனப்பாங்கை அறிய முயற்சித்தார். ஜாஹிலியாக் கால அறேபியாவில் பெண்கள் தாம் விரும்பும் ஆண்களைக் கணவராகத் தேடிப் பெற்றுக் கொள்ளும் சமூக மரபு இருந்ததால்தான், கதீஜா தனது குடும்பத்தவரின் துணை நாடாது, தானாக ஒருவரைத் தூதராக அனுப்பினார் என்பர்.

நுபைசா முகம்மது (ஸல்) அவர்களிடம் சென்று நீங்கள் ஏன் விவாகம் புரியாது இருக்கிறீர்கள்? என்ற போது, அதற்குத் தேவையான செல்வம் தன்னிடம் இல்லை என்று பதில் உரைத்தார்கள். செல்வம் அவசியமற்றது என்று கருதும், அழகும், கண்ணியமும், அந்தஸ்தும், செல்வமும் உடைய ஒருவர் உங்களைக் கைபிடிக்க முன்வரின் ஏற்பீர்களா? என்று நுபைசா கேட்டபோது, அப்படி முன்வரக் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெண் யார்? எனக் கேட்க, கதீஜா என்று பதிலளித்தார். இது எப்படிச் சாத்தியமாகும்? என்று முகம்மது (ஸல்) அவர்கள் வினவ, தான் ஏற்பாடு செய்கிறேன் என்று நுபைசா பதிலுரைத்தார். இதன் பின் முகம்மது (ஸல்) அபூதாலிப், ஹம்சா முதலாம் உறவினருடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கத்தையும் பெற்றார்.

ஏற்கனவே செய்துகொண்ட ஏற்பாடுகளின்படி, முகம்மது (ஸல்) தனது உறவினருடன் கதீஜாவின் வீட்டை அடைந்தார். கதீஜாவின் தந்தை ஹர்புல் பிஜாருக்கு முன்பே இறந்திருந்ததால், அவரது மாமனான அம்ரிப்னு அஸத் சமூகமளித்திருந்தார். 500 திர்ஹம் நாணயங்களை மஹராகக் கொடுத்து, முகம்மது (ஸல்) கதீஜாவை விவாகம் புரிந்தார். வலீமா விருந்துக்காக இரு ஒட்டகைகள் அறுக்கப்பட்டன. பாடகிகள் பாட்டுப் பாடினர். "தப்" எனப்படும் இசைக்கருவியும் உபயோகிக்கப்பட்டது. இவ்விவாகத்தின்போது நாற்பது வயதைக் கதீஜா அடைந்திருந்தபோதும், முகம்மது (ஸல்) அவர்களின் வயது இருபந்தைந்தாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

முகம்மது (ஸல்) அவர்களின் இப்றாஹிம் தவிர்ந்த ஏனைய இரு ஆண் குழந்தைகளையும், நான்கு பெண் குழந்தைகளையும் கதீஜாவே ஈன்றெடுத்தார். மூத்த ஆண் பிள்ளை காசிம் என்றும், அடுத்த பிள்ளை அப்துல்லாஹ் என்றும் பெயர் சூட்டப்பட்டனர். அப்துல்லாஹ் நபித்துவத்தின் பின் பிறந்தவராவார். இவ்விரு பிள்ளைகளும் முறையே தய்யிப், என்றும் தாஹிர் என்றும் அழைக்கப்பட்டனர். இவ்விரு குழந்தைகளும் மிக இளமையிலே இறையடி எய்தினர். பெண் பிள்ளைகளை உயிருடன் புதைத்து, ஆண் குழந்தைகளை விழா எடுத்துப் பாராட்டி வளர்க்கும் ஒரு சமூகத்தில் வாழ்ந்த இறைதூதருக்கு, இக்குழந்தைகளை இளமையில் இழந்தமை பெருங் கவலையைத் தோற்றுவித்திருக்கும். இளமையில் பெற்றோரையும், வளர்ந்த பின் குழந்தைகளையும் இழந்த அவர்கள், சமூக வாழ்வின் துயரை நன்கு உணர்ந்திருக்க முடியும். பெண் பிள்ளைகள் நால்வரும் முறையே சைனப், ருகையா, உம்முகுல்தும், பாதிமா என்று பெயர் சூட்டப்பட்டனர். அபுல் ஆஸ் பின் ரபீஆ என்பவர் சைனபை விவாகம் புரிந்தார். ருகையாவையும் உம்மு குல்தூமையும் அபூலஹபின் இரு புதல்வர்களான முறையே உத்பாவும், உதைபாவும் விவாகம் புரிந்திருந்தனர். நபித்துவம் கிடைத்த பின், அபூலஹபின் கட்டளைக்கு ஏற்ப, அவனது மக்கள் இருவரும் தம் மனைவியரை விவாகரத்துச் செய்தனர். இவர்கள் இருவரையும் ஒருவர் மரணித்தபின் மற்றவராக உதுமான் (றழி) விவாகம் புரிந்தார்கள். பத்ருப் போரின் பின் அலி (றழி) பாத்திமா (றழி) அவர்களை விவாகம் புரிந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சைதிப்னு ஹாரிஸ் எனும் சிறுவன் தன் தாயுடன் பிரயாணம் செய்யும் போது, அறேபியர் குழு ஒன்றால் கடத்தப்பட்டு விற்கப்பட்டான். ஹதீம் பின் ஹுதாம் என்பவர் அச்சிறுவனை விலைக்கு வாங்கி, தனதுறவினரான கதீஜாவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். அப்போது சைதுக்கு வயது இருபது. கதீஜாவின் விவாகத்தின் பின் சைது முகம்மது (ஸல்) அவர்களின் பரிபாலனத்துக்குட்பட்டார். முகம்மது (ஸல்) அவர்கள் சைதுக்கு விடுதலை அளித்தபோதும், சைது தொடர்ந்தும் அவர்களிடமே வாழ்ந்தார். சைதின் தந்தை ஹாரிஸ், தன் மகனின் இருப்பிடத்தை அறிந்து, முகம்மது (ஸல்) அவர்களிடம் வந்து, சைதை விடுவிக்க எவ்வளவு பணம் தேவை என்று கேட்ட போது, சைத் எவரிடம் இருக்க விரும்புகிறாரோ அதனைத்தான் ஏற்பேன் என்று கூறினார். சைது முகம்மது (ஸல்) அவர்களிடமே வாழ்வதாகக் கூறினார். அது முதல் அவர் சைதிப்னு முஹம்மத் என்றழைக்கப்பட்டார். இந்நடைமுறையை அல்லாஹ் தடுத்தபின், மீண்டும் சைது பின் ஹாரிஸ் என்றே அழைக்கப்பட்டார்.

கதீஜா தனது விவாகத்தின் பின் இறைதூதரின் முழுமையான ஆளுமையை நன்கு விளங்கிக் கொண்டார்கள். ஆதலால் தனது வியாபாரத்தின் முழுப் பொறுப்பையும் அவரிடம் கையளித்தார்கள். அறேபியாவின் பல்வேறு பிரதேசங்கட்கு வர்த்தகப் பொருட்களை அவர்கள் கொண்டு சென்றார்கள். கதீஜாவை விவாகம் புரிந்ததால் முகம்மது (ஸல்) பொருளாதாரச் சுமையில் இருந்து விடுதலை பெற்றார்கள். ஆதலால் அவருக்கு ஓய்வு கிடைத்தது. அதனால் சமூக சேவைப் பணிகளில் ஈடுபடவும், ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபடவும் வாய்ப்புக்கள் கிடைத்தன. அத்துடன் ஏழைகளின் துயர் துடைக்கவும், அடிமைகளை விடுதலை செய்யவும் அவர்களுக்குப் பொருளாதார வசதியும் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கஃபா புனர் நிர்மாணம்

க.்.பதுல்லாஹ் நான்கு புறமும் மலைகளால் சூழப்பட்ட பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. முகம்மது (ஸல்) அவர்களின் முப்பத்தைந்தாம் வயதில் ஏற்பட்ட பெரு வெள்ளம் காரணமாக, அதன் சுவர்கள் பழுதடைந்தன. ஆதலால் க.்.பாவின் சுவர்களை உடைத்துத் தரைமட்டமாக்கி, புதிதாகச் சுவர்களைக் கட்டும் பணி மக்காவின் முக்கிய நான்கு கோத்திரங்களின் பொறுப்பில் விடப்பட்டபோது, அல்லாஹ்வின் தண்டனை வருமோ என்று பயந்து சுவரை உடைக்க ஒருவரும் முன்வரவில்லை.

நாம் நல்லதொரு வேலையையே செய்ய முயற்சிக்கின்றோம் ஆதலால் அல்லாஹ் தண்டிக்க மாட்டான் என்ற துணிவுடன் வலீத் பின் முகீரா என்பவர் தனது கோத்திரத்தின் பொறுப்பில் விடப்பட்டிருந்த யமனி சுவரை உடைக்கலானார். அன்றைய இரவை வலீத் பின் முகீரா துன்ப துயரம் எதுவுமின்றிக் கழித்ததால், மறுதினம் க.்.பாவின் சுவர்களை உடைக்கும் பணியில் அனைவரும் ஈடுபட்டனர். அத்திவாரம் பழுதடையாதிருந்ததால் அதன்மீது சுவர்களைக் கட்டி எழுப்பினர்.

அயலில் இருந்த மலைகளில் இருந்து கற்களைத் திரட்டி எடுத்தனர். கோயில் ஒன்று கட்டுவதற்காக பலகைகள் எடுத்துக் கொண்டு எகிப்தில் இருந்து வந்த பைஸாந்திய வர்த்தகரான பாகூம் என்பவருக்குச் சொந்தமான கப்பல் ஒன்று உடைந்து அறேபியக் கரையில் ஒதுங்கியது. இதனைக் கேள்விப்பட்டு, வலீத் பின் முகீராவின் தலைமையில் தூதுக்குழு ஒன்று ஜித்தாவுக்குச் சென்று அக்கப்பலை விலை கொடுத்து வாங்கியது. பாகூம் ஒரு கட்டடக்கலைஞர். அவரின் உதவியைப் பெறும் நோக்கில் மக்காவுக்கு வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவ்வழைப்பை ஏற்று அவர் மக்காவுக்கு வந்தார். தச்சு வேலையில் அனுபவமுடைய கிப்தியர் ஒருவர் மக்காவில் இருந்ததால் அவரது துணையும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

விபசாரத்தின் மூலமாகவும், வட்டி மூலமாகவும், மக்களைக் கொடுமைப்படுத்தி அநியாயமாகவும் பெற்ற பணத்தை க.்.பாவைக் கட்டுவதற்குப் பயன்படுத்துவதில்லை என்று மக்காவாசிகள் தீர்மானித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நல்வழியில் உழைத்துப் பெற்ற பணத்தைக் கொண்டே கட்டட வேலைகளைச் செய்வித்தனர். நல்லுழைப்பு மூலம் பெற்ற பணம் போதாது போனமையால் இப்றாஹிம் (அலை) அவர்கள் இட்ட அத்திவாரத்தில் கட்டடத்தைப் பூர்த்தியாகக் கட்டமுடியவில்லை. வடபுறத்தில் ஒரு பகுதியை விட்டு விட்டே கட்டினர். விடப்பட்ட அப்பகுதி இப்றாஹிம் (அலை) கட்டிய கஃபாவின் ஒரு பகுதி என்பதை உணர்த்த எஞ்சிய பகுதியின், அத்திவாரத்தின் மேல் ஒரு சிறிய சுவரை மதில் போலக் கட்டிவைத்தனர். இப்பகுதியையே "ஹிஜ்ர்" என்றழைக்கின்றனர். தற்போதும் இச்சிறிய சுவரை உள்ளடக்கியே தவாபின் சுற்றுவட்டம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்றாஹிம் (அலை) காலத்தில் கஃபா ஒன்பது முழ உயரமுடையதாக இருந்தது. கிழக்கிலும் மேற்கிலுமாக இரு வாசல்கள் இருந்தன. மக்காவாசிகள் திருத்திக் கட்டும் போது, மேலும் ஒன்பது முழத்தை உயர்த்தி, ஒரு வாசலை வைத்துக் கட்டினர். கதவை நிலத்தின் மட்டத்தில் வைக்காது, ஏணி அல்லது படி அமைத்து ஏறவேண்டிய உயரத்தில் வைத்தனர். கட்டட வேலைகள் சுமுகமாக நடைபெற்று வந்து போதும், "ஹஜருல் அஸ்வத்" கல்லை உரிய இடத்தில் வைப்பது யார் எனும் பிரச்சினை எழுந்தது. அக்கௌரவத்தைத் தாமே அடைய வேண்டும் என்று ஒவ்வொரு கோத்திரத்தவரும் விரும்பினர். அப்துத்தார் கோத்திரத்தார் தமது நேசக்கிளையான பனூஅதீக் கோத்திரத்தாருடன் இணைந்து, அவ்வுரிமை தமக்கே வழங்கப்பட வேண்டும் என்றும், மீறினால் இறுதிவரை போராடுவோம் என்றும் சூளுரைத்தனர். இரத்தம் நிறைந்த பாத்திரம் ஒன்றைக் கொண்டு வந்து தமது கையை அதனுள் அமிழ்த்தி, தமதுரிமையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று சத்தியம் செய்தனர். ஏனைய கோத்திரங்களும் அவ்வுரிமை தமக்கே வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்ததால் பேரழிவு ஒன்று ஏற்படும் பயங்கரச் சூழல் ஒன்று உருவாகியது. நான்கு அல்லது ஐந்து தினங்கள் இப்பயங்கர நிலை நீடித்தது.

இத்தகைய பயங்கரச் சூழல் நிலவும் போது, அபூ உமையா பின் முகீரா அல் மஃதூமி எனும் வயோதிபக் குறைசியர் எழுந்து, மக்காவாசிகளே நாம் எல்லோரும் இவ்விடத்தில் தங்கியிருக்க, பனூசைபா எனும் இவ்வாயில் ஊடாக (இன்று இவ்வாயில் பாபுஸ்ஸலாம் என்றழைக்கப்படுகிறது) முதன் முதல் யார் வருகிறாரோ, அவரின் முடிவை நாம் ஏற்போம் என்று ஆலோசனை நல்கினார். குழுமியிருந்தோர் அக்கருத்தை ஏற்றனர். அவ்வாயில் வழியாக முதன் முதல் வருபவர் யார் என்று எல்லோருமே வைத்தகண் வாங்காது பார்த்திருந்தனர். முஹம்மதிப்னு அப்துல்லாஹ் அவ்வாயில் ஊடாக நுழைவதைக் கண்டு, இதோ "அல் அமீன்" வருகிறார் என்று மகிழ்ச்சி தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவரிடம் பிரச்சினை முன்வைக்கப்பட்ட போது, சற்று சிந்தித்தபின் ஒரு சால்வாயை நிலத்தில் விரித்து, ஹஜருல் அஸ்வத் கல்லைத் தன் கையால் அச்சால்வையின் மீது தூக்கிவைத்தார். பின் அச்சால்வையைக் கூட்டாகத் தூக்குமாறு முக்கிய கோத்திரத்தின் பிரமுகர்களைக் கேட்டார். அக்கல்லை வைக்க வேண்டிய இடம்வரை அவர்கள் தூக்கிய போது தன்கையால் எடுத்து அதனை உரிய இடத்தில் வைத்தார்கள். இதனால் பேரழிவைத் தரக்கூடிய போர் ஒன்றைத் தவிர்க்க முடிந்தது. இந்நிகழ்ச்சி இரு உண்மைகளைப் புலப்படுத்துகிறது.

அ. குறைசியர்களில் குசைஇ, ஹாசிம், அப்துல் முத்தலிப் என்போருக்கிருந்தது போன்ற தலைமைத்துவ அங்கீகாரம் இந்நிகழ்ச்சி இடம் பெற்ற காலத் தலைவர்களுக்கு இருக்கவில்லை. பனூ ஹாசிம்களுக்கும் பனூ உமையாக்களுக்கும் இடையேயிருந்த அதிகாரப் போரட்டம் இந்நிலையை மேலும் மோசமாக்கியது. இது அரசியல் வீழ்ச்சி ஒன்று ஏற்பட வழிவகுத்திருந்தது.

ஆ. முகம்மது (ஸல்) அவர்கள் மக்காவாசிகள் மத்தியில் பெற்றிருந்த கண்ணியத்தையும், அவரது புத்திக் கூர்மையையும் இந்நிகழ்ச்சி காட்டுகிறது. அவர்களின் தீர்ப்பை மகிழ்ச்சியாக ஏற்றது மட்டுமல்லாது, அவர்கள் தன் கையால் ஹஜருல் அஸ்வத் கல்லை வைப்பதை அவர்கள் அங்கீகரித்தமை, அச்சமூகம் அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையையும் காட்டுகிறது.

முகம்மது (ஸல்) அவர்களின் முப்பத்தைந்தாவது வயதில் கட்டப்பட்ட இக்கட்டடம் யஸீத் பின் முஆவியாவின் படையெடுப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதனால் அப்துல்லாஹ் பின் சுபைர் அதனைத் திருத்தி, இப்றாஹிம் (அலை) இட்ட அத்திவாரத்தில் கட்டினார். பின் ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் ஆலோசனைக்கிணங்க, அப்துல் மலிக் பின் மர்வான் அதனை உடைத்து, முகம்மது (ஸல்) அவர்களின் காலத்தில் கட்டப்பட்ட அளவில் கட்டினார். ஹாரூனுற்றசீது அப்துல்லாஹ் பின் சுபைர் (றழி) அவர்களின் காலத்தில் இருந்தது போலக் கட்டக் கருதி, இமாம் மாலிக் (றஹ்)விடம் ஆலோசனை கேட்டார். மன்னர்களின் விளையாட்டரங்காக க.்பாவை மாற்ற வேண்டாம் என்று இமாமவர்கள் கூறியதால், ஹாரூன் தன் எண்ணத்தைக் கைவிட்டார். இதன் பின் மேற்தளம், வாயில், வாயிற்படி என்பவற்றில் சில மாற்றங்கள் நிகழ்ந்த போதும், சுவரிலும் கூரையிலும் திருத்த வேலைகளல்லாது வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. வலீத் பின் அப்துல் மலிகின் காலத்தில் அதன் தளப்பரப்பில் பளிங்குக் கற்கள் முதன் முதலில் பதிக்கப்பட்டன. எண்ணெய் வளம் சவூதியில் கிடைத்த பின்பு, சவூதி அரசாங்கம் ஹரம் ஷரீபைச் சுற்றிப் பாரிய கட்டடங்களைக் கட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பொதுமக்களின் வணக்க வழிபாட்டுக்கு வசதிகளைச் செய்துள்ள போதும், க:.பாக் கட்டிடம் முகம்மது (ஸல்) அவர்களது காலத்தில் கட்டப்பட்ட அதே அளவில் இருப்பதைக் காணமுடிகிறது.

28 JUN 2007

605634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஹிராவில் தியானம்

முகம்மது (ஸல்) அவர்களிடம் இளமை முதலே உயர் குணப்பண்புகள் குடிகொண்டிருந்தன. உண்மை பேசுதல், வாக்கு மாறாமை, விருந்தோம்பல், வீரம், கொடை, பொறுமை, உறவினர், அயலார் நலன்களைப் பேணல் என்பன அவரது இயல்பான குணங்களாக இருந்தன. அன்றைய சமூகத்தில் கண்ணியமானவர்களாகக் கருதப்பட்டவர்களே அவர்களது நண்பர்களாக இருந்தனர்.

மது அருந்தியதாகவோ, சூது விளையாடியதாகவோ, பெண்களோடு தகாத உறவு கொண்டதாகவோ, கேளிக்கைகள் வீண் விளையாட்டுக்களில் அவர்கள் ஈடுபட்டதாகவோ அறிய முடியவில்லை. துருவித்துருவி ஆராய்ந்தாலும் இத்தகு பாவச் செயல்களை அவரது வாழ்வில் கண்டு கொள்ள முடியவில்லை. ஒருபோதும் அவர் சிலைகளுக்கு வணக்கம் செலுத்தியதில்லை. அபூதாலிபுடன் அவர் இளமையில் சிரியா சென்ற போது, கிறித்தவ மதகுரு புஹைறா தனது வினாக்களுக்கு "லாத்", "உஸ்ஸா" எனும் சிலைகள் பெயரால் பதில் தரவேண்டும் என்று வற்புறுத்திய போது, அத்தகு சிலைகள் பெயரால் தன்னிடம் எதுவும் கேட்க வேண்டாம் என்று இறுக்கமாகப் பதில் கூறினார்கள். குறைசியர் நிர்வாண கோலமாக க.்பாவைத் தவாபு செய்த போதும், முகம்மது (ஸல்) அவர்கள் ஒரு போதும் அவ்வாறு நடந்து கொள்ளவில்லை. சிலைகளுக்காக நேர்ச்சை செய்யப்பட்டு, அறுக்கப்பட்ட மிருகங்களின் மாமிசங்களை அவர் புசிக்கவில்லை. ஜாஹிலிய்யா சமூக வாழ்வையும் சமய நம்பிக்கையையும் அவர் இளமை முதல் இயல்பாகவே விரும்பவில்லை என்பதையே இவை காண்பிக்கின்றன.

முகம்மது (ஸல்) அவர்களுக்கு நிகரான அழகன் ஒருவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அழகு சொலிப்பதுடன் கண்ணியம்மிக்க தோற்றத்தைக் கொடுக்கும் ஒரு புறத் தோற்றம் அவருக்கு இருந்தது. அதுபோல அவரது அகமும் அழகாகவே இருந்தது. அழகுணர்ச்சியும் அவரிடம் மிகைத்திருந்தது. ஆயினும் அவர் சுவைத்த அழகு ஜாஹிலிய்யா மக்கள் அழகை நோக்கிய பான்மையில் இருந்து வேறுபட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அழகிய கருத்துக்கள் கொண்ட கவிதைகளைக் கேட்பதில் அவர்கள் ஆர்வம் காட்டியபோதும், கவிதைகளையோ, கஸீதாக்களையோ, அவர் பாடியதாக அறிய முடியவில்லை. ஜாஹிலிய்யக் கவிஞர்களின் கற்பனை வளங்களை, சிந்தனைப் போக்கை அவர் சுவைக்கவில்லை. ஆயினும் அவர்களின் கவிதைகளில் முன்வைக்கப்பட்ட உண்மைக் கருத்துக்களை அவர் நயக்கத் தயங்கவில்லை. கவிஞன் லபீத் அல்லாஹ் பற்றிப் பாடிய கவிதை அடியையும், உலகின் நிலையாமை பற்றிப் பாடிய கவிதைகளையும் வெகுவாகச் சுவைத்தார்கள்.

அவர்களின் பேச்சு இனிமையானது. கேட்போருக்கு விளங்கக் கூடியதாக, சாதாரண சொற்களைப் பயன்படுத்தி, இலகுநடையில், அவசரமின்றிப் பேசுவார்கள். இலக்கண வழுவிலாது பேசுவது அவரது வழக்கமாக இருந்தது. இளமை முதலே சமூக சேவைகளில் ஈடுபட்டார்கள். கதீஜா தன் சொத்துக்களை, தான் விரும்பும் விதத்தில் பயன்படுத்தத் தன் கணவனுக்கு அனுமதியளித்தமை, அவருக்கு சமூகப் பணிகளில் முழுமையாக ஈடுபட வசதியையும் அவகாசத்தையும் அளித்தது. நோயாளிகளைச் சென்று பார்த்து வரவும் அவர் தவறுவதில்லை.

அறபு சமூகத்தோடு அவர் வைத்திருந்த உறவு அச்சமூகத்தின் நிலையை அவருக்கு உணர்த்தியது. அழிவின் விளிம்பில் அச்சமூகம் இருப்பதை அவர் உணர்ந்து மனஅமைதியை இழந்தார். அச்சமூகத்தின் சமய நம்பிக்கைகள், சமயச் சடங்குகள், சம்பிரதாயங்கள் அச்சமூகத்தின் எழுச்சிக்குதவமாட்டாது என்று திடமாக நம்பினார். இத்தகு நம்பிக்கை கொண்டிருந்த வரகாபின் நவ்பல், உதுமான் போன்ற நபர்களுடன் தொடர்புகளைக் கொண்டவராக இருந்தார்கள். சிந்திக்கும் ஆற்றலும் பக்திசிரத்தையும் உடையவர்கள் மனஅமைதி நாடி, வருடத்தில் சில தினங்கள் சமூகத்திலிருந்து தூர விலகி, தனித்துத் தியானத்தில் ஈடுபடும் பழக்கம் அச்சமூகத்தில் இருந்தது. இப்பழக்கம் "தஹன்னுஸ்" அல்லது "தஹன்னும்" என்றழைக்கப்பட்டது.

முகம்மது (ஸல்) அவர்களும் மக்காவின் வடக்கே சில மைல் தூரத்தில் இருந்த ஹிரா எனும் குகையில் தங்கித் தியானம் செய்யலானார்கள். தனக்குத் தேவையான சொற்ப உணவுப் பண்டங்களை எடுத்துச் செல்வார்கள். அல்லது சேவகர்கள் மூலம் பெற்றுக் கொள்வார்கள். இதன் வழி பிறரின் இடையூறு இன்றி, ஆன்ம பக்குவத்துக்குதவும் தியானத்தில் ஈடுபடலானார்கள். இத்தகு தியானங்களின் போது தன்னை மட்டுமன்றி புற உலகையும் மறந்துவிடுமளவு மூழ்கிப் போவார்கள். இத்தியானத்தின் போது உண்மையான இறைவனை அறிவதிலும், அவனில் தன்னை இணைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொள்வதிலும் ஆர்வம் காட்டினார்களே அல்லாது, மக்கள் அறிந்து வைத்திருந்த கடவுள்களிலும் அவற்றுக்கான வழிபாட்டு முறைகளிலும் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை.

ஹிராவில் தியானத்தில் ஈடுபட்டிருந்தபோது முன்னைய சமயங்களின் வணக்க முறைகளைப் பின்பற்றினாரா என்று சரியாக அறிய முடியவில்லை. அல்லாஹ்வின் கட்டளைகள் இவை என்று தான் சரியாக அறிந்திருந்த சில விதிகளைப் பின்பற்றி இபாதத் செய்திருக்க முடியும் என்று சிலர் கருதுவர். சுமார் ஏழு வருடங்கள் இவ்வாறு ஹிராவில் இடைக்கிடை தியானத்தில் ஈடுபட்டார்கள். ரமழான் மாதம் முழுவதையும் அங்கே கழித்தார்கள். அவருக்கு வயது நாற்பதாகியபோது, அவரது உள்ளம் இத்தகு தியானத்தின் காரணமாகப் பொய்மையை இனங்கண்டு ஒதுக்கவும், உண்மையைத் தேடியறியவும் பக்குவம் அடைந்திருந்தது. இரவும் பகலும் இறைவணக்கத்தில் ஈடுபடலானார்கள். பகற் பொழுதில் நோன்பு நோற்றார்கள். இப்பருவத்தில் அவருக்கு உண்மைக் கனவுகள் தென்படலாயின. சுமார் ஆறுமாதகாலம் உண்மைக்கனவுகள் தென்பட்டன. இவையே வஹிக்கு முன்னோடியாக அமைந்தன என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வஹீ அருளப்படல்

முகம்மது (ஸல்) அவர்களுக்கு சந்திர வருடக் கணக்கின்படி நாற்பது வருடங்களும் ஆறுமாதங்களும் ஆனபோது, முன்னைய நபிமார்களிடம் அல்லாஹ்வின் தூதைக் கொண்டு வருபவராக இருந்த ஜிப்ரீல் (அலை), ரமழான் மாதத்தில் ஒருதினத்தில், ஹிராக் குகையில் தியானம் செய்து கொண்டிருந்த முகம்மது (ஸல்) அவர்கள் முன் தோன்றினார்கள். ஓதுவீராக என்று ஜிப்ரீல் (அலை) அவரைக் கேட்டபோது, தான் ஓத அறியேன் என்று பதிலுரைத்தார்கள். இதனைச் செவியுற்ற ஜிப்ரீல் (அலை) முகம்மது (ஸல்) அவர்களைக் களைப்படையும் வரை கட்டியணைத்தபின், ஓதுவீராக என்ற போது மீண்டும் அவ்வாறே பதிலுரைத்தார்கள். இதனால் இரண்டாம் முறையும் இறுக அணைத்து ஓதுமாறு கேட்க, அதே பதில் வந்ததால் மூன்றாம் முறையும் இறுக அணைத்து, சூரதுல் "அலகின்" முதல் ஐந்து ஆயத்துக்களையும் சொல்லிக் கொடுத்த போது, அவர்கள் அவற்றை ஓதினார்கள்.

இந்நிகழ்ச்சியால் அதிர்ச்சியுற்று நடுங்கியவராக வீட்டுக்கு மீண்டு வந்து, தன் மனைவியிடம் தன்னைப் போர்த்துமாறு கேட்டார்கள். நடுக்கம் ஓய்ந்ததும் ஹிராக்குகையில் தான் பெற்ற அனுபவத்தை மனைவி கதீஜாவிடம் கூறித் தன் உயிருக்கு ஆபத்து இருப்பதாகத் தான் உணருவதாகவும் சொன்னார்கள். முகம்மது (ஸல்) அவர்களின் அச்ச நிலையைக் கண்ட கதீஜா (றழி) பின்வருமாறு ஆறுதல் கூறினார்கள்.

"அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவன் ஒரு போதும் உங்களை இழிவடையச் செய்யமாட்டான், நீங்கள் உறவினரைச் சேர்ந்து நடக்கின்றீர்கள், நண்பர்களுக்கு உதவி செய்கின்றீர்கள், பிறரின் துன்பங்களைத் துடைக்கின்றீர்கள், விருந்தினர்களை உபசரிக்கின்றீர்கள், சோதனைகளின் போது நீதியை நிலைநாட்ட உண்மையின் பக்கமே இருக்கின்றீர்கள். ஆதலால் உங்களைத் துன்பம் அணுகாது".

பதினைந்து வருடங்கள் உடன் வாழ்ந்ததால் அறிந்து கொண்ட தன் கணவரின் நற்பண்புகளுக்குக் கட்டியம் கூறுவதுபோல அன்னை கதீஜாவின் இவ்வாறுதல் மொழிகள் அமைந்திருப்பதைக் காணமுடிகிறது. அத்துடன் நல்ல மனைவி ஒருத்திக்கு இருக்க வேண்டிய குணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பண்புகளையும் அது உணர்த்துகிறது. இதனைத் தொடர்ந்து கதீஜா (றழி) அவர்கள் எடுத்த நடவடிக்கை, பிரச்சினைகளை அறிவியல் ரீதியாக அவர்கள் ஊறுகுவதைக் காட்டுகிறது.

தம் கணவரின் இப்புதிய அனுபவம் பற்றிய உண்மையை அறிந்து கொள்வதற்காகவும், அவரின் அச்சத்தைப் போக்கி தன்னம்பிக்கையை வலுப்படுத்துவதற்காகவும், தனது உறவினரும், முன்னைய வேதங்களை நன்கறிந்தவரும், அறேபியர்களின் சமய நம்பிக்கைகளையும், சமயச் சடங்குகளையும் நிராகரித்தவருமான வரகா பின் நவ்பலிடம் முகம்மது (ஸல்) அவர்களைக் கூட்டிச் சென்றார்கள். முழு விபரங்களையும் முகம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டறிந்த வரகா பின் நவ்பல், மூஸா, ஈஸா என்பவர்களிடம் வந்த அதே ஜிப்ரீல் (அலை) அவர்கள்தான் உங்களிடமும் வந்துள்ளார்கள் என்று கூறியபின், நீங்கள் பிறந்து வளர்ந்த மக்காவில் இருந்து உங்கள் இனத்தவரால் நீங்கள் துரத்தப்படும் போது, தான் வாலிபனாக இருந்தால் நலமே என்றங்கலாய்த்தார். இக்கூற்று முகம்மது (ஸல்) அவர்களை வியப்பில் ஆழ்த்தியது. தன்னைத் துரத்திவிடுவார்களா? என்று அவர்கள் கேட்டார்கள். ஆம், அல்லாஹ்வின் தூதுடன் வந்த ஒவ்வொரு நபியையும் அங்கு வாழ்ந்த மக்கள் பகைத்துத் துன்புறுத்தியே வந்துள்ளார்கள் என்றார். ஹிராவின் புதிய அனுபவம் தந்த அதிர்ச்சி நீங்குமுன்பே வரகாபின் நவ்பல் சுட்டிக்காட்டிய வரலாற்றுண்மை இறைதூதரின் பொறுப்பை அவர்களுக்கு உணர்த்தியிருக்கும் எனலாம்.

முகம்மது (ஸல்) அவர்களுக்கு வஹி கிடைத்த போது ஏற்பட்ட நடுக்கமும் அதிர்ச்சியும் ஓர் இயல்பு நிலை ஆகும். இம்முதல் அனுபவம் எத்தகைய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதை அன்னை ஆயிஷா (றழி) ரிவாயத்து செய்துள்ள பின்வரும் ஹதீஸ் உணர்த்தவல்லது. "குளிர் காலத்திலும் வஹி அருளப்படும் போது முகம்மது (ஸல்) அவர்களுக்கு வியர்த்து வடியும்" வஹி அருளப்படுவதை ஆயிஷா (றழி) காணும் காலப்பகுதி வஹி நன்கு பரிச்சயமான காலமாகும். இக்காலப்பகுதியிலே இத்தகு சிரமம் என்றால் முதல் அனுபவம் எந்தளவு அதிர்ச்சி தரக்கூடியதாக இருந்திருக்கும் என்பதை ஊகித்து உணர முடியும்.

முதல் "வஹி" அருளப்பட்ட பின் சில காலம் "வஹி" அருளப்படவில்லை. இக்காலப்பகுதி "பத்ரதுல் வஹி" என்றழைக்கப்படுகிறது. இக்காலப்பகுதி குறைந்தபட்சம் நாற்பது தினங்கள் என்றும், கூடியபட்சம் மூன்று வருடங்கள் என்றும் அறியத்தரும் பல ரிவாயத்துக்கள் உள. ஆறு மாதங்கள் வஹி அருளப்படவில்லை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்னு அப்பாஸ் (றழி) றிவாயத்துச் செய்த ஹதீஸ் ஒன்றுள்ளது. முகம்மது (ஸல்) அவர்கள் ஒரு மனிதர் என்ற நிலையில் ஏற்பட்ட அதிர்ச்சியை நீக்க "வஹி" அருளப்படாமை பெருமளவு உதவிய போதும், அது அவரிடம் இனிமேல் வஹி வராதோ என்ற ஏக்கத்தையும் கவலையையும் ஏற்படுத்தியது. அதனால் மீண்டும் ஜிப்ரீல் (அலை) வருவாரோ என்று எதிர்பார்த்து அடிக்கடி ஹிராக் குகைக்குச் சென்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலவேளை ஜிப்ரீல் (அலை) வான் வெளியில் தோன்றி நிச்சயமாக நீங்கள் இறைதூதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். அமைதியுடன் எதிர்பார்த்திருங்கள் என்று ஆறுதல் கூறினார்கள். இந்த இடைவெளியின் பின் "சூரத்துல் ளுஹா" எனும் அத்தியாயம் அருளப்பட்டது என்று இப்னு ஹிசாம், அத்தபரி முதலானோர் குறிப்பிட்டுள்ளனர். எனினும் ஸஹீஹுல் புகாரியில், ஜாபிர் பின் அப்துல்லாஹ்வின் றிவாயத்தைக் கொண்டு பதியப்பட்டுள்ள ஹதீஸின் படி "யாஅய்யுஹல் முத்தஸ்ஸிர்" என்று ஆரம்பிக்கும் சூறாவின் முதல் ஐந்து ஆயத்துக்களும் அருளப்பட்டன என்ற தகவலே சரியானது என்று வரலாற்றாய்வாளர் கருதுவர். இதன்பின் தொடர்ந்து வஹி அருளப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இரகசிய அழைப்பு

"யா அய்யுஹல் முத்தஸ்ஸிர் கும் பஅன்திர்" என்ற ஆயத்துக்கள் அருளப்பட்டதன் பின், முகம்மது (ஸல்) அவர்கள் இரகசியமாக இஸ்லாத்தைப் பிரசாரம் செய்யலானார்கள். முதலில் தன் குடும்பத்தினர், தன்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர்கள் முதலானோருக்கு இச்செய்தியை அறிவித்து இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்தார்கள். அதனை ஏற்று முதற்கண் பெண்களில் மனைவி கதீஜா (றழி), ஆண்களில் அபூபக்ர் (றழி), சிறுவர்களில் அலி (றழி), மவாலிகளில் சைதிப்னு ஹாரிஸ் (றழி), அடிமைகளில் பிலால் (றழி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றனர். இதைத் தொடர்ந்து முகம்மது (ஸல்) அவர்களின் பெண் மக்களும் இஸ்லாத்தை ஏற்றனர். அபூபக்ர் (றழி) இத்தூதைத் தன் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தினார். இதன் விளைவாகவே குறைசிப் பிரமுகர்களான உதுமான் பின் அப்பான் (றழி), சுபைர் இப்னுல் உவாம் (றழி), அப்துற் றகுமான் பின் அவ்ப் (றழி), ஸஅத் பின் அபீ வக்காஸ் (றழி), தல்ஹா பின் உபைதுல்லாஹ் (றழி) ஆகியோர் இஸ்லாத்தை ஏற்றனர். இஸ்லாத்தை ஏற்ற இவர்களின் உழைப்பால் ஹஸரத் அம்மார் (றழி), கப்பாப் (றழி), அர்க்கம் (றழி), சஈது பின் சைது (றழி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (றழி), உத்மான் பின் மசூன் (றழி), உபைதா பின் ஜர்ராஹ் (றழி), சுஹைப் அர்றூமி (றழி) முதலானோர் அடுத்த கட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தனர். பெண்களில் அன்னை கதீஜா (றழி), உம்மு ஐமன் (றழி), உம்முல் பழ்ல் (றழி), அஸ்மா பின்த் உம்மு ஜமீல் (றழி), பாதிமா பின்த் கத்தாப் (றழி) முதலானோர் இஸ்லாத்தை ஏற்றனர்.

ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்கள் முகம்மது (ஸல்) அவர்களின் உறவினரும் நெருங்கிய நண்பர்களும் ஆவர். முகம்மது (ஸல்) அவர்களின் தனி வாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றை உள்ளும் புறமுமாக இவர்கள் அறிந்திருந்தனர். வாழ்வின் சகல துறைகளிலும் தூய்மையாக நடந்த நபி (ஸல்) அவர்கள், மக்களை ஒருபோதும் வழிகெடுக்க மாட்டார் என்ற திடமான நம்பிக்கை இவர்களிடம் இருந்தது. அபூபக்ர் (றழி) அவர்களிடம் குறைஷியர் ஒருவர் வந்து உமது நண்பர் முகம்மது (ஸல்) அவர்களுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. சிலை வணக்கத்தைச் சாடுகிறார்; ஒரே இறைவனை வணங்குமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறுகிறார் என்று அறிவித்தபோது அவரது கூற்று சரியாகவே இருக்கும் ஏனெனில் அவர் ஒரு போதும் பொய் கூறியதைத் தான் அறியவில்லை என்று பதிலுரைத்தார். முகம்மது (ஸல்) அவர்களின் குணப்பண்பு அவரது நண்பர்களால் நன்கு அறியப்பட்டிருப்பதை இது காட்டுகிறது. அதனால்தான் அவர்களின் அழைப்பு கிடைத்தபோது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

மூன்று வருடங்கள் இஸ்லாமியப் பிரசாரம் மிகவும் இரகசியமாக நடைபெற்றது. மலைச்சாரல்களின் ஒதுக்குப் புறங்களில் அவர்கள் இரகசியமாக வணக்கம் செலுத்தினர். சபா மலைக் குன்றுக்கு அருகில், அர்க்கம் (றழி) வீட்டில் இவர்கள் இடைக்கிடை சந்தித்தனர். உமர் (றழி) இஸ்லாத்தை ஏற்கும் வரை இவ்வீடு இஸ்லாமியப் பயிற்சியின் மத்திய தலமாக இருந்தது.

UNIVERSITY ... 28 JUN 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பகிரங்க அழைப்பு

இஸ்லாமியத் தூது படிப்படியாக மக்காவாசிகளுக்கு அறிமுகமாகிய போது, "ஆகவே அல்லாஹ் உமக்களித்தவற்றை பகிரங்கமாக அறிவியுங்கள்" (15:94) என்றும், "நீர் உம்முடைய நெருங்கிய உறவினருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும்" (26:214) என்றும் அல்லாஹ் அறிவித்தான். இதற்கிணங்க முகம்மது (ஸல்) அவர்கள் தன் பாட்டனாரின் குடும்பத்தவர் அனைவரையும் விருந்துக்கழைத்து, இஸ்லாத்தை ஏற்றால் இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஜயம் பெறலாம் என்றறிவுரை வழங்கினார்கள். என் கண்கள் நோய்வாய்ப்பட்டுள்ளன; என் பாதங்கள் மெலிந்தவை; இங்கு கூடியிருப்பவர்களில் நானே சிறியவனாக இருந்தபோதும், நான் உங்களுக்குதவியாக இருப்பேன் என்று 13 வயதுச் சிறுவனான அலி (றழி) அவர்கள் கூறினார்கள். மற்றையோர் சிரித்து ஏளனம் செய்து, இது ஒரு பைத்தியக்காரத்தனம் என்று கலைந்தனர்.

ஆபத்துக்களில் அவசர அழைப்பு விடுக்கும் ஜாஹிலியாக்காலக் குறைசியர் மரபை ஒட்டி, சபா மலைக்குன்றுக்கேறி முகம்மது (ஸல்) அவர்கள் "யாஸபாஹ்" என்று அழைத்தார்கள். இவ்வழைப்பைக் கேட்ட மக்கள் ஒன்றுகூடினார்கள். அவர்களிடம், இம்மலைக்கு மறுபுறம் இருந்து ஒரு படையணி உங்களைத் தாக்க வருகிறது என்று நான் கூறினால் நம்புவீர்களா என்று முகம்மது (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஏன் இல்லை, நீங்கள் ஒரு போதும் பொய் பேசியதில்லையே என்று பதிலுரைத்தனர். அதன் பின் நபி (ஸல்) அவர்கள், குறைஷியர்களே! ஏகனான அல்லாஹ்வை நம்புங்கள் இல்லையேல் நீங்கள் பேரழிவை எதிர்நோக்குவீர்கள் என்று எச்சரித்தார்கள். இதனைச் செவியுற்ற அபூலஹப் ஆத்திரமடைந்து நீ நாசமாகக் கடவாய், இதனைக் கூறவா எங்களை இங்கு அழைத்தாய், எமது நேரத்தை வீணாக்கிவிட்டாய் என்று சாடி ஏனைய பிரமுகர்களையும் அழைத்துக் கொண்டு வெளியேறினான்.

அபூலஹப் முகம்மது (ஸல்) அவர்களின் பெரிய தந்தையாவார். முகம்மதிப்னு அப்துல்லாஹ்வை ஆமினா ஈன்றெடுத்தார் என்ற சுப செய்தியைத் தனக்கு அறிவித்த தனதடிமைப் பெண் சுவைபாவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உரிமையிட்டவர். இருப்பினும் தனது மரபுவழி நம்பிக்கைகளைத் தளர்த்த விரும்பாததால்தான் இவ்வாறு திட்டினான். அபூசுபியானின் சகோதரியும் அபூலஹபின் மனைவியுமான உம்மு ஜமீலும் இறைதூதைக் கடுமையாக எதிர்த்தாள். முகம்மது (ஸல்) அவர்கள் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் கூறிக் கோள் மூட்டுவாள்; அவர்கள் செல்லும் பாதையில் கல்லையும் முள்ளையும் பரப்பிவிடுவாள். இவ்விருவரதும் விசமத்தனமான செயல்களின் காரணமாகவே அவர்களைப் பழித்துரைக்கும் "தப்பத்யதா....." எனும் 111 ஆம் சூறா அருளப்பட்டது. இதனால் இருவரதும் கொடுமையும் பகைமையும் பன்மடங்காயின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைதூதை எதிர்த்தேன்

இஸ்லாமியப் பிரசாரம் இரகசியமாக நடைபெற்ற காலத்தில், இஸ்லாத்தை ஏற்ற சிலர் ஒரு தினம் மலைச்சாரலின் ஒதுக்குப்புறம் ஒன்றில் இரகசியமாகத் தொழுது கொண்டிருந்தபோது, அவ்வழியே சென்ற மக்காவாசிகள் அவர்களைக் கிண்டல் செய்தனர். முஸ்லிம்கள் அமைதியாக இருந்த நிலையிலும் மக்காவாசிகள் அவர்களைத் தாக்கினர். இதனால் ஸஅத் பின் அபீவக்காஸ் (றழி) அவர்கள் காயமடைந்தார்கள். இஸ்லாத்திற்காக முதன் முதல் சிந்தப்பட்ட இரத்தம் இதுவாகும்.

பகிரங்க அழைப்பு விடுக்குமாறு அல்லாஹ் ஏவியதற்கேற்ப, முகம்மது (ஸல்) அவர்கள் கஃபாவின் முன் நின்று இஸ்லாத்தின் பால் அழைப்பு விடுத்தார்கள். தமது கடவுளர்க்கும் கஃபாவுக்கும் இழைக்கப்பட்ட அவமானம் இது என்று கருதிய குறைசியர், முகம்மது (ஸல்) அவர்களையும் அவரது நண்பர்களையும் தாக்கினார்கள். உதவிக்காக ஓடிவந்த அபூஹாலா எனும் முஸ்லிம் சகோதரர் குறைசியரைச் சாந்தப்படுத்த முயற்சித்த போது கடுமையான காயங்களுக்குள்ளானார். அதனால் அவர் இறையடியெய்தினார். இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெற்ற முதல் உயிர்த்தியாகம் இதுவாகும். இதன் பின் முஸ்லிம்கள் பலர் சித்திரவதைகளுக்கும், சொல்லொணாத் துன்பங்கள் பலவற்றுக்கும் உட்படுத்தப்பட்டதுடன், அன்னை சுமையா (றழி) குறைசியரால் கொலை செய்யப்பட்டார்கள்.

குறைசியர் இவ்வாறு இஸ்லாமியப் பிரசாரத்தை எதிர்ப்பதற்கு சமய, சமூக, அரசியற் காரணிகள் ஏதுக்களாயின. பரம்பரை பரம்பரையாக இதுகாலவரை தாம் பின்பற்றிவந்த நம்பிக்கைகள், சமய சம்பிரதாயங்கள், சடங்குகள் என்வற்றை முகம்மது (ஸல்) விமர்சித்ததை அவர்களால் சகிக்க முடியவில்லை. தமது தெய்வங்களை முகம்மது (ஸல்) ஏளனம் செய்து அவமதிப்பதாக அவர்கள் கருதினர். அறேபியர் சிலைகளுக்கு மட்டுமன்றி, அவை வைக்கப்பட்டிருந்த கஃபாவுக்கும் சமய ரீதியான முக்கியத்துவம் வழங்கினர். இதனால் கஃபாவின் பரிபாலகர்களாகிய குறைசியர் கண்ணியம் பெற்றனர். அவர்கள் இறைவனின் அயலவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்றழைக்கப்பட்டனர். இப்பண்பு ஏனைய அறேபியர்கள் மீது குறைசியர்களுக்கு மத ரீதியான ஆதிக்கம் ஒன்றைக்கொடுத்தது.சமய நம்பிக்கை, சமய வாழ்வு, ஹஜ் வணக்கம், மத விவகாரம் என்பவற்றில் அவர்களின் வழிகாட்டல் ஏற்கப்பட்டன. அவர்கள் அறேபிய மக்களின் ஆன்மீக வழிகாட்டிகளாக அங்கீகாரம் பெற்றிருந்தனர். இதன் காரணமாகவே குறைசியர் அறேபியரிடை முதன்மை பெற்றிருந்தனர். மத ரீதியான இத்தலைமைத்துவத்துக்கு முகம்மது (ஸல்) அவர்களின் அழைப்பு ஒரு சவாலாக இருந்தது.

அறேபிய சமூகத்தில் குறைசியர்கள் முதன்மை பெற்றிருந்த போதும், அவர்களின் ஒழுக்கசீலம் தரம் குன்றியிருந்தது. அபூலஹப் க.்.பாவில் வைத்திருந்த தங்கத்தாலான மான் வடிவிலான சிலையைக் களவெடுத்து விற்றிருந்தான். அபூஜஹ்ல் வர்த்தகரிடம் இருந்து பொருட்களை விலைபேசி வாங்கியபின் பணத்தைக் கொடுக்க மாட்டான். இத்தகு தீய குணங்கள் பல அவர்களிடம் குடி கொண்டிருந்தன. மக்களைக் கொடுமைப்படுத்தினர். "இக்கொடுமைகளுக்கு அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டும், இத்தகு குற்றம் புரிவோர் தண்டிக்கப்படுவர்" என்று அல்குர்ஆன் பொதுப்படையாகக் கூறிய போது, இது தம்மையே சாடுவதாக தீமைகளின் மொத்த உருவான அவர்கள் கருதினர். முகம்மது (ஸல்) அவர்களின் போதனைகள், தாம் நீண்டகாலமாக, சுதந்திரமாகப் பின்பற்றிவரும் சமூகப் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் இழிவுபடுத்தி, தம் முன்னோர்க்கு அவமானத்தை ஏற்படுத்துகின்றன என்றும் கருதினர்.

குறைசியர் க.்.பாவின் பரிபாலகர்கள் என்பதால், அறேபியத் தீபகற்பத்தின் ஏனைய கோத்திரத்தவர்கள் அவர்களைக் கண்ணியப்படுத்தினர். அவர்களின் வர்த்தகப் பண்டங்கட்குப் பாதுகாப்பு வழங்கினர். இஸ்லாமிய நம்பிக்கையை ஏற்பதன் மூலம் மரபு ரீதியாகத் தாம் அனுபவித்து வந்த இவ்வுயரிய அந்தஸ்தை இழக்க வேண்டி வரும் என்று குறைசியர் பயந்தனர். குறைசிக் கோத்திரம் ஹாசிமி, உமையா, என்ற இரு முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்தது. இவ்விரு கிளைகளும் நீண்ட காலமாக அதிகாரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. அப்துல் முத்தலிபின் மரணத்துடன் ஹாசிமிக்களிடம் இருந்த அரசியல் அதிகாரம் உமையாக்களின் கைக்கு மாறியிருந்தது. இறைதூதை முகம்மது (ஸல்) பிரகடனப்படுத்திய போது, உமையாக்கள் கையே அரசியற் களத்தில் ஓங்கியிருந்தது. முகம்மது (ஸல்) அவர்களின் தூது அங்கீகரிக்கப்பட்டால் தமது அரசியற் தலைமை பறிபோகும் என்று உமையாக்களஞ்சினர். இதனால் உமையாக்களும் அவர்களது ஆதரவாளர்களும் இஸ்லாமியத் தூதைக் கடுமையாக எதிர்த்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முகம்மது (ஸல்) அவர்களுக்கு எதிராகக் குறைசியர் மேற் கொண்ட "பத்ரு" தவிர்ந்த ஏனைய எல்லாப் போர்களுக்கும், உமையாக் கோத்திரத் தலைவரான அபூசுப்யான் தலைமை தாங்கியமை நோக்கத்தக்கதாகும். ஒட்டகையின் அவிந்த உடற் பகுதியை முகம்மது (ஸல்) அவர்கள் தொழும்போது தோளில் போட்ட உக்பா பின் அபீமுஈத் உமையாக் கோத்திரத்தின் மற்றொரு முக்கிய பிரமுகராவார் என்பதும் நோக்கத்தக்கது.

அ..னக் பின் சரீக் என்பவர், ஹாசிமிக்களின் மற்றொரு பகைக் கோத்திரமான பனூம..தூமிக் கோத்திரத்தைச் சேர்ந்த அபூஜஹ்ல் இடம் முகம்மது (ஸல்) அவர்கள் பற்றிக் கேட்ட போது அவன் அளித்த பின்வரும் பதில் அரசியற் போராட்டப் பின்னணியை அழகாக உணர்த்துகிறது "பனூம..தூமிக்" கோத்திரத்தவரான நாமும் அப்துல் மனாப் கோதிரத்தவரும் நீண்டகாலப் பகைவர்களாவோம். அவர்கள் விருந்தளித்தால், அதற்கு சளைக்காதவாறு நாமும் விருந்தளிப்போம். போரில் அவர்கள் எங்களைச் சேர்ந்தவர்களைக் கொன்றால், நாங்களும் அவர்களைக் கொல்வோம். அவர்கள் தாராளத்தன்மையுடன் நடந்தால் அதை மிஞ்சக்கூடியதாக நாமும் செயற்படுவோம். எத்துறையிலும் நாம் அவர்களுக்குச் சளைத்தவர்களாக மாட்டோம். ஆயினும் தற்போது ஹாசிமிக்கள் தமக்கு வஹி வருவதாகக் கூறுகின்றனர். அவ்வாறு எம்மால் கொண்டுவர முடியாது. ஆதலால் அல்லாஹ்வின் மீது சத்தியமாக அவரது நபித்துவத்தை ஏற்கமாட்டோம்" ம..தூமிக் கோத்திரத் தலைவனான, வலீத் பின் முகைராவின் மருமகனான அபூஜஹ்லின் இக்கூற்று, ஹாசிமிக்களின் அரசியற் தலைமைத்துவத்தை அங்கீகரிக் கமறுத்தமையே இஸ்லாமியத் தூதை ஏற்பதை மறுக்கக் காரணமாகியது என்பதைக் காட்டுகிறது.

மக்காவின் பரிபாலன ஏற்பாடுகளில், ஹஜ்ஜாஜிகட்கு நீர் வழங்கும் "ஸிகாயா" எனும் பொறுப்பு மட்டுமே ஹாசிமிக்களிடம் இருந்தது. ஏனைய பொறுப்புக்கள் அனைத்தும் மற்றைய கோத்திரத்தவர்களிடம் இருந்தன. பின்வரும் அட்டவணை இதனை நன்கு புலப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| | உத்தியோகம் | கடமை | கோத்திரம் | முகம்மது (ஸல்) காலத்தில் பதவி வகித்தவர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | ஹிஜாபா | கஃபாவைப் பாதுகாத்தல் (கஃபாவின் சாவியை வைத்திருத்தல்) | | உதுமான் பின் தல்ஹா |
| 02 | ரிபாதா | உள்நாட்டு ஹஜ்ஜாஜிகளின் நலன்களைப் பேணல் | பனூ நவ்பல் | ஹாரித் பின் ஆமிர் |
| 03 | சிகாயா | ஹஜ்ஜாஜிகட்கு நீர் வினியோகித்தல் | பனூ ஹாசிம் | அப்பாஸ் |
| 04 | மஷ்வரா | ஆலோசனை, வழிகாட்டல் வழங்குதல் | பனூ அஸத் | யதீத் பின் ரபீஆ அல்அஸ்வத் |
| 05 | தியத் | கொலைக்கு வழங்க வேண்டிய நஷ்ட-ஈட்டுத் தொகையைத் தீர்மானித்தல் | பனூ தய்ம் | அபூபக்ர் |
| 06 | உக்காப் | போரில் கொடி தாங்குதல் | பனூ உமையா | அபூ சுபியான் |
| 07 | குப்பா | போரில் கூடாரம் அடித்தலும், குதிரைப் படைத் தளபதிப் பதவியும் | பனூ மக்தூம் | வலீத் பின் முகீரா |
| 08 | சிபாரா வ முனாபரா | தானாதிபதி | பனூ அதி | உமர் |
| 09 | அத்லம் வல் மய்சிர் | சகுணம் பார்த்தல் | பனூ ஜுமாஹ் | ஸப்வான் பின் உமையா |
| 10 | அம்வால் | திறைசேரி | பனூ ஷஹ்ம் | ஹாரிஸ் பின் கைஸ் |

ஆதாரம் : சிப்லி நுஃமானியின் "ஸீரதுன் நபி" - தொகுதி I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஹர்பு பின் உமையா குறைசியர்களின் மிகப் பெரும் தலைவர்களுள் ஒருவராவார். ஹர்புல் பிஜார் போர்களில் அவரே குறைசியருக்குத் தலைமை தாங்கினார். அது முதல், மக்காவில் ஹாசிமிக்களல்லாதவர்களின் செல்வாக்கு அதிகரிப்பதைக் காண முடிகிறது. ஹர்புல் பிஜாரின் பின், ம.்.தூமிக் கோத்திரத் தலைவரான வலீத் பின் முகைரா குறைசியர்களின் பொதுத் தலைமைப் பதவியை வகித்தார். அவரது மருமகன் அபூஜஹ்ல், உமையாக் கோத்திரத் தலைவர் அபூசுபியான், உத்பா பின் ரபீஆ, ஆஸ் பின் வாயில், உபை பின் க.்.ப், நழர் பின் ஹாரிஸ் பின் ஆமிர், அஸ்வத் பின் அபூ யகூத், உக்பா பின் அபீமுஈத், அபூலஹப் முதலாம் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் முகம்மது (ஸல்) அவர்களின் எதிரிகளாகவே செயற்பட்டனர். முகம்மது (ஸல்) முன்வைத்த தூதை ஏற்பதால் தமது பதவி, அதிகாரம், கண்ணியம், இவற்றின் வழி பெறும் ஏனைய நலன்களை எல்லாம் இழக்க நேரிடும் என்று பயந்ததாலேயே இத்தலைவர்கள் இறைதூதை நிராகரித்தார்கள். இவர்கள் இஸ்லாமிய சமய நம்பிக்கைக்கு எதிரானவர்கள் என்பதை விட, அத்தூது முன்வைத்த சமய, சமூக, அரசியற் புரட்சிக்கு எதிரானவர்கள் என்று கருதுவதே சரியானது. இவ்வெதிர்ப்புணர்வு காரணமாக இஸ்லாத்தை ஏற்போரைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## குறைசியர்களின் எதிர் நடவடிக்கைகள்

இஸ்லாமியத் தூது முன்வைக்கப்பட்ட ஆரம்ப காலப்பகுதியில் குறைசித் தலைவர்கள் அதனை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. "ஹினீபிய்யூன்"களின் கருத்தை மக்கள் நிராகரித்தது போல முகம்மது (ஸல்) அவர்களின் போதனையையும் புறக்கணிப்பர். அதனால் அவர்கள் நாளடைவில் தனிமையாகி விடுவர் என்று எதிர்பார்த்தார்கள். அவர்களின் எதிப்பார்ப்புக்கு மாற்றமாக, முஸ்லிம்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிப்பதைக் கண்டு விசனமடைந்தார்கள். ஆதலால் முகம்மது (ஸல்) அவர்களை எதிர்க்க, சாத்தியமான பல்வேறு வழிமுறைகளைக் கையாளலானார்கள். ஹிஜ்ரத் வரை அவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்க முடியும்:

அ. முகம்மது (ஸல்) அவர்களை இழிதகையவராகக் காட்ட முயற்சித்தல்.
ஆ. இஸ்லாத்தை ஏற்றோரைத் துன்புறுத்தல்.
இ. பேரம் பேசுதல்.
ஈ. சமூக ரீதியான நிர்ப்பந்தம்.

### அ. முகம்மது (ஸல்) அவர்களை இழிதகையவராகக் காட்ட முயற்சித்தல்

நுபுவ்வத்திற்கு முன்பு முகம்மது (ஸல்) அவர்களை நம்பிக்கைக்குரியவர் (அல்அமீன்), உண்மை பேசுபவர் (அஸ்ஸாதிக்) என்றெல்லாம் புகழ்ந்து பாராட்டிய குறைசியர், தமது விருப்பு வெறுப்புகட்கு மாறாக அவர்கள் செயற்படுகிறார்கள் என்று கண்டதும் அவர் பற்றி இல்லாததும் பொல்லாததுமான செய்திகளைப் பரப்பினர்.

முகம்மது (ஸல்) ஒரு சாத்திரகாரர், சூனியக்காரர், கவிஞர், பொய்யர், "லாத்", "மனாத்", "உஸ்ஸா" முதலாம் தெய்வங்களின் சாபத்தால் சுய நினைவிழந்தவர். சூனியத்தால் குடும்பங்களைப் பிரித்து வைக்கின்றார். ஒருமித்த கருத்துடைய மக்களிடையே பிரிவினையை, குழப்பத்தைத் தோற்றுவிக்கின்றார். பண்டைக்காலக் கதைகளைக் கூறி, மக்களைக் கவர முயற்சிக்கின்றார். மக்காவிற் தங்கியுள்ள கொல்லற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொழில் புரியும், கிறித்தவ அடிமையாகிய ஜாபிர் என்பவன் முகம்மது (ஸல்) அவர்களுக்கு அல்குர்ஆனைக் கற்றுக் கொடுக்கிறான் என்றெல்லாம் எடுத்துக் கூறி, அவர்களைச் சமூகத்தில் புறக்கணிக்கப்படத்தக்க இழிதகையவராக எடுத்துக் காட்ட முயற்சித்தனர்.

முகம்மது (ஸல்) அவர்களும் எங்களைப் போன்ற ஒரு மனிதர்; எங்களைப் போலவே நீர் அருந்துகிறார், உணவு உண்கிறார். இவர் ஒரு நபியாக இருந்தால் இவருக்குத் துணையாக ஒரு மலக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டாமா? அல்லது ஒரு புதையல் கொடுக்கப்பட்டிருக்கக் கூடாதா? அவர் ஒரு நபி எனின் பாலைவனத்தைச் சோலையாக்கட்டும். அன்றேல் மரித்துப்போன குசைஇயை மீண்டும் எழுப்பட்டும், மரணத்தின் பின் விசாரிக்கப்படுவதாக அவர் கூறும் விடயங்கள் உண்மைதானா என்று அவரிடம் கேட்போம். குசைஇ அதனை உண்மைப்படுத்தினால் இஸ்லாத்தை ஏற்போம், அன்றேல் அவர் குறிப்பிடும் தண்டனையை இறைவன் பால் இருந்து கொண்டுவரட்டும், இவற்றில் எதையும் நிறைவேற்றச் சக்தியில்லாத ஒருவரையா நபியாக ஏற்பது? இந்த நகரில் நபியாக அனுப்ப வேறு ஆட்களே கிடைக்கவில்லையா? என்றெல்லாம் கூறி முகம்மது (ஸல்) அவர்களைக் கிண்டல் பண்ண முயற்சித்தனர். எதுவித ஆற்றலும் அற்ற எம்மைப்போன்ற ஒருவர் இவர். இவரைக் கண்ணியமான எவரும் பின்பற்றக் கூடாது என்றெல்லாம் இகழ்ந்து பேசினர்.

மக்காக் குறைசியரின் இத்தகைய கூற்றுகள் முகம்மது (ஸல்) அவர்களின் உள்ளத்தைப் பெருமளவு உறுத்தின. ஆதலால் குறைசியரின் அத்தகைய சாடுதல்களுக்கு அல்லாஹ்வே அல்குர்ஆன் ஊடாகப் பதிலளித்து, அவர்களைத் தன் பணியில் ஈடுபட உற்சாகப்படுத்துவதைப் பின்வரும் அல்குர்ஆன் ஆயத்துக்கள் காண்பிக்கின்றன.

> "(நபியே! உம்மைப்பற்றி) அவர்கள் தூஷணையாகக் கூறுபவை உம் இருதயத்தை நெருக்குகிறது என்பதை நிச்சயமாக நாம் அறிவோம். (அதை நீர் ஒருசிறிதும் பொருட்படுத்தாதீர்)"
> (15:97)

> "நிராகரிப்போர் கூறுகின்றனர்: (திருக்குர்ஆனாகிய) இது பொய்யாகக் கற்பனை செய்து கொண்டதேயன்றி வேறில்லை. இ(தைக் கற்பனை செய்வ)தில் வேறு ஜனங்கள் அவருக்குதவி புரிகின்றனர் (ஆனால் உண்மை என்ன வென்றால் இதன் மூலம் அவர்களே அக்கிரமத்தையும் பொய்யையும் கூறுகின்றனர்" (25:4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"அன்றி இது முன்னோர்களின் கட்டுக்கதை (இவ்வாறு) இது காலையிலும் மாலையிலும் இவருக்கு ஓதிக் காண்பிக்கப்படுகின்றது. இதனை இவர் (மற்றொருவரின் உதவியைக் கொண்டு) எழுதிக் கொள்கிறார் என்றும் அ(ந்நிராகரிப்ப)வர்கள் கூறுகின்றனர்."

"(பின்னும்) அவர்கள் கூறுகின்றனர் இந்தத் தூதருக்கென்ன (நேர்ந்தது)? அவர் (நம்மைப் போலவே) உணவருந்துகிறார், கடைக்குச் செல்கிறார். (அவர் இறைவனுடைய தூதராக இருந்தால்) அவருக்காக ஒரு மலக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவர் அவருடன் சேர்ந்து அச்சமூட்டி எச்சரிக்கை செய்துகொண்டிருக்க வேண்டாமா?"

"அல்லது அவருக்கு ஒரு புதையல் கொடுக்கப்பட வேண்டாமா? அன்றி இவ்வக்கிரமக்காரர்கள் (விசுவாசிகளை நோக்கி), நீங்கள் சூனியம் செய்யப்பட்ட மனிதரையே பின்பற்றுகிறீர்கள் என்றும் கூறுகின்றனர்" (25:8)

"இது ஒரு கவிஞருடைய சொல்லன்று எனினும் இதனை நீங்கள் வெகு சொற்பமாகவே விசுவாசிக்கின்றீர்கள்." (69:41)

"எனவே நாங்கள் பைத்தியங் கொண்ட ஒரு கவிஞருக்காக எங்களுடைய தெய்வங்களை மெய்யாகவே விட்டுவிடுவோமா" (37:36)

"நபியே! உமதிறைவனின் அருளால், நீர் குறிசொல்வோருமல்ல, பைத்தியக்காரருமல்ல என்பதை (நிராகரிப்போருக்கு) நீர் நினைவூட்டும்! (உம்மைப்பற்றி, அவர்) ஒரு கவிஞர்தாம். அவருடைய விதியின் முடிவை நாம் எதிர்பார்த்திருப்போம் என்று அவர்கள் கூறுகின்றனரா? (ஆகவே அவர்களை நோக்கி, அதனை) நீங்களும் எதிர்பார்த்திருங்கள். (என்ன நடக்கிறதென்பதை) நிச்சயமாக நானும் உங்களுடன் எதிர்பாத்திருப்பேன் என்று கூறுவீராக"

"(நபியே!) நீர் உமதிறைவனின் அருளால் பைத்தியக்காரர் அல்ல நிச்சயமாக உமக்கு முடிவுறாத (நீடித்த) ஒரு கூலி இருக்கிறது. நிச்சயமாக நீர் மகத்தான நற்குணங்கள் உடையவராகவே இருக்கின்றீர்." (68:14) 68:2-4)

"(மக்காவாசிகளே! நம்முடைய தூதரான) உங்களுடைய சிநேகிதர் பைத்தியக்காரர் அல்ல" (82:22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"(நபியே! இவ்வேத வசனங்களை ரூம் நாட்டில் இருந்து வந்திருக்கும்) ஒரு (கிறித்தவ) மனிதனே நிச்சயமாக அவருக்கு கற்றுக் கொடுக்கிறான் (இறைவனல்ல) என்று அவர்கள் கூறுவதை நிச்சயமாக நாம் அறிவோம். எவன் (உமக்கு) கற்றுக் கொடுப்பதாக அவர்கள் கூறுகின்றார்களோ, அ(ந்தக் கிறித்த)வனுடைய மொழி (அறபி அல்லாத) அஜமி. இவ்வேதமோ மிக (நாகரிகமான) தெளிவான அறபி (மொழியில் இருக்கிறது. ஆகவே அவர்கள் கூறுவது சரியன்று)".

"(நபியே!) இப்பூமியில் இருந்து ஓர் ஊற்றுக்கண் நமக்காகத் தோன்றினாலன்றி நாம் உம்மை விசுவாசிக்க மாட்டோம் என்று அவர்கள் கூறுகின்றனர், அல்லது மத்தியில் சதா நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கக் கூடிய, திராட்சை, பேரீச்சை (மரங்களை)யுடைய ஒரு சோலை உமக்கிருந்தாலன்றி (உம்மை விசுவாசிக்க மாட்டோம் என்று கூறுகின்றனர்). அல்லது நீர் எண்ணுகிற பிரகாரம் வானம் இடிந்து, அதில் ஒரு துண்டு எங்கள் (தலை) மீது விழுந்தாலன்றி (உம்மை நாம் விசுவாசிக்க மாட்டோம் என்று கூறுகின்றனர்) அல்லது (மிக்க அழகான) பொன்னாலாகிய ஒரு மாளிகை உமக்கிருந்தாலன்றி (நாம் விசுவாசிக்க மாட்டோம்) அல்லது நீர் வானத்தின் மீது ஏறிய போதும் (நாம் விரும்புகிற ஒரு வேதத்தை நீர் இறக்கி வைத்தாலன்றி அதில்) நீர் ஏறியதாக நாம் நம்ப மாட்டோம் என்று கூறுகின்றனர். (அதற்கு) நீர் கூறும்! என் இறைவன் மிகப் பரிசுத்தமானவன் நான் (உங்களைப் போன்ற) ஒரு மனிதன்தான். எனினும் (அவனால் அனுப்பப் பெற்ற) ஒரு தூதர் என்பதைத் தவிர வேறு உண்டா?" (17:90-93)

"(நபியே! உம்மை நோக்கி) அவர்கள் கூறுகின்றனர்: வேதம் அருளப் பெற்றவரே! நீர் நிச்சயமாகப் பைத்தியக்காரர்தான்" (15:6)

"இவர்களிடம் இந்த சத்திய(வேத)ம் வரவே, இவர்கள் இது "சூனியம்தான்", நிச்சயமாக நாங்கள் இதனை நிராகரிக்கின்றோம் என்று கூறுகின்றனர். அன்றி, (தாயிப், மக்கா ஆகிய) இவ்விரண்டு ஊர்களிலும் உள்ள யாதொரு பெரிய மனிதன் மீது இந்தக் குர்ஆன் இறக்கிவைக்கப்பட்டிருக்க வேண்டாமா என்று கூறுகின்றனர்" (43:30-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"கடிதத்தில் எழுதப்பட்ட ஒரு வேதத்தையே நாம் உம்மீது அருள் செய்து, அதனை அவர்கள் தங்கள் கைகளால் தொட்டுப் பார்த்திருந்த போதிலும், இது; பகிரங்கமான சூனியத்தை தவிர வேறில்லை என்றே நிச்சயமாக இந்நிராகரிப்போர் கூறியிருப்பர்" (6:7)

நாற்பது வருடகாலம் குறைசியர் மத்தியில் வாழ்ந்த, அவர்களால் கண்ணியப்படுத்தப்பட்டு பாராட்டப்பட்ட முகம்மது (ஸல்), அதே மக்களால் பழித்துரைக்கப்பட்டு, கொடுமைகளுக்குள்ளாக்கப்படும் போது ஏற்படும் கவலை இரட்டிப்படைவது இயற்கையே. ஆதலால் எதிரிகளின் பழிச் சொற்களையும், கொடுமைகளையும் எடுத்துக்காட்டி, அவற்றை எதிர்கொள்ள வேண்டிய வழிமுறைகளையும் அல்லாஹ் முகம்மது (ஸல்) அவர்களுக்கு உணர்த்தி, தொடர்ந்து இஸ்லாமியப் பிரசாரப் பணியில் ஈடுபட ஊக்குவித்தான். மேலே எடுத்தாண்ட அல்குர்ஆன் ஆயத்துக்கள், குறைசிக்காபிர்கள் முகம்மது (ஸல்) அவர்களை இழிதகைய அற்பராக எடுத்துக்காட்ட முயற்சித்ததைச் சுட்டிக்காட்டுகின்றன. இஸ்லாமியத் தூதைப் புறக்கணித்து ஒரு போதும் ஜயம் பெற முடியாது என்பதையும், இறைதூதரைப் பின்பற்றுவோர் நிச்சயம் ஜயம் பெறுவார்கள் என்பதையும் அல்குர்ஆன் சுட்டிக்காட்டி, இறைத்தூதரை ஊக்குவிப்பதை அல்குர்ஆன் ஊடாக அறிய முடிகிறது. பின்வரும் அல்குர்ஆன் ஆயத்துக்கள் இங்கு சிந்திக்கத்தக்கன.

"(நபியே! உம்மைக் குறிகாரர் என்றும், பைத்தியக்காரர் என்றும் கூறும்படி) அவர்களுடைய அறிவுதான் இவ்வாறு அவர்களைத் தூண்டுகிறதா? அல்லது, (இயற்கையாவே) அவர்கள் விஷமிகளான ஜனங்கள்தாமா? அல்லது அவர் (பொய்யாகவே) அதனைக் கற்பனை செய்து கொண்டார் என்று அவர்கள் கூறுகின்றனரா? அன்று. மனமுரண்டாகவே இதனை அவர்கள் விசுவாசம் கொள்வதில்லை. (நபியே! இதனை நீர் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டீரென்று கூறுவதில்) அவர்கள் உண்மை சொல்பவராக இருந்தால், இதைப் போன்றதொரு வாக்கியத்தைக் கொண்டுவரவும் அல்லது இவர்கள் ஒன்றுமின்றி தாமாகவே உண்டாகிவிட்டனரா? அல்லது இவர்கள் தம்மைத்தாமே சிருஷ்டித்தார்களா? அன்று. (இவைகளையெல்லாம் சிருஷ்டித்தவன் இறைவன்தான் அவனை) இவர்கள் நம்புவதில்லை. அல்லது இவர்களிடமே உமதிறைவனின் பொக்கிஷங்கள் (யாவும்) இருக்கின்றனவா? அல்லது இவர்களே (அவற்றின்) நிர்வாகிகளா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"அல்லது, இவர்களுக்கு (வானத்தில் ஏறக்கூடிய) ஏணி இருந்து அதில், ஏறி (அங்கு சென்று நடக்கும் சம்பாஷனைகளை)க் கேட்டு வருகின்றானரா? அவ்வாறாயின் (அவைகளை) இவர்கள் கேட்டு வந்ததற்குத் தெளிவான ஓராதாரத்தைக் கொண்டுவரவும். அல்லது, (நீங்கள் கூறுகிற பிரகாரம் அல்லாஹ்வாகிய) அவனுக்குப் பெண் சந்ததிகளும் உங்களுக்கு (மட்டும்) ஆண் சந்ததிகளுமா? அல்லது நீர் ஏதும் இவர்களிடம் கூலி கேட்டு, அந்தப் பளுவை இவர்கள் சுமக்க முடியாதிருக்கின்றார்களா?" (52:32-40)

"வானத்தில் இருந்து (இடிந்து), ஒரு துண்டு விழுவதை இவர்கள் கண்ணால் கண்டபோதிலும், (அது வானமல்ல) அது உறைந்து இறுகிவிட்ட மேகந்தான் என்று கூறுவார்கள். (நபியே இவர்களுடைய அறிவு பிறழ்ந்து) நிலைதடுமாறும் நாளை இவர்கள் சந்திக்கும் வரையில் நீர் இவர்களை விட்டுவிடும். அந்நாளில் இவர்களுடைய சூழ்ச்சிகள் ஒன்றுமே அவர்களுக்குப் பயனளிக்காது. எவராலும் இவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்" (52:44-46)

"(நபியே!) உமக்கு முன்னர் சென்றுபோன கூட்டங்களுக்கு நிச்சயமாக நாம் தூதர்கள் பலரை அனுப்பிவைத்தோம். எனினும் அவர்களிடம் நம்முடைய எந்தத் தூதர் வந்தபோதிலும் அவர்கள் அவர்களைப் பரிகாசம் செய்யாதிருக்கவில்லை" (15:10-11)

நபிமார்கள் பரிகசிக்கப்பட்டதும், கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டதும் வரலாற்றுண்மை. ஆதலால் அந்நடைமுறையில் முகம்மது (ஸல்) அவர்களும் பரிகசிக்கப்படுவது இயல்பே. ஆதலால் அதுபற்றி அலட்டிக் கொள்ளாது, தன் பணியைத் தொடர்ந்து செய்தல் வேண்டும் என்று அல்லாஹ் மேற்குறித்த ஆயத்துகள் மூலம் சுட்டிக் காட்டுகின்றான்.

எதிரிகளின் பழிச் சொற்களை மறுத்துரைத்துப் பொய்ப்பிப்பதுடன் மட்டுமே இறைத்தூதர்கள் திருப்தியடைய முடியாது. மாறாக தம்மைப் பழித்துரைப்பவர்களையும், விமர்சித்துக் கொடுமை செய்பவர்களையும் இஸ்லாத்தின் பால் ஈர்க்கச் செய்வதற்கு முயற்சிப்பது அவர்களது முக்கிய பணியாகும். இதனால் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படுவதைத் தவிர்த்து, அனுதாபத்துடன் அவர்களை அணுகும் வழிமுறையை இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்கள் கையாண்டார்கள். இவ்வழிமுறையை அல்குர்ஆன் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"(நபியே!) நீர் மன்னிப்பை மேற்கொண்டு, நன்மையை ஏவி வருவீராக! அன்றி அறிவீனர்களைப் புறக்கணித்து விடும்" (7:119)

எதிரிகளை அணுகும் மூன்று வழிமுறைகள் இக்குர்ஆன் ஆயத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அ. கருணை நிறைந்த உள்ளத்துடனும் பரந்த நோக்குடனும் எதிரிகளை அணுகி, அவர்களின் பழிச் சொற்களையும் கொடுமைகளையும் பொறுமையாக எதிர்கொண்டு மன்னித்துவிடுதல்.

ஆ. அவர்களின் கொடுமைகளுக்கு அஞ்சி, நல்லவற்றையும் உண்மைகளையும் ஏவுவதை நிறுத்தாது, தொடர்ந்து த:.வாப் பணியில் ஈடுபடுதல்.

இ. வம்பர்களுடன் வீணாக உரையாடுவதைத் தவிர்த்து, புறக்கணித்து விடுதல். அவர்களின் குத்தல் வார்த்தைகளைக் கருத்திற் கொள்ளாது, அல்லாஹ்வின் துணையை நம்பிச் செயற்படுதல்.

பின்வரும் குர்ஆன் ஆயத்துக்களும் இவ்வழிமுறையை வலியுறுத்துவதைக் காணலாம்.

"நபியே அல்லாஹ்வுடைய அருளின் காரணமாகவே நீர் அவர்களின் மீது இரக்கமுள்ளவரானீர். கடுகடுப்பானவராகவும் கடின சித்தமுள்ளவராகவும் நீர் இருந்திருப்பீராயின், உம்மிடம் இருந்து அவர்கள் வெருண்டோடியிருப்பார்கள். ஆகவே, அவர்களின் குற்றங்களை நீர் மன்னித்து, (இறைவனும்) அவர்களை மன்னிக்கக் கோருவீராக." (3:159)

"ரஹ்மானுடைய நன்றிமிக்க அடியார்கள் (யார் என்றால்), பூமியில் (அடக்கமாகவும்) பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால், "ஸலாமுன்" என்று கூறி (அவர்களை விட்டு விலகி) விடுவார்கள். (25:63)

அல்குர்ஆனின் அத்தகு வழிநடத்தல் காரணமாக, தம்மை அற்பராகக் கணித்துச் செயற்பட்ட கொடியவர்களுடனும், சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் இதமாகப் பேசி இஸ்லாத்தை முன்வைத்தார்கள்.

நுபுவ்வத் வரை "அல்அமீன்", "அஸ்ஸாதிக்" என்று வாயாரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

புகழ்ந்து வாழ்த்திய பின், சூனியக்காரன், சாத்திரக்காரன், கவிஞன் என்றெல்லாம் சொன்னால் எவர் நம்புவர். மக்காவில் சூனியக்காரரும் சாத்திரக்காரர்களும், கவிஞர்களும் இருந்தனர். அவர்களது பண்புகளை மக்காவாசிகள் நன்கு அறிந்திருந்தனர். அத்தகு பண்புகள் எதுவும் முகம்மது (ஸல்) அவர்களிடம் இருக்கவில்லை. ஆதலால் அவர்களை அத்தகு பெயர்களால் அழைப்பது பொறுத்தமற்றது என்று குறைசியர் அறிந்திருந்தனர். ஆனால், அவர்களை இலாயக்கற்றவர்கள் என்று எடுத்துக்காட்ட வேறு வழிகளை தேடிக்கொள்ள முடியவில்லை. அத்தகு அப்பழுக்கற்ற வாழ்க்கைச் சரித்திரத்தை முகம்மது (ஸல்) கொண்டிருந்தார். இதனால் அற்ப மனிதராக அவரைக் காட்டி, மக்கள் கவனத்தை அவரின் தூதில் இருந்து தூரமாக்க எடுத்த முயற்சிகள் வியர்த்தமாயின. அதனால் முஸ்லிம்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்தது. இவ்வாறு தமது முதல் முயற்சி தோல்வியடைவதைக் கண்டபோதும், சோர்ந்து விடாது இன்னும் சற்றுத் தீவிரமாக வேறு வழிகளைக் கையாளலானார்கள்.

## ஆ. இஸ்லாத்தை ஏற்றோரைத் துன்புறுத்தல்

முகம்மது (ஸல்) பகிரங்கமாக இஸ்லாத்தைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தது முதலே குறைசியர் அதனைத் தடுக்க முயற்சித்தார்கள். அதன் மற்றொரு கட்டமாக, இஸ்லாத்தை ஏற்றோரைத் துன்புறுத்தலானார்கள். கோத்திர பலமற்ற, சாதாரண குடிமக்கள் இதனால் கடும் துன்பத்துக்குள்ளானார்கள். இருந்தபோதும் முகம்மது (ஸல்) உட்பட அபூபக்ர் (றழி) முதலாம் பிரமுகர்களும் இத்துன்புறுத்தலில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

ஒரு முறை முகம்மது (ஸல்) அவர்கள் க:.பாவில் வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, உக்பா பின் அபீமுஈத் என்பவன், முறுக்கேற்றிய புடைவையை ஸுஜூதில் இருந்த இறைதூதரின் கழுத்தில் போட்டுப் பிணைத்து இழுத்தான். அச்சந்தர்ப்பத்தில் அவ்விடத்துக்கு வந்த அபூபக்ர் (றழி) அவர்கள் உக்பாவை ஒரு புறம் தள்ளி முகம்மது (ஸல்) அவர்களைப் பேராபத்தில் இருந்து காப்பாற்றினார்கள். மற்றொருமுறை, அபீமுஈத் என்பவன் கன்று ஒன்றை ஈன்ற ஒட்டகையின் துர்நாற்றமுள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டு வந்து, க:.பாவில் தன் நெற்றியை வைத்து ஸுஜூதில் இருந்த முகம்மது (ஸல்) அவர்களின் கழுத்தில் போட்டுவிட்டு, எள்ளிநகையாடிக் கொண்டிருந்தான். தற்செயலாக அவ்வழியே வந்த சுமார் ஐந்து வயதடைந்திருந்த சிறுமி பாத்திமா அவ்வசுசியை அப்புறப்படுத்தினார். இந்நிகழ்விற்குக் காரணகர்த்தாக்களாக இருந்த அம்ரிப்னு ஹிசாம் (அபூஜஹ்ல்), உத்பத் இப்னு ரபிஆ, வலீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின் உத்பா, உஸாமா பின் கலப், உக்பா பின் அபீமுஈத், அம்மரத் பின் வலீத் என்போர்க்கு எதிராக அல்லாஹ்விடம் இறைதூதர் பிரார்த்தித்தார்கள். இவர்களில் உக்பா பின் அபீமுஈத் தவிர்ந்த மற்றவர்கள் பத்ருக் களத்தில் கொலைசெய்யப்பட்டனர். உக்பா பின் அபீமுஈத் பத்ரில் சிறைப்பிடிக்கப்பட்டு, ரஸூலுல்லாஹ்வின் கட்டளைப்படி கொலைசெய்யப்பட்டான். முகம்மது (ஸல்) அவர்களது அயல் வீட்டாரான அபூலஹப், உக்பா பின் அபூமுய்யத் ஆகிய இருவரும் முகம்மது (ஸல்) அவர்களின் வீட்டு வாயலில் அழுக்குகளையும் அசூசிகளையும் கொட்டுவார்கள். அவர்கள் செல்லும் வழியில் அபூலஹபின் மனைவி முட்களைப் பரப்புவாள். அவர்கள் பாதையில் செல்லும் போது காபிர்கள் வீட்டுக் கூறையில் இருந்து அழுக்கு வாளிகளைத் தலையில் கொட்டுவார்கள். பாதையில் செல்லும்போது, சிறுவர்களைத் தூண்டிவிட்டுக் கேலி செய்வார்கள். தாயிபில் இருந்து மீண்டுவரும் போது, காலில் இருந்து இரத்தம் கசியும் வரை சிறுவர்களைக் கொண்டு கல்லால் அடிப்பித்தார்கள்.

முகம்மது (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய தோழரான அபூபக்ர் (றழி) அவர்களும் குறைசியரின் கொடுமைக்குள்ளானார்கள். முஸ்லிம்களின் எண்ணிக்கை முப்பத்தெட்டளவில் இருந்தபோது, ஒருதினம் க..பாவில் வைத்து அபூபக்ர் (றழி) இஸ்லாத்தில் இணைந்துகொள்ளுமாறு குறைசியருக்குப் பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்கள். அதனால் ஆத்திரம் அடைந்த குறைசியர், அபூபக்ர் (றழி) அவர்களைக் கடுமையாகத் தாக்கினார்கள். உத்பா பின் ரபிஆ தான் அணிந்திருந்த சப்பாத்தினால் அடித்தான். அபூபக்ர் (றழி) சுய நினைவிழந்தார்கள். அப்போது அவரது கோத்திரத்தவரான பனூதய்ம் கோத்திரத்தவர்கள், கோத்திர உணர்வு காரணமாக அவரைப் பாதுகாக்க முன்வந்தனர். அபூபக்ர் இறந்தால் உத்பா பின் ரபிஆவிடம் பழிவாங்குவோம் என்று அச்சுறுத்தினர். அன்றைய பகற்போதின் பிற்பகுதியிற்தான் அவருக்குச் சுய நினைவு மீண்டது. இதேபோல ஹஸரத் உதுமான் (றழி) அவர்களும் கயிற்றால் கட்டப்பட்ட பின் அவரது மாமன் ஹகம் இப்னு ஆஸினால் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஸுபைர் இப்னுல் உவாம் (றழி) அவர்களை, அவரது மாமன் பாயிற் சுருட்டி, சுவாசிக்கச் சிரமப்படுவதற்காக மூக்கிற் புகைபிடித்தார். இதே போல் உமர் (றழி) அவர்களின் மைத்துனரான ஸஇத் பின் ஸைத், அபூதர் (றழி) போன்ற கோத்திரப் பலமுடைய முக்கிய ஸஹாபாக்களும் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டார்கள்.

இஸ்லாத்தை ஏற்றிருந்த பனூ தமீம் கோத்திரத்தைச் சேர்ந்த அடிமை ஹப்பாப் இப்னுல் அறத் ஒருதினம் நெருப்புத் தழல் மீது படுக்கவைக்கப்பட்டார். திரும்பவோ, எழும்பவோ முடியாதவாறு ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவரை காலால் மிதித்துக் கொண்டிருந்தான். அவரது தசையில் இருந்து நிணம் வடிந்து, நெருப்புத் தழல் அணையும் வரை பலாத்காரமாகப் படுக்கவைக்கப்பட்டார். யெமன் தேசத்தவரான அம்மார் பின் யாசிர் (றழி) அவர்களின் குடும்பமே சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டது. அம்மார் (றழி)இன் தாயார் சுமையா (றழி) அவர்களின் அடிவயிற்றில் அபூஜஹ்ல் ஈட்டியால் தாக்கியதன் காரணமாக அவர் இறந்தார். அம்மார் (றழி) இன் தந்தை யாஸிர் (றழி) குறைசியரின் கொடுமையினால் இறந்தார்கள். அபீசீனியா அடிமை பிலால் (றழி) அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமை சொல்லுந்தரமன்று. சுடுமணலில் நடுப்பகலில் கிடத்தி, அசையமுடியாதவாறு நெஞ்சில் பெருங்கல் ஒன்றை வைத்து, இஸ்லாத்தை விட்டு விடுமாறு வற்புறுத்தினர். அதற்கிணங்காதபோது பிலாலின் கழுத்தில் கயிற்றைக் கட்டி தெரு வழியே ஒரு கோணத்தில் இருந்து மறு கோணம் வரை இழுத்துச் சென்றனர். அதேபோல் அபூபகீஹ் ஜுஹைனியையும் கயிற்றால் கட்டி, சுடு மணலில் இழுத்துச் சென்றனர். ஒரு முறை ஒரு பெரும் பாராங்கல்லை அவரது மார்பில் வைத்தபோது, அவரது நாவு வெளியே தொங்கும் அளவு நெருக்குண்டார். ஹஸரத் உமர் (றழி), தனது அடிமைப் பெண்களான லுபைனா, ஸின்னீரா ஆகிய இருவரையும் கொடுமைப்படுத்தினார். நஹ்தியா, உம்மு உமைஸ் எனும் மற்றிரு அடிமைப் பெண்களும் கூட சொல்லொண்ணாத் துன்பத்துக் குள்ளாக்கப்பட்டனர். எத்தகு கொடுமைகள் சித்திரவதைகள் செய்த போதும், எந்த ஒரு முஸ்லிமையும் குறைசியர்களால் இஸ்லாத்தில் இருந்து மீட்டு எடுக்க முடியவில்லை. இதனால் குறைசியர் இஸ்லாத்தை ஏற்ற அடிமைகளை மேலும் மேலும் துன்புறுத்தினர். ஹஸரத் பிலால், ஆமிர் பின் புஹைறா, லுபைனா, ஸின்னீரா, நஹ்தியா, உம்மு உமைஸ் ஆகிய அடிமைகளைப் பெருந்தொகை கொடுத்து அபூபக்ர் (றழி) விடுதலை செய்விக்கும் வரை அவர்கள் இத்தகு கொடுமைகளை அனுபவித்தார்கள்.

### இ. பேரம் பேசுதல்

உத்பா பின் ரபீஆ என்பவர் குறைசிப் பிரமுகர்களில் ஒருவர். இஸ்லாமியத் தூதை எதிர்த்தவர், எனினும் அபூஜஹ்ல் போன்ற கடும் போக்குடையவர் அல்லர். ஒரு தினம் தன் நண்பர்களோடு கஃபாவில் அமர்ந்திருக்கும் போது, இறைதூதர், கஃபாவின் மற்றொரு கோணத்தில் தனிமையாக இருப்பதை அவதானித்தார். தன் தோழர்களின் அனுமதியுடன் அவர் தனிமையாகச் சென்று அவர்களுடன் உரையாடினார்.

"என் சகோதரன் மைந்தனே! எமக்கு மத்தியில் உமக்குள்ள கண்ணியத்தை நீர் அறிவீர். நீர் முன்வைத்துள்ள தூதினால் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமூகம் இருகூறாகப் பிரிந்துள்ளது. நீர் எமது மக்களின் சமயத்தை, கடவுளரை, சம்பிரதாயங்களை நிராகரிக்கின்றீர். நான் சொல்லப் போவதைச் சற்று அவதானியும். அவற்றில் சிலவற்றையேனும் நீர் ஏற்றுக் கொள்ளக் கூடும்" என்ற போது, முகம்மது (ஸல்) செவிமடுக்க இணங்கினார்கள். அப்போது உத்பா பின்வருமாறு ஆலோசனை வழங்கினார்.

"என் சகோதரன் மைந்தனே! நீர் முன்வைத்துள்ள தூதின் நோக்கம் செல்வத்தைத் திரட்டுவது என்றால், நாம் உம்மைக் குபேரன் ஆக்குவோம். கண்ணியம், ஆட்சி, அதிகாரம் என்றால் அதனைப் பெற்றுத் தருவோம். உம்மை மன்னராக்கி விடுவோம். ஜின்களின் பார்வையால் நீர் நோய்வாய்ப்பட்டுக் குணமாக்கச் சக்தியில்லையென்றால், எமது செல்வத்தை எல்லாம் செலவிட்டு, நல்லதொரு வைத்தியர் மூலம் பரிகாரம் தேடுகிறோம்" என்றார். இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டிருந்த முகம்மது (ஸல்) அவர்கள், வேறு ஏதும் கூறுவதற்குண்டா? என்ற போது உத்பா இல்லை என்று பதில் அளித்தார். அதன்பின், முகம்மத் (ஸல்) புஸ்ஸிலத் (ஹாமீம் ஸஜதா) எனும் 41ஆம் சூராவை அதன் 39 ஆயத்து வரை ஓதினார்கள். ஓதிமுடியும் வரை உத்பா பின் ரபீஆ அமைதியாகச் செவி மடுத்தான். அதன் பின் முகம்மது (ஸல்) அவர்கள், "உங்கள் கோரிக்கை பற்றி நான் கூற வேண்டிய பதிலைக் கூறிவிட்டேன். நீங்கள் விரும்பியவாறு செயற்படலாம்" என்றார்கள்.

இக்குர்ஆன் ஆயத்துக்களைச் செவிமடுத்த உத்பா தன் நண்பர்களிடம் சென்று சத்தியமாக இது போன்ற ஒன்றை நான் இதுவரை கேட்டதில்லை, நிச்சயமாக அது கவிதையுமல்ல, சூனியக்காரனதோ, சாத்திரகாரனதோ பேச்சுமல்ல. எனது கருத்துக்குச் செவிமடுங்கள் அவரை அவரது வழியில் விட்டுவிடுங்கள். அவரது கருத்துக்கள் பாரிய விளைவுகளைக் கொண்டுவரப் போகின்றன.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ரிவாயத் செய்துள்ள ஹதீஸ் ஒன்று, பேரம் பேசிய மற்றொரு நிகழ்வைச் சுட்டிக்காட்டுகிறது. அது வருமாறு.

குறைசித் தலைவர்களில் சிலர் முகம்மது (ஸல்) அவர்களிடம் சென்று, நீங்கள் விரும்பின் உங்களை மக்காவின் மிகப் பெரும் தனவந்தராக்குகிறோம். நீங்கள் விரும்பும் எந்த அழகிய பெண்ணையும் விவாகம் செய்து தருகிறோம். உங்களை எங்கள் தலைவராக ஏற்று உங்கள் கட்டளைகளுக்குக் கீழ்படிந்து நடக்கின்றோம். அதற்குப் பதிலாக நீங்கள் எங்கள் கடவுளரை விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். இதற்கு இணங்க முடியாவிடின், உங்களுக்கும் எங்களுக்கும் பயன் தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மற்றொரு வழிமுறையைக் குறிப்பிடுகிறோம் என்று கூறி, நாம் வணங்கும் "லாத்", "மனாத்", "உஸ்ஸா"வை நீங்கள் ஒரு வருட காலத்துக்கு வணங்குங்கள். அதே அளவு காலப்பகுதியில் நாம் நீங்கள் குறிப்பிடும் கடவுளுக்கு வணக்கம் செலுத்துகின்றோம் என்றனர். இக்கோரிக்கையை அல்லாஹ் நிராகரித்து சூரதுல் காபிரூனை அருளினான்.

மற்றொரு சந்தர்ப்பத்திலும் இத்தகு கோரிக்கைகளை குறைசித் தலைவர்கள் முன்வைத்த போது, "எனது இலட்சியம் உங்கள் கோரிக்கைகளில் இருந்து மிகத் தூரமானது. செல்வமோ தலைமைத்துவமோ எனது இலக்கல்ல. இறைவன் அவனது தூதராக என்னை அனுப்பியுள்ளான். உங்களை அச்சமூட்டி எச்சரிக்குமாறும், இறை அழைப்பை ஏற்போருக்கு நன்மாராயம் கூறுமாறும் ஏவியுள்ளான். அதனை உங்களுக்கு அறிவித்து எனது பொறுப்பை நிறைவேற்றியுள்ளேன். இதனை ஏற்றால் இருவுலக வாழ்க்கையிலும் நீங்கள் ஜயம் பெறுவீர்கள். நிராகரித்தால் அல்லாஹ்வின் தீர்ப்புக்காக நான் பொறுமையாக இருப்பேன்" என்று பதில் உரைத்தார்கள்.

முகம்மது (ஸல்) அவர்களின் இப்பதிலைக் கேட்டு, தமது முயற்சியில் நம்பிக்கையிழந்த குறைசித் தலைவர்கள், நிறைவேற்ற முடியாதவை என்று கருதும் சில அற்புதங்களைச் செய்து காட்டுமாறும், அவற்றைச் செய்து காணபிப்பின் தாம் இஸ்லாத்தில் இணைவதாகவும் கூறினர். அவர்களது கோரிக்கைகள் வருமாறு:

அ. நமது நாடு மிகவும் சிறியது. நீர், நில வளமற்றது, ஆதலால் அருகில் உள்ள மலைகளை அகற்றி நாட்டை விசாலமாக்கி நீரோடைகளால் வளமாக்குங்கள்.

ஆ. இறந்துபோன குறைசிக் கோத்திரத் தலைவரான குசை பின் கிலாப் என்பவரை எழுப்புங்கள். உமது செய்தி பற்றி அவரிடம் கேட்கிறோம். அவர் உண்மைப்படுத்தினால் உம்மை நபி என்று ஏற்போம்.

இ. இவற்றில் ஒன்றையேனும் நிறைவேற்ற முடியாவிட்டால் நீர் குறிப்பிடும் இறை தண்டனையைக் கொண்டுவாரும்.

இவற்றுக்காகத் தான் அனுப்பப்படவில்லை என்று முகம்மது (ஸல்) விடையளித்தார்கள். பனூஆமிர் கோத்திரத் தலைவனான பைஹரா என்பான் இறைதூதரின் போதனைகளுக்குச் செவிமடுத்தான். பின் அவர்களிடம் சென்று, "உங்கள் தூதை நாம் ஏற்றுக் கொண்டு, எதிரிகளை வெற்றி கொண்ட பின், இவ்வியக்கத்தின் தலைமைப் பதவியை உங்கள் மரணத்தின் பின் என்னிடம் ஒப்படைப்பீர்களா?" என்று கேட்டான். "எனக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாரிசாக எவர் வருதல் வேண்டும் என்று அல்லாஹ் விரும்புகின்றானோ அவரை வாரிசாக ஏற்படுத்தட்டும்" என்று முகம்மது (ஸல்) அவர்கள் விடை பகர்ந்தார்கள். அதைக் கேட்ட பைஹரா களத்தில் உங்கள் எதிரிகளை நாம் சந்திக்க வேண்டும் . அதன் பயனை மற்றவர் அனுபவிக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? உங்களுடன் சேர்ந்துழைக்க வேண்டிய தேவை எமக்கில்லை என்று கூறி விட்டு அகன்றான்.

மற்றொரு சந்தர்ப்பத்தில் குறைசியர், தம் கடவுளரையும், நடைமுறையில் உள்ள சமய சம்பிரதாயங்களையும் விமர்சிப்பதைத் தவிர்க்குமாறும், ஒழுக்க விடயம் சார்ந்த போதனைகளை மேற்கொள்ளுமாறும் முகம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். இது நடைமுறையில் உள்ள சமூக அமைப்பையும், குறைசியரின் அரசியல், சமய தலைமைத்துவத்தையும் அங்கீகரிக்குமாறு விடுத்த கோரிக்கையாகும். இதனை ஏற்றால், இஸ்லாத்தின் புரட்சிகர சிந்தனைக்கு இடமில்லாது போகலாம் என்பதால், முகம்மது (ஸல்) அவர்கள் இதனை நிராகரித்தார்கள். மற்றொரு முறை அவர்களிடம் "இ∴தல்லாத வேறொரு குர்ஆனை நீர் கொண்டுவாரும். அல்லது (எங்கள் இஷ்டப்படி) இதனை மாற்றிவிடும்" (10:15) என்று கோரினார்கள். "நானே (என் இஷ்டப்படி) இதனை மாற்றிவிட எனக்கு எவ்வித சக்தியுமில்லை. வஹி மூலம் எனக்கறிவிக்கப்படுபவைகளையன்றி (வேறொன்றையும்) நான் பின்பற்றுவதில்லை" (10:15) என்று கூறி, அவர்களின் கோரிக்கையை நிராகரித்தார்கள்.

இறைதூதருடன் நேரடியாகக் கதைத்துத் தம் கோரிக்கையை நிறைவேற்றிக் கொள்ள முடியாது போனதால், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் முஸ்லிம்களைத் தொல்லைக்குட்படுத்தினர். இறைதூதரைக் கொலை செய்து, இஸ்லாமியத்தூதை ஒழிக்க விரும்பினர். ஆயினும் ஜாஹிலிய்யச் சமூக அமைப்பில் ஒவ்வொரு கோத்திரமும் தன் கோத்திர உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கியதால், முகம்மது (ஸல்) அவர்களைக் கொலை செய்வதன் மூலம் ஹர்புல் பிஜார் போன்ற ஒரு தொடரான போர் மீண்டும் ஹிஜாஸில் ஏற்படும் என்று பயந்தார்கள். ஆதலால் ஹாசிமிக் கோத்திரத் தலைவராக இருந்த அபூதாலிபைச் சந்தித்து, முகம்மது (ஸல்) அவர்களை அவரின் பாதுகாப்பில் இருந்து விடுவித்து விடக் கருதி, அபூதாலிபுடன் பேரம் பேசினார்கள்.

ஒரு தினம் உத்பா பின் ரபீஆ, சைபா பின் ரபிஆ, அபூஜஹ்ல், வலீத் பின் முகைரா, நாபிஆ, முனப்பா, ஆஸ் பின் வாஇல் ஆகிய முக்கிய பிரமுகர்கள் அபூதாலிபைச் சந்தித்துப் பின்வரும் கோரிக்கையை விடுத்தனர்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"உமது மருமகன் எங்களது கடவுளைப் பழிக்கின்றார்; எமது சமயத்தை விமர்சிக்கின்றார்; எமது முன்னோர்களை முட்டாள்கள் என்றும், வழி தவறியவர்கள் என்றும் குறை கூறுகின்றார். இதனை நீங்கள் நிறுத்தி விட வேண்டும். இல்லையேல் எமக்கும் உமது மருமகனுக்கும் இடையே நீர் குறுக்கே நிற்க வேண்டாம். எம்முடன் சேர்ந்து அவர்களது போதனைகளை எதிர்த்து நில்லுங்கள். அவருக்குப் பதிலாக நாம் உமக்கு போதுமானவர்கள்."

அபூதாலிப் இவற்றுக்கு அமைதியாகச் செவிமடுத்து, அவர்களை சாந்தப்படுத்தி அனுப்பினார்.

இதன்பின் மற்றொரு தூதுக் குழு அவரைச் சந்தித்து உங்கள் மருமகனிடம் இருந்து எங்களைக் காப்பாற்றுமாறு நாம் உங்களைக் கேட்டோம் அதற்குச் செவிமடுக்கவில்லை. எமது முன்னோர்களின். கண்ணியம் குறைக்கப்படுவதும், அவர்களை இகழ்வதும், எமது கடவுள்களை விமர்சிப்பதும், எல்லை கடந்து விட்டது. அதனை நீர் நிறுத்த வேண்டும். இல்லையேல் உம்முடனும் உமது மருமகனுடனும் இரு குழுவில் ஒன்று அழியும் வரை போராடுவோம். என்று அச்சுறுத்தினர்.

இதனால் அச்சமடைந்த அபூதாலிப், முகம்மது (ஸல்) அவர்களை அழைத்து தன் மீது தாங்க முடியாத சுமைகளைச் சுமத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். தன் வலக்கரத்தில் சூரியனையும் இடக்கரத்தில் சந்திரனையும் கொண்டு வந்து வைத்துவிட்டு, இறைதூதை விட்டுவிடக் கோரினாலும் என் பணியை விட மாட்டேன் என்னுயிர் இழக்க நேரினும் சரியே என்று அவர்கள் பதில் கூறினார்கள். இப்பதிலால் ஈர்க்கப்பட்ட அபூதாலிப், இறைதூதருக்குத் தொடர்ந்து பாதுகாப்பு அளித்தார்கள்.

இதன் பின் குறைசித் தலைவர்கள், அமாரா பின் வலீத் எனும் நல்ல கட்டமைப்பைக் கொண்ட அழகிய வாலிபனை அபூதாலிபிடம் அழைத்து வந்து, இவனை வைத்துக்கொள்ளுங்கள் முகம்மதை எம்மிடம் ஒப்படையுங்கள். அவர் எமது முன்னோரை வழிதவறியவர் என்று குறை காண்கின்றார் சமூகத்தின் அமைதியைக் கெடுக்கின்றார்; நாம் அவரைக் கொலை செய்து விடுவோம் என்றனர். இக்கோரிக்கையை நிராகரித்த அபூதாலிப், இறைதூதர் எதிர் கொள்ள வேண்டியுள்ள பயங்கர நிலையை அறிவித்து, அவருக்கு ஆதரவாகச் செயற்படுங்கள் என்று கோருவதற்காகத் தன் கோத்திரத்தவர்களை அழைத்தார். அபூதாலிபின் கருத்தை ஹாசிமிக்கள் பலர் ஆதரித்த போதும் அபூலஹப் கடுமையாக எதிர்த்ததால் எதுவித முடிவும் இன்றிக் கலைந்து சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறைசிக் காபிர்கள் முன்வைத்த கோரிக்கைகள் அனைத்தும் ஜாஹிலிய்யாக் காலப் பெறுமானங்களை மையமாக வைத்தே முன்வைக்கப்பட்டுள்ளன. தலைமைத்துவம், அதிகாரம், மக்கட்பேறு என்பவற்றின் அடிப்படையிலேயே ஜாஹிலிய்யாக் கால கண்ணியம் கணிக்கப்பட்டது. மது, மாது என்பனவற்றின் உபயோகத்தை அவர்களது சுகபோகம் மையமாகக் கொண்டிருந்தது. அவர்களின் வணக்க வழிபாடுகள், சமய நம்பிக்கைகள் என்பன வாழ்வின் ஏனைய துறைகளுடன் எதுவித சம்பந்தமும் அற்றிருந்தன. இத்தகைய போக்கிற்கு முற்றிலும் முரணான ஒரு கோட்பாட்டை முகம்மது (ஸல்) அவர்கள் முன்வைத்திருந்தார்கள். மனிதனை மதிப்பிடும் கருவி அதிகாரமும் செல்வமும் அல்ல என்றும், இறையச்சத்தின் அடிப்படையிலே மனிதன் மதிக்கப்பட வேண்டும் என்றும், உண்மைச் சுகபோகம் இவ்வுலக வாழ்வை மையமாகக் கொண்டதல்ல மறுமை வாழ்வில் கிடைப்பதே என்றும், சமயக் கோட்பாடு வாழ்வின் அனைத்துத் துறைகளையும் அளாவியது என்றும் எடுத்துக் காட்டி, மனித வாழ்வின் அனைத்துத் துறையிலும் ஒரு பசுமைப் புரட்சியை உருவாக்குவதை அவர்கள் தன் இலட்சியமாகக் கொண்டிருந்தார்கள். குறைசியர்களின் கோரிக்கை அவர்களின் இவ்விலட்சியத்தை நிராகரிப்பதாகவும், ஜாஹிலிய்யாக் கால சமய, சமூக, அரசியல் வாழ்வை உயிர்ப்பிப்பதாகவும் இருந்ததாலேயே அவர்கள் அவற்றை நிராகரித்தார்கள். அமைதியையும் சமாதானத்தையும் அவர்கள் பெரிதும் விரும்பிய போதும், கொள்கையை விட்டுக்கொடுத்து அதனைப் பெற அவர்கள் விரும்பவில்லை.

### ஈ. சமூக ரீதியான நிர்ப்பந்தம

இறைதூதரைத் துன்புறுத்தியோ, அவருடன் பேரம் பேசியோ தம் காரியத்தைச் சாதிக்க முடியாது போனதாலும், அவரைக் கொலை செய்வது தாம் விரும்பாத உள்நாட்டுப் போர் ஒன்றிற்கு வழிவகுப்பதாக அமைவதாலும், அவரைத் தம் வழிக்குக் கொண்டுவர வேறு வழிமுறைகளைத் திட்டமிட்டார்கள். அவர்களின் கலந்துரையாடல்களின் முடிவாகப் பின்வரும் செயற்திட்டத்தை அமுல் படுத்தினார்கள்.

இஸ்லாத்தின் பரவலைத் தடுக்க இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை. இறைதூதருக்கும் ஸஹாபாக்களுக்கும், அவர்களது கோத்திரங்களும் நண்பர்களும் வழங்கிய பாதுகாப்பை இரத்துச் செய்ய விடுத்த கோரிக்கைகளும் பயன் தரவில்லை. ஆதலால், ஹாசிமிக்கள் தாமாகவே முன்வந்து, முகம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காகத் தம்மிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒப்படைக்கும் வரை, ஹாசிமிக்கள் அனைவரையும் சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பகிஷ்கரிப்பதாக. நுபுவ்வத் ஏழாம் ஆண்டு முடிவு எடுத்தனர்.

முகம்மத் (ஸல்) அவர்களைக் கொலை செய்வதற்காக ஒப்படைக்காதவரை, பனூ ஹாசிம்களுடனோ, பனூ முத்தலிப்புளுடனோ விவாகத் தொடர்பு வைத்துக்கொள்வதில்லை என்றும், அவர்கள் மீது கருணை காட்டுவதில்லை என்றும் ஒரு பிரகடனத்தை எழுதி, அதற்கான அங்கீகாரத்தை அனைத்துக் கோத்திரங்களிடமும் பெற்றுக் க.்பாவின் உட்புறத்தே தொங்கவிட்டனர். இம்முடிவை ஏனைய அனைத்துக் கோத்திரங்களும் அங்கீகரித்துச் செயற்படுத்தின. அதன் விளைவாக மக்காவில் இருந்து சற்று தூரத்தில் உள்ள அபுதாலிபுக்கு சொந்தமான சி.்பு அபூதாலிப் என்ற இடத்தில் மூன்றாண்டுகள் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டனர். இம்முடிவின் காரணமாக அவர்களுடன் எந்தப் பண்டமாற்றும் இடம் பெற அனுமதிக்கப்படவில்லை. எல்லாவித வர்த்தகத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன. இதனால் உணவுப் பண்டங்களின் விநியோகம் தடைப்பட்டது. மக்கள் பட்டினியால் வாடினர். பச்சிலைகள் கூட சில வேளைகளில் உணவாகக் கிடைக்கவில்லை. காய்ந்த தோலைக் கொதிக்க வைத்துக் கிடைக்கும் பானத்தை அருந்தினர். இது சிறுவர்களின் நிலைமையைக் கவலைக்கிடமாக்கியது. அவர்களின் அழுகைக் குரலைக் கேட்டு கடின சித்தமுடைய குறைசிக் காபிர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். இருந்த போதும் இந்த அவல நிலை குறைசிக் காபிர்கள் சிலரின் உள்ளத்தைக் கசிய வைத்தது. ஹகீம் பின் ஹதம் என்பவர் மிகவும் இரகசியமாக உணவுப் பண்டங்கள் அடங்கிய பொதிகளை ஒட்டகங்களில் ஏற்றி, சி.்பு அபூதாலிப் பக்கம் துரத்திவிட்டார். ஒரு முறை அபூஜஹ்ல் அதனைக் கண்டு தடுத்தபோது அபூ பக்ரி என்பவர் தலையிட்டு, அவ்வுணவுப் பண்டங்களை ஹாசிமிகளுக்குக், கிடைக்க வழிசெய்தார். ஹாசிம் பின் அம்ரு என்பவரும் இவ்வாறு இரகசியமாக உணவுப்பண்டங்களை அனுப்பி வைத்தார். குறைசியரின் இத்தடுப்பு நடவடிக்கை காரணமாக கண்ணியமிக்க மாதங்களாகக் கணிக்கப்பட்ட நான்கு மாதங்களில் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வெளியே வாழ்ந்த அறேபியர்கள் அங்கு வந்தபோது, அவர்களுடன் முஸ்லிம்கள் தொடர்பு கொண்டனர். தம் கொள்கையைக் காப்பதற்காக முஸ்லிம்கள் படும் துன்ப துயரங்களைக் கண்டு அவர்களின் உள்ளங்கள் அனுதாபப்பட்டன. அதனால் பலரது உள்ளங்கள் இஸ்லாத்தின் பால் சார்புடையதாகின.

நீண்ட நாட்களாக முஸ்லிம்கள் அனுபவித்து வந்த இத்துன்ப துயரங்கள் மக்காவாசிகள் சிலரது உள்ளத்தை உறுத்தின. தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சகோதரருக்கு இழைத்துள்ள கொடுமைகளும், அநீதியும் பொல்லாதவை என்று அவர்கள் கருதினர். முஸ்லிம்கள் மீது அனுதாபம் கொண்டிருந்த ஹாசிம் பின் அம்ரு என்பவர் ஒருதினம் ஸுஹைர் பின் அபூ உமையா என்பவரிடம் சென்று நீர் எவ்வாறு புத்தாடை புனைந்து, உணவருந்தி விவாகம் புரிந்து மகிழ்வடைவீர், உமது மாமனுக்கும், மக்களுக்கும் அவை மறுக்கப்பட்டிருக்கும் போது என்று கேட்டார். அத்துடன், நான் சத்தியம் செய்து கூறுகிறேன் முஸ்லிம்கள் அபூஜஹ்லின் உறவினராக இருந்து, இவ்வாறான தடையை விதிக்குமாறு நீர் அபூஜஹ்லைக் கேட்டிருந்தால், அவன் நிச்சயமாக இதற்கு இணங்கியிருக்க மாட்டான் என்றும் கூறினார். அதன் பின் அவ்விருவரும் அச்சமூகத் தடைக்கு எதிராக இயங்க உடன்பட்டனர். தமக்காதரவானவர்களைத் திரட்டவும் இரகசியமாக முயற்சித்தனர். அல்முத்அம் பின் அதி, அபூ பு.தாரி, இப்னுஹாசிம், ஸம்ஆ இப்னுல் அஸ்வத் என்போரும் அவ்விருவருக்கும் ஆதரவு தெரிவித்தனர்.

ஒரு தினம், மக்காவாசிகள் தவாபு செய்து கொண்டிருக்கும் போது, ஸுஹைர் பின் அபூ உமையா என்பவர் ஹாசிமிக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களைப் பார்த்துக் கொண்டு நாம் எவ்வாறு உண்டு உடுத்து வாழ்வது? அவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமை நீக்கப்படும் வரை நான் ஓய்ந்திருக்கப்போவதில்லை என்று குரல் கொடுத்தார். உடனே அபூஜஹ்ல் எழுந்து நீர் ஒரு பொய்யன். எமது உடன்படிக்கை புனிதமானது; அது மீறப்பட முடியாதது என்று சத்தமிட்டான். அதைக் கேட்ட பின், ஒருவர் பின் ஒருவராக ஸம்ஆ, அபூ அல் பு.தா அல்முத்அம், ஹிஸாம் பின் அம்ரு என்பவர்கள் எழுந்து சுஹைருக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர். ஏற்கனவே திட்டமிட்ட செயற்பாடு இது என்று அபூஜஹ்ல் அனுமானித்து, அவர்களுடன் நேரடியாக எதிர்வாதம் புரிவது கஷ்டமாக முடியும் என்று கருதி மௌனமாகவிருந்தான். முத்அம் எழுந்து, க.பாவின் உட்புறத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பிரகடனத்தைக் கிழித்தெறிய முயற்சித்தபோது, அப்பிரகடனத்தை ஏற்கனவே கரையான் அரித்திருந்ததையும் அல்லாஹ்வின் பெயரால் எனும் தொடர் மட்டும் அதில் எஞ்சியிருந்ததையும் கண்டார். இதுமுதல் முஸ்லிம்கள் மக்காவில் முன்போல நடமாட அனுமதிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அபீசீனிய ஹிஜ்ரத்

இஸ்லாத்தைப் பகிரங்கமாகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தது முதல் முஸ்லிம்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் சொல்லும் தரமன்று. பொருளாதார, சமூக, கோத்திர ஏற்றத்தாழ்வு நோக்கப்படாது, அத்தனை முஸ்லிம்களும் இத்தகு சித்திரவதைக்குள்ளானார்கள். அவர்களை அக்கொடுமையில் இருந்து காப்பாற்றும் சக்தி, அப்போதைக்கு முகம்மத் (ஸல்) அவர்களுக்கோ சஹாபாக்களுக்கோ இருக்கவில்லை. ஆதலால் செங்கடலுக்கு மறுகரையில் இருந்த அபீசீனியாவுக்குச் (எத்தியோபியா) சென்று வாழுமாறு முஸ்லிம்களுக்கு முகம்மத் (ஸல்) ஆலோசனை கூறினார்கள்.

அறேபியர் வருடம் தோறும் அபீசீனியாவுக்கு வர்த்தகத்துக்காகச் சென்று வந்தனர். அங்கு ஆட்சி செய்த மன்னன் நஜ்ஜாஸின் நற்குணவியல்புகள் பற்றி அறிந்திருந்தனர். இதனால் முகம்மத் (ஸல்) அவர்களின் ஆலோசனையையேற்று நுபுவ்வத் ஐந்தாம் ஆண்டு, றஜப் மாதம், பதினொரு ஆண்களும், நான்கு பெண்களுமாக மொத்தம் பதினைந்துபேர், மிகவும் இரகசியமாக அபிசீனியாவுக்குச் செல்லப் புறப்பட்டனர். செங்கடற்கரையை அடைந்தபோது, இரு வர்த்தகக் கப்பல்கள் மறுகரைக்குச் செல்லத் தயாராகிக் கொண்டிருந்தன. அவர்களில், தலைக்கு ஐந்து திர்ஹம் வீதம் கொடுத்து மறுகரையை அடைந்தனர்.

அபீசீனியாவை அடைந்து மூன்று மாதங்கள் அளவு கழிந்தபோது, உமர் (றழி) இஸ்லாத்தை ஏற்றதால் ஏற்பட்ட சாதகமான சூழல், மக்காவில் ஓர் இணக்க நிலையைத் தோற்றுவித்துள்ளது என்று கருதத் தக்க ஒரு நிலையைத் தோற்றுவித்ததால் அவர்கள் திரும்பி வந்தனர். ஆயினும் நிலைமை முன்போலவே, அன்றேல் அதைவிடவும் மோசமாக இருந்ததால் மக்காவில் இருந்த ஏனைய முஸ்லிம்கள் சிலரையும் கூட்டிக் கொண்டு மொத்தமாக எண்பத்துமூன்று பேர் மீண்டும் இரகசியமாக அபிசீனியாவைச் சென்றடைந்தனர். இந்நிகழ்வே வரலாற்றில் முதலாம் ஹிஜ்ரத் என்றழைக்கப்படுகின்றது.

அபீசீனியா சென்ற முஸ்லிம்கள் தமது கொடுமைகளுக்காளாகாது சுகமாக வாழ்வதைக் கண்டு சகியாத குறைசியர்கள், அபிசீனிய மன்னனைச் சந்தித்து முறையிடத் தீர்மானித்தனர். அதற்காக அப்துல்லாஹ் பின் ரபிஆ, அம்ரிப்னு ஆஸ் எனும் இருவரையும் அன்பளிப்புக்களுடன் மன்னனிடம் அனுப்பிவைத்தனர். அவ்விருவரும் மன்னனைச் சந்திக்க முன், அவைக்களத்து மத குருமாரையும், பிரமுகர்களையும் சந்தித்து, அவர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்களைத் தம்சார்பாக்கிக் கொண்டனர். மறுதினம் அரசவைக்குச் சென்று, தம் முன்னோர்களின் மத நம்பிக்கையை நிராகரித்தவர்களும், குற்றச் செயலில் ஈடுபட்டவர்களுமான சிலர் மக்காவில் இருந்து வெளியேறி, உங்கள் நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ளனர். அவர்களைத் தம்முடன் திருப்பி அனுப்புதல் வேண்டும் என்று மன்னனிடம் கோரிக்கை விடுத்தனர். மத குருமார்களும், பிரமுகர்களும் இவ்வேண்டுகோளை ஒருமித்த குரலில் ஆதரித்தனர். நீதி நெறி முறைப்படி ஆட்சி செய்வதில் புகழ் பெற்றிருந்த மன்னன் நஜ்ஜாசி, பிரதிவாதிகளான முஸ்லிம்களை அழைத்து விசாரிக்காது தீர்ப்பு வழங்க விரும்பாததால், அவர்களை அரசவைக்கு அழைத்தான். குறைசியரின் குற்றச் சாட்டைக் கூறி கிறிஸ்தவத்துக்கும் சிலைவணக்கத்துக்கும் முரண்பட்டதும், நீங்கள் பின்பற்றுவதுமான புதிய சமயம் எது? என்று வினவினார். முஸ்லிம்கள் தம் சார்பாக விடை பகர்வதற்கு, அலி (றழி) இன் சகோதரரான ஜஃபர் இப்னு அபூதாலிப் (றழி) அவர்களை நியமித்துக் கொண்டனர். அவர் மன்னனின் வினாக்களுக்கு விடையளிக்கு முன், குறைசியரிடம் சில வினாக்களைக் கேட்க மன்னனிடம் அனுமதி கேட்டுப் பெற்றுப் பின்வரும் வினாக்களைக் கேட்டார்.

அ. நாம் அடிமைகளா? எஜமான்களை விட்டு விட்டு ஓடி வந்தவர்களா?
ஆ. நாம் எவரையேனும் கொலை செய்து விட்டு தண்டனைக்குப் பயந்து ஒழித்தோடி வந்துள்ளோமா?
இ. நாம் எவருக்கேனும் சொந்தமாகவுள்ள பொருட்களைக் களவு எடுத்து வந்துள்ளோமா?

இம்மூன்று வினாவுக்கும் விடையளிக்கும் போது, முஸ்லிம்கள் குற்றச் செயல் புரிந்தவர்கள் அல்லர் என்பதை அம்ரிப்னு ஆஸ் உறுதிப்படுத்தினார். தாம் எதுவித கிரிமினல் குற்றங்களையும் இழைக்காது இங்கு வந்துள்ளோம். ஆதலால், தம்மை இங்கிருந்து திருப்பி அனுப்பக் கோருவதற்கு குறைசியருக்கு எதுவித உரித்தும் இல்லை என்பதை ஜஃபர் பின் ஆபூதாலிப் (றழி) அவர்கள் மிகவும் நாசூக்காகவும், நளினமாகவும் தமது எதிரியின் சாட்சியத்தைக் கொண்டே நிறுவிய பின், மன்னனின் வினாவுக்குப் பின்வருமாறு விடையளித்தார்கள். "மாட்சிமை தங்கிய மன்னர் அவர்களே! நாம் அறியாமையில் மூழ்கியவர்களாக இருந்தோம்; சிலைகளை வணங்கிக் கொண்டிருந்தோம்; செத்த மிருகங்களின் மாமிசத்தை உட்கொண்டோம்; அயலவர்களைக் கொடுமைப் படுத்தினோம்; சகோதரர்களுடன் சண்டை பிடித்தோம்; பலமில்லாத எளியவர்களைக் கொடுமைப்படுத்தினோம். இத்தகைய சூழலில் எம்மிடம் இருந்த ஒருவரை அல்லாஹ் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தூதராக அனுப்பி அருள்கூர்ந்தான். அவர் நற்குடிப் பிறப்பும், நாணயமும், நம்பிக்பிக்கையும் உடையவராக ஏற்கனவே அறியப்பட்டிருந்தார். அவர் எங்களை இஸ்லாத்தின் பால் அழைத்தார். சிலை வணக்கத்தைத் தவிர்க்குமாறும், அநாதைகளின் சொத்துக்களை விழுங்க வேண்டாம் என்றும், கற்புடைய பெண்கள் மீது அவதூறு கூற வேண்டாம் என்றும் தொழுது, நோன்பு நோற்று, தர்மம் கொடுக்குமாறும் ஏவியுள்ளார். நாம் அவரை நம்பினோம். இதற்காகவே மக்காவாசிகள் எங்களை எதிர்க்கின்றார்கள். எங்களுக்குத் தொல்லை தருகின்றனர். எம்மைச் சித்திரவதை செய்து, எமதுயிரை அபகரிக்க முயற்சிக்கின்றார்கள். அதனாலேயே நாம் இங்கு அடைக்கலம் புகுந்துள்ளோம். எமது வீடுகளில் வசிக்க மக்காவாசிகள் அனுமதித்திருந்தால், நாம் எமது வீடுகளை விட்டு விட்டு இங்கு வந்திருக்கத் தேவையில்லை" என்றும் கூறினார்.

ஜ:பர் (றழி) அவர்களின் இப்பேச்சு நஜ்ஜாசின் உள்ளத்தைத் தொட்டது. ஆதலால் முகம்மது (ஸல்) அவர்கள் போதித்த அல்குர்ஆனின் ஆயத்துக்கள் சிலவற்றை ஓதுமாறு கேட்டபோது, ஜ:பர் (றழி) அவர்கள், சூறா மர்யம் எனும் அத்தியாயத்தின் முதல் முப்பத்து மூன்று ஆயத்துக்களையும் ஓதிக் காண்பித்தார்கள். இதனைக் கேட்ட நஜ்ஜாஸின் கண்கள் குளமாயின. இந்த இறைவாக்கும், இன்ஜீலும் ஒரே விளக்கின் இரு சுடர்கள் என்றும், எதிர்காலத்தில் ஒரு நபி தோன்றுவார் என்று ஈசா (அலை) எதிர்வுகூறிய நபி இந்த முகம்மத் (ஸல்) தான் என்று தான் சாட்சியம் கூறுவதாகவும், தான் உயிர் வாழும் காலத்தில், அல்லாஹ் அத்தூதரை அனுப்பியமைக்காக, அல்லாஹ்வுக்குத் தான் நன்றி கூறுவதாகவும் பிரகடனப்படுத்திக் குறைசியரின் வேண்டுகோளை நிராகரித்தார்.

தம் முயற்சியில் தோல்விகண்ட குறைசித் தூதுவர்கள் தம்மிடையே கலந்துரையாடி மறுதினம் புதியதோர் உத்தியுடன் மன்னர் நஜ்ஜாசைச் சந்தித்து, முஸ்லிம்கள் ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மைந்தர் என்று நம்புவதில்லை, மரியமின் மகன் என்றே அழைப்பார். இது கிறித்தவர்களின் நம்பிக்கைக்கு முரண்பட்ட செயல் என்று முறையிட்டனர். மன்னன் முஸ்லிம்களை மீண்டும் அரசவைக்கு அழைத்தான். முஸ்லிம்கள் இதனால் அதிர்ச்சியடைந்த போதும், உண்மை பேசுவது உத்தமம் என்று கருதிப் பின்வருமாறு விடைபகர்ந்தார்கள்.

"ஈஸா (அலை) அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும், அவனது "ரூஹும்" ஆவார் என்று நபி எமக்கு அறிவித்துள்ளார். இதனைச் செவியுற்ற நஜ்ஜாசி தரையில் இருந்து ஒரு துரும்பைப் பொருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு அல்லாஹ்வின் மீதாணையாக ஈஸா (அலை) அவர்கள் இந்தத் துரும்பு அளவுக்குக் கூட நீங்கள் குறிப்பிட்டதை விடக் கூடிய அந்தஸ்துடையவரல்லர் என்று கூறினார். இதனால் குறைசியரின் தூது தோல்வியில் முடிவடைந்தது. குறைசியர் வழங்கிய பரிசில்களும் திருப்பிக் கொடுக்கப்பட்டன. முஸ்லிம்களைத் தன் நாட்டில் கண்ணியமாக வாழ விட்டதுடன், தானும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார் என்பர். மன்னர் நஜ்ஜாசி இறந்தபின், முஹம்மத் (ஸல்) அவருக்காக மதீனாவில் ஜனாஸாத் தொழுவித்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

முகம்மத் நபி (ஸல்) அவர்கள் தன் தோழர்களை மக்காவாசிகளின் கொடுமையில் இருந்து காத்துக் கொள்வதற்காக, கிறித்தவ ஆட்சியாளனின் கீழ் இருக்கும் ஒரு கிறித்தவ நாடாகிய அபிசீனியாவுக்குச் செல்லுமாறு கேட்டபேது, கிறித்துவத்தினதும், அபிசீனியாவின் நில வளத்தினதும் தாக்கத்துக்கு முஸ்லிம்கள் உட்படுவார்கள் என்ற அச்சம் முகம்மது (ஸல்) அவர்களுக்கு இருக்கவில்லையா? என்ற ஒரு வினா வரலாற்றுத்துறை மாணவர்களிடம் ஏற்படுவது இயல்பே. ஹிஜ்ரத் சென்றவர்களுள் ஒருவர் கிறித்தவ சமயத்தை ஏற்றுக் கொண்டமை, இத்தகைய வினா ஒன்று எழுவதைத் தவிர்க்க முடியாததாக்கியுள்ளது. அப்போதைய நிலையில், மக்காவில் முகம்மத் (ஸல்) அவர்களால் எதுவிதப் பாதுகாப்பையும் முஸ்லிம்களுக்கு வழங்கமுடியவில்லை என்பதால் அபிசீனியாவுக்குச் சென்றவர்கள் அங்கு நிலையாகத் தங்கிவிட மாட்டார்கள் என்பதற்கோ, முகம்மத் நபி (ஸல்) அவர்களின் கட்டளைகளை எப்போதும் எல்லோரும் பேணி நடப்பார்கள் என்பதற்கோ என்ன உத்தரவாதம் உண்டு என்பது நோக்கத்தக்கதாகும். இத்தகைய சிந்தனை முகம்மத் (ஸல்) அவர்களிடத்தும் ஏற்பட்டு இருக்க முடியும். அதுபற்றி அவர்கள் சிந்தித்த பின்தான் இம்முடிவை எடுத்திருப்பார்கள். எத்தனை கொடுமைகளை எதிர்கொண்டபோதும், தம் உயிரை இழக்க நேர்ந்தபோதும், கொண்ட கொள்கைகளை விட்டுக் கொடுக்க நபித்தோழர்கள் விரும்பவில்லை என்பதை சித்திரவதைகளின்போது நிறுவியிருந்தனர். இது, மேற்குறித்த வகையான அச்சம் மனதில் பதிய இடம் கொடுத்திராது. அபிசீனியாவின் மன்னன் நீதியை நிலைநாட்டுவதில் ஆசையும் அக்கரையும் உள்ளவர் என்று அறியப்பட்டிருந்தமை, முஸ்லிம்கள் அச்சமின்றி வாழும் சூழலை உருவாக்கிக் கொடுக்கும் என்று நம்புவதற்குப் பெருமளவில் உந்துதலாக இருந்திருக்க முடியும்.

குறைசியர் கொடுத்த தொல்லைகளில் இருந்து தம்மைக் காத்துக் கொள்ள ஸஹாபாக்கள் அபிசீனியாவுக்கு அனுப்பப்பட்டனர் என்ற ஒரு பொதுக் கருத்துண்டு. இது ஏற்புடையதாயினும், இதுமட்டும் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காரணமா? என்று சிந்திப்பதும் அவசியமாகும். முதற் கட்டத்தில் ஹிஜ்ரத் சென்றவர்களில் கொடும் சித்திரவதைக்குள்ளான பிலால் பின் ரபீஆ (றழி), யாசிர் (றழி) போன்ற பிரமுகர்கள் இடம் பெறவில்லை. உமையாக் கோத்திரத்தவரான உதுமான்பின் அப்பான் (றழி), அவரது மனைவியும் இறைத்தூதரின் மகளுமான ருகையா (றழி), சுபைர் (றழி), முஸ்அப் இப்னு உமைர் (றழி), அப்துர்ரஹ்மான் பின் அவ்ப் (றழி), ஜஃபர் இப்னு அபீதாலிப் போன்ற முக்கிய பிரமுகர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள். இவர்கள் சித்திரவதைகளைச் சகிக்க சக்தியற்றவர்களாகவோ, அதற்குப் பயந்து, இஸ்லாத்தை விட்டு விடுபவர்களாகவோ இல்லை. பின் ஏன் இவர்கள் அபிசீனியாவுச்குச் சென்றார்கள். என்பது நோக்கத்தக்கதாகும்.

உண்மையில், அவர்களுக்கு மக்காவில் தம் இஷ்டப்படியே அமைதியாக நின்று, இஸ்லாமிய இபாதத்களிலோ, இஸ்லாமியப் பயிற்சிகளிலோ ஈடுபட அவகாசம் இருக்கவில்லை. ஆதலால் மிகவும் சுதந்திரமாக அவற்றில் ஈடுபட வாய்ப்புடைய அபிசீனியாவுக்கு அவர்கள் சென்றார்கள் அன்றேல் அனுப்பப்பட்டார்கள்.

கஃபாவில் தொழுவதற்கும், அல்குர்ஆனை ஓதுவதற்கும், தத்தம் வீடுகளில் தானும் சத்தமிட்டு அல்குர்ஆனை ஓதுவதற்கும் அனுமதியிருக்கவில்லை. அல்குர்ஆனைச் சத்தமிட்டு கஃபாவில் ஓதியதற்காகவே அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (றழி) அவர்கள் நையப் புடைக்கப்பட்டார்கள். தன் வீட்டில் அல்குர்ஆனைச் சத்தமிட்டு ஓதியதற்காக அபூபக்கர் (றழி) அச்சுறுத்தப்பட்டார்கள். ஜஃபர் இப்னு அபூதாலிப் (றழி) நஜ்ஜாசி முன் ஆற்றிய உரையும் இக்கருத்தையே நினைவுறுத்துகிறது.

அபிசீனியஹிஜ்ரத் வரலாற்று முக்கியத்துவம் மிக்கது. முஸ்லிம்கள் தம் கொள்கையின் மீது கொண்ட பக்தியைப், பற்றை மட்டுமன்றி அதனைக் காப்பதற்குத் தாம் எத்தகைய தியாகங்களையும் செய்யத் தயார் என்பதை அது பிரகடனப்படுத்தியது. தம் கொள்கைக்காக தம் சொத்து, சுகம், வீடுவாசல், குடும்பம் உறவினர் முதல் அனைத்தையும் துறக்கத் தயார் என்பதை அவர்கள் செயலிற் காட்டினார்கள். இஸ்லாத்தை ஏற்றுத் துன்பப்படுவர்களுக்கும், சித்திரவதைகளை நினைத்து இஸ்லாத்தில் இணையத் தயங்குவோருக்கும், இது ஒரு நம்பிக்கை ஒளியாக அமைந்தது. யத்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்வதற்கும் இது ஒரு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது. அபிசீனியாவில் முஸ்லிம் சமூகம் சக்திபெற்ற ஒரு சமூகமாக வளர்ந்து, தமக்கு அச்சுறுத்தலாக அமைய முடியும் என்ற உணர்வைக் குறைசியரிடம் ஏற்படுத்தவும் இந்நிகழ்ச்சி சக்தி பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2 8 JUN 2007 LIBRARY

## இஸ்லாம் மக்காவில் காலூன்றல்

முகம்மத் (ஸல்) அவர்கள் ஹிராக்குகையில் முதன் முதல் பெற்ற அனுபவத்தை அன்னை கதீஜா (றழி) அவர்களுக்கு அறிவித்தது முதல், மக்காவில் இஸ்லாம் பரவ ஆரம்பித்தது. கடும் எதிர்ப் பிரசாரத்துக்கு மத்தியிலும், பல்வேறு தரத்து மக்கள் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டனர்.

முகம்மத் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேந்தவர்களான அவரது மனைவி கதீஜா (றழி), அவரது வீட்டில் வளர்ந்த சிறுவர் அலி இப்னு அபீதாலிப், விடுதலை பெற்ற பின்பும் பெற்றோரிடம் செல்ல மறுத்து நபிகளாரிடமே வாழ்ந்த அடிமை ஸைத் பின் ஹாரிஸ், இறைதூதரின் பெண்மக்கள், நண்பர் அபூபக்கர் (றழி), அடிமை பிலால் (றழி) என்பவர் ஆரம்பத்திலே இஸ்லாத்தை ஏற்றனர்.

ஹஸரத் அபூபக்ர் (றழி) நற்குணங்கள் பலவற்றையுடைய, கண்ணியமான நடத்தையுடைய வியாபாரி ஆவார். அவர் மனிதர்களுடன் அன்பாக அளவளாவினார். பலர் அவருடைய நண்பர்களாக இருந்தனர். அவர்களிடம் நபிகளார் பற்றிய செய்தியை அபூபக்ர்(றழி) முன்வைத்தபோது பின்வருவோர் இஸ்லாத்தில் இணைந்தார்கள்:

உதுமான் பின் அப்பான் (றழி)
சுபைர் இப்னுல் உவாம் (றழி)
அப்துற்றகுமான் பின் அவப் (றழி)
ஸஅத் பின் அபீ வக்காஸ் (றழி)
தல்ஹா பின் உபைதுல்லாஹ் (றழி)

இவர்களே வரலாற்றில் 'அஸ்ஸாபிகூன் அல் அவ்வலூன்' என்றழைக்கப்படுகின்றனர். பனூ தய்ம் கோத்திரத்தைச் சேர்ந்த அபூபக்ர் (றழி), தல்ஹா (றழி) ஆகிய இருவரும் இஸ்லாத்தை ஏற்றதாக அறிந்த குறைசித் தலைவர்களுள் ஒருவரான நவ்பர் இப்னு குவைலித், ஒரு கயிற்றால் அவ்விருவரையும் இறுகப் பிணைத்தார். தய்ம் கோத்திரத்தவர்கள் இந்நிகழ்ச்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இவ்விருவரும் இவ்வாறு ஒன்றாகக் கட்டப்பட்டதன் காரணமாக "கரீனான்" என்றழைக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இவர்களுக்கு அடுத்த கட்டமாக இஸ்லாத்தை ஏற்ற பலருள் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவராவர் :

அபூ உபைதா (றழி)
ஆமிர் இப்னு அப்துல்லாஹ் இப்னு அல் ஜர்ராஹ் (றழி)
அர்க்கம் பின் அர்க்கம் (றழி)
உத்மான் பின் மழ்ஊன் (றழி)
உபைதத் இப்னு அல் ஹாரிஸ் (றழி)
ஸஈத் பின் ஸைத் (றழி)
அவரது மனைவி பாதிமா பின்த் கத்தாப் (றழி)
அஸ்மா பின்த் அபூபக்ர் (றழி)
ஃகப்பாப் பின் அரத் (றழி)

இவர்களுக்குப் பின் இஸ்லாத்தை ஏற்றவர்களில் ஸஅத் பின் அபீ வக்காஸ் (றழி) அவர்களின் சகோதரர் உமைமா பின் அபீவக்காஸ், அப்துல்லாஹ் பின் மஸ்ஊத், ஸலீத் இப்னு அம்ரு, அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ், ஜஃபர் இப்னு அபீதாலிப், சுஹைப் அற்றூமி, அபூதர்ருள் கிப்பாரி (றழி) என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். பல கோத்திரங்களையும், பலதரங்களையும் சேர்ந்தோர் இஸ்லாத்தில் இணைந்ததால், மக்காவின் எல்லா மூலை முடுக்குகளிலும் மக்கள் இப்புதிய மார்க்கம் பற்றிக் கதைக்கலாயினர்.

ஆரம்பகால முஸ்லிம்கள் ஒன்று கூடிய இடமான தாருல் அர்க்கம், முஸ்லிம்களின் வணக்கஸ்தலமாகவும், பயிற்சிக் களமாகவும் இருந்தது. இஸ்லாத்தை ஏற்க விரும்புவோர் மிகவும் இரகசியமாக, குறைசியர் கண்ணிற்படாது இவ்விடத்துக்கே அழைத்து வரப்பட்டனர். அவர்கள் அவ்வீட்டில், இறைதூதரிடம் "பைஅத்" செய்து இஸ்லாத்தை ஏற்றனர்.

ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களின் இஸலாத்துக்கு முற்பட்ட கால வாழ்க்கையை நோட்டமிட்டால், அவர்களிடம் சில பொதுப்பண்புகள் இருப்பதை அவதானிக்க முடியும். அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ. இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்பே அவர்கள் உண்மையைத் தேடிக்கொண்டிருந்தனர். அவர்களிடம் இயல்பிலே நற்குணப் பண்புகள், நல்லொழுக்கமும் குடி கொண்டிருந்தன. உ+ம் ஹஸரத் அபூபக்ர் ஒழுக்கம், கற்பு, நற்குணம் முதலாம் பண்புகட்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். உதுமான் பின் மழ்ஊன் (றழி) பற்றற்ற மனப்பாங்கு கொண்டவர். மது அருந்துவதைக் கைவிட்டார். இஸ்லாத்தை ஏற்றவர் வரிசையில் ஆறு அல்லது ஏழாவது இடத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வகிக்கும் அபூதர்ருல் கிப்பாரி (றழி) இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்பே சிலை வணக்கத்தைக் கைவிட்டார்.

ஆ. ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர்களில் ஒருவர்தானும், மக்காவின் அரசியலில் முக்கிய பதவி வகிக்காமை மற்றொரு பொதுப் பண்பாகும். மக்காக் குறைசியருக்கு எவ்வகையிலும் நிகராக முடியாத அம்மார், கப்பாப், அபூ புகைஹா, சுஹைப் போன்ற சாதாரண ஏழைக் குடிமக்களே இஸ்லாத்தில் நுழைந்தனர். இவர்கள் பற்றியே அல்குர்ஆன் பின்வருமாறு சுட்டியது:

"(நபியே!) தங்கள் இறைவனின் திருப் பொருத்தத்தை விரும்பி, காலையிலும் மாலையிலும் பிரார்த்தித்துக் கொண்டிருப்போரை நீர் விரட்டிவிடாதீர். அவர்களுடைய கணக்கில் இருந்து யாதொன்றும் உம்முடைய பொறுப்பாகாது. உம்முடைய கணக்கில் இருந்து யாதொன்றும் அவர்களுடைய பொறுப்புமாகாது. ஆகவே நீர் அவர்களை விரட்டினால் அக்கிரமக்காரர்களில் நீரும் ஒருவராகிவிடுவீர். இவ்வாறே அவர்களில் சிலரைச் சிலரைக் கொண்டு சோதித்ததில், நமக்கிடையில் (ஏழைகளாகிய) இவர்கள் மீதா அல்லாஹ் அருள் புரிந்து விட்டான் என்று (பணக்காரர்கள்) கூற முற்பட்டனர். நன்றி செலுத்துவோரை அல்லாஹ் நன்கறிந்தவனல்லவா?"
(6:52 - 53)

முன்னைய நபிமார்கள் கொண்டு வந்த வேதங்களை நம்பியவர்களும் இத்தகையோரே என்பது நோக்கற்பாலதாகும். கிறித்தவ சமயத்தை முதன் முதலில் ஏற்றவர் ஒரு மீனவரே என்பது குறிப்பிடதடத்தக்கது.

இஸ்லாம் அருளப்பட்ட முதல் ஐந்து வருடத்துள்ளும் முக்கியமான சஹாபாக்கள் உட்பட சுமார் ஐம்பது பேர் இஸ்லாத்தை ஏற்றிருந்த போதும், க:.பாவில் பகிரங்கமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபடவோ, கலிமாவைப் பிரகடனப்படுத்தவோ, பொதுவிடங்களில் மட்டுமன்றி, தத்தம் வீடுகளில் தானும் ஆல்குர்ஆனை சத்தமிட்டு ஓதவோ அவர்கள் சக்தி பெற்றிருக்கவில்லை.

ஹம்சா (றழி) இஸ்லாத்தை ஏற்று மூன்று தினங்களின் பின், உமர் (றழி) அவர்கள் அர்க்கம் (றழி) அவர்களின் வீட்டில் வைத்து, முகம்மத் (ஸல்) அவர்களிடம் பைஅத்துச் செய்து இஸ்லாத்தை ஏற்றார்கள். அதன் பின்தான் க:.பாவில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உமர் (றழி) இஸ்லாத்தை ஏற்ற அன்றே முகம்மத் (ஸல்) அவர்களிடம் நாம் உண்மையிலும் குறைசியர் பொய்யிலும் இருக்கும்போது ஏன் எமது மார்க்கத்தைப் பகிரங்கப்படுத்தாது மறைத்து வாழ வேண்டும் என்று கேட்டார்கள். நாம் சிறுதொகையினராக இருக்கிறோம். நாம் இது கால வரை அனுபவித்தவற்றை நீங்கள் அறிந்துள்ளீர்கள்தானே என்று பதிலுரைத்தார்கள். உங்களை சத்தியத்தின் மீது அனுப்பிய அல்லாஹ்வின் மீது சத்தியமாக, இறை நிராகரிப்புடன் இதுகாலவரை அமர்ந்திருந்த மஜ்லிஸ்களில் ஈமானுடையவனாக அமராமல் இருக்கமாட்டேன் என்று உமர் (றழி) சூளுரைத்தார்கள். பின் முகம்மத் (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் இரு அணியாக வெளியேறினார்கள். ஓரணியில் உமர் (றழி) அவர்களும், மறு அணியில் ஹம்சா (றழி) அவர்களும் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் க.்.பாவை அடைந்து பகிரங்கமாக வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டார்கள். அன்றைய தினம்தான் முகம்மத் (ஸல்) அவர்கள், உமர் (றழி) அவர்களுக்கு "பாருக்" என்று நாமம் சூட்டினார்கள்.

உமர் (றழி) அபுஜஹ்லின் வீட்டு வாயிலைத் தட்டித் திறக்கச் செய்து, அபுஜஹ்லிடமே தான் இஸ்லாத்தை ஏற்றதாகப் பகிரங்கமாக அறிவித்தார். இதே போல இஸ்லாத்தின் முக்கிய எதிரிகளுக்கும், தான் இஸ்லாத்தை ஏற்றதாய்ப் பகிரங்கமாகவே அறியச் செய்தார்கள். ஹம்ஸா (றழி) அவர்களும் கூட, க.்.பாவின் அருகே அமர்ந்திருந்த அபூஜஹ்லின் தலையில் தன் கையில் இருந்த வில்லால் தட்டி, நீரா என் தம்பி மகனை வைதீர்? இதோ நானும் இஸ்லாத்தில் இணைந்துவிட்டேன் என்று பகிரங்கமாகக் கூறியபோதும், அபூஜஹ்ல் வாளாவிருந்து விட்டது மட்டுமல்லாமல், தனக்காதரவாகச் செயற்பட முன்வந்த தன் கோத்திரத்தையும் தடுத்து விட்டான். இச்சூழல் குறைசியரின் கொடுமைகள் பற்றிப் பயப்படாது, க.்.பாவைத் தவாப் செய்ய உதவியது. ஹம்ஸா (றழி), உமர் (றழி) போன்றோரின் வீரதீரமும், சித்திரவதைகளையும் துன்பதுயரங்களையும் பொறுமையுடன் சகித்த ஏழை சஹாபாக்களின் அர்ப்பணிப்பும், தியாகமும், அல்குர்ஆனின் தன்னிகரற்ற ஆளுமையும் மக்காவில் இவ்வாறு இஸ்லாம் காலூன்றப் பெரிதும் துணையாகின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மிஃறாஜ்

இறைதூதர்கள் பலரதும் வாழ்வில் முஃஜிஸாத்கள் பல இடம் பெற்றுள்ளன. உயர உயரப் பறக்கும் ராஜாளியைக் கூட பொசுக்கிவிடத்தக்க தீச்சுவாலையைக் கக்கும் அணற் கிடங்கிலிருந்து தென்றலில் துயின்றெழுபவரைப் போல, சர்வசாதாரணமாக இப்றாஹீம் (அலை) வெளியேறியமை, கொடியோன் பிர்அவ்னின் பிடியில் சிக்கிக்கொள்ளாதிருப்பதற்கு கடலக்கடந்து மறுபுறம் செல்வதற்காக அக்கடல்இரு கூறாகி மூஸா (அலை) செல்ல வழி அமைத்துக்கொடுத்தது மாத்திரமன்றி அவரைப் பிடிப்பதற்காக அதே வழியில், தானே அனைவருக்கும் மேலான இறைவன், என்று தம்பட்டம் அடித்தவனாகச் சென்ற பிர்அவ்னை அக்கடல் விழுங்கிக் கொண்டமை, ஈஸா (அலை) தன் கையாற் தடவுவது கொண்டு மட்டும் நோயாளியைக் குணங்காணச் செய்தமை, நிறைமாதக் கர்ப்பிணியான பெண் ஒட்டகம் ஒன்றைக் கற்பாறையில் இருந்து சாலிஹ் (அலை) வெளிவரச் செய்தமை போன்ற பல்வேறு முஃஜிஸாக்கள் இறைதூதர்கள் வாழ்வில் நிகழ்ந்துள்ளன. இத்தகு முஃஜிஸாக்கள் பல முகம்மத் (ஸல்) அவர்களின் வாழ்விலும் இடம் பெற்றுள்ளன. அல்லாமா சுலைமான் நத்வி தனது ஸீரதுன் நபி எனும் நூலின் மூன்றாம் பகுதியில் முகம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம்பெற்ற முஃஜித்ஸாக்கள் 45 அல்குர்ஆனிலும், 155 நம்பத்தகும் ஹதீஸ்களிலும் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்லாமிய மரபில் இறைதூதர்கள் செய்து காண்பிக்கும் அற்புதச் செயல்கள் "முஃஜிஸாத்" (ஒருமை முஃஜிஸா) என்றும், முஸ்லிம் ஆன்மிக ஞானிகள் செய்த அற்புதச் செயல்கள் "கராமத்" என்றும், தஜ்ஜால் உட்பட இறைநிராகரிப்பாளர்கள் நிறைவேற்றும் அற்புதச் செயல்கள் "இஸ்தித்றாஜ்" என்றும் வழங்கப்படுகின்றன. பகுத்தறிவின் அடிப்படையில், தர்க்க ரீதியாக நிறுவ முடியாததும், சாதாரண மனிதனின் செயற் திறனுக்குட்படாததுமான செயல்கள் முஃஜிஸாத் எனப்படுகின்றன. அல்குர்ஆன் அத்தகு அற்புதச் செயல்களை "ஆயாத்" எனும் பதத்தால் சுட்டிக்காட்டுவது நோக்கத்தக்கதாகும். இறைதூதை நிறுவும் சாட்சியங்களாகவே முஃஜிஸாத்கள் முன்வைக்கப்பட்டன. முகம்மத் (ஸல்) அவர்களின் வாழ்வில் இடம் பெற்ற முஃஜிஸாத்களில் மிஃறாஜ் மிகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரசித்தி வாய்ந்ததும் அல்குர்ஆனிலும் அஸ்ஸுன்னாவிலும் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளதுமான ஓர் அற்புதச் செயலாகும்.

முகம்மத் (ஸல்) அவர்கள் தன் பெரிய தந்தை அபூதாலிபையும், அன்பு மனைவி கதீஜாவையும் இழந்த சோகம் ஆறுமுன்பே, த∴வாப் பணிக்காக தாயிபுக்கு சென்றபோது அனுபவித்த துன்ப துயரங்கள் வெந்த புண்ணில் வேல் நுழைந்த சூழலைத் தோற்றுவித்தன. தாயிபில் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறைசியர்கள் கண்களைக் குளிரச் செய்தன. இந்நிகழ்ச்சிகளினால் முகம்மத் (ஸல்) கவலையடைந்திருந்த பின்னணியில்தான் அல்லாஹ் முகம்மத் (ஸல்) அவர்களைத் தன் சன்னிதானத்துக்கழைத்துக் கண்ணியப்படுத்தினான். வரலாற்றில் இந்நிகழ்வு மி∴ராஜ் என்றழைக்கப்படுகின்றது. ஹிஜ்ரத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்பு ரஜப் மாதம் பிறை 27 இல், திங்கள் இரவில் இந்நிகழ்ச்சி இடம் பெற்றது என்பர். ஹிஜ்ரத்துக்கு இரு வருடங்களுக்கு முன்பு இந்நிகழ்வு இடம் பெற்றது என்று கருதுவோரும், ஹிஜ்ரத்துக்கு ஒரு வருடத்துக்கு முன்பு ரபிஉல் அவ்வல் மாதத்தில், அன்றேல் றபிஉல் ஆகிர் மாதத்தின் பிறை 17 இல், திங்கள் இரவில் அந்நிகழ்வு இடம்பெற்றது என்று கருதுவோரும் உளர். அல் குர்ஆனின் பதினேழாம் சூறாவிலும் ஐம்பத்திமூன்றாம் சூறாவிலும் இந்நிகழ்வு பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும் ஹதீஸ் நூல்களில் மிகத் தெளிவாக இந்நிகழ்ச்சி பற்றிய தகவல்கள் பதியப்பட்டுள்ளன.

மி∴ராஜ் நிகழ்வு இரு கட்டங்களைக் கொண்டது. முதற்கட்டம் மஸ்ஜிதுல் ஹராமில் இருந்து பைதுல் முகத்தஸில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா வரை மேற் கொண்ட பிரயாணத்தை உள்ளடக்கியது. இந்நிகழ்வு "அல்இஸ்ரா" என்றழைக்கப்படுகிறது. மஸ்ஜிதுல் அக்ஸாவில் இருந்து ஸித்ரதுல் முன்தஹா வரை சென்ற பிரயாணம் மி∴றாஜ் எனப்படுகிறது. அல்குர்ஆனில் இப்பிரயாணம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> "அல்லாஹ் மிகப் பரிசுத்தமானவன். அவன் (முகம்மது (ஸல்) எனும்) தன் அடியாரை, (கஅபாவாகிய) சிறப்புற்ற பள்ளியில் இருந்து (வெகுதூரத்தில் இருக்கும் பைதுல் முகத்தஸிலுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் செனறான். (அவ்வாறு அழைத்துச் சென்ற) நாம் அதனைச் சூழவுள்ள பூமிகளை ஆசிர்வாதித்தோம். நம்முடைய திருஷ்டாந்தரங்களை அவருக்குக் காண்பிப்பதற்காகவே (அழைத்துச் சென்றோம்) நிச்சயமாக (உமதிறைவனாகிய) அவனோ செவியுறுவோனாகவும் உற்று நோக்குவோனாகவும் இருக்கின்றான்". (17:1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நிச்சயமாக அவர் மற்றொரு முறையும் (ஜிப்ரீல் ஆகிய அவர் மி'.ராஜில்) இறங்கக் கண்டிருக்கிறார். ஸித்ரதுல் முன்தஹா எனும் (இலந்தை) மரத்தின் எல்லையில் அதன் சமீபத்தில் தான் (நல்லடியார்கள்) தங்கும் சுவனபதி இருக்கிறது. அந்த மரத்தைச் சூழ வேண்டியது அதனை (முற்றிலும்) சூழ்ந்து கொண்டது. (அதிலிருந்து அவருடைய) பார்வை விலகவுமில்லை; கடக்கவும் இல்லை. அவர் தன் இறைவனிடம் மிகப் பெரிய அத்தாட்சிகளை (எல்லாம்) மெய்யாகவே கண்டார்". (53:13-18)

இஸ்லாமிய வரலாற்றில் க'.பதுல்லாஹ்வில் இருந்து மஸ்ஜிதுல் அக்ஸா சென்று அங்கிருந்து வானுலகில் உள்ள ஸித்ரதுல் முன்தஹா வரை சென்ற பயணம் மி'.ராஜ என்ற பதத்தால் வழங்கப்பட்டு வருவது நோக்கத்தக்கதாகும்.

புகாரியிலும், முஸ்லிமிலும், ஏனைய நம்பத்தகும் ஹதீஸ் நூல்களிலும் இஸ்ரா பற்றியும் மி'.ராஜ் பற்றியும், குறிப்பிடும் ஹதீஸ்கள் பல பதிவாகியுள்ளன. அவற்றில் இருந்து இப்பிரயாணம் பற்றிப் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன.

ஒரு தினம் இரவு அலி (றழி) அவர்களின் சகோதரியான உம்முஹானியின் வீட்டில் முகம்மது (ஸல்) படுத்திருந்தார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) அவ்வீட்டின் கூறையைக் கிழித்து அதனூடாக முகம்மது (ஸல்) அவர்களை ஹதிம் எனும் இடத்துக்கு கூட்டி வந்தார்கள். (ஹதிம் என்பது க'.பாவுக்கும், மகாமே இப்றாஹீமுக்கும் இடையில் உள்ள ஓர் இடம் ஆகும்) அங்கு முகம்மது (ஸல்) அவர்களின் நெஞ்சைப் பிளந்து, தங்கப் பாத்திரத்தில் கொண்டுவரப்பட்ட "ஸம்ஸம்" நீரைக் கொண்டு இதயத்தைக் கழுவி, அதனை அறிவைக் கொண்டும் கருணையைக் கொண்டும் நிரப்பினார். (அப்போது தங்கப் பாத்திரத்தின் உபயோகம் தடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது நினைவிற் கொள்ளத் தக்கது) அதன் பின் ஒரு மிருகத்தைக் கொண்டுவந்தார். அது வெண்ணிறமானது. நடுத்தரப் பருமனையுடையது. கோவேறுக் கழுதையைவிடச் சிறியது. கழுதையைவிடப் பெரியது. அது கண் எட்டாத் தூரத்துக்கு ஒரு எட்டில் இருந்து மறு எட்டை வைக்கக்கூடியது. இவ்வாகனத்தை "புறாக்" என்றழைத்தனர். (பர்கு எனும் அறபுப் பதம் மின்னல் எனும் பொருளையுடையது மின்னலைப் போன்ற வேகத்தில் சென்றதால் அதனை புறாக் என்று பெயரிட்டிருக்கக் கூடும்).

இவ்வாகனத்தில் முகம்மது (ஸல்) அவர்களை ஏற்றி, மஸ்ஜிதுல் ஹராத்தில் இருந்து பைத்துல் முகத்தஸில் உள்ள மஸ்ஜிதுல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அக்ஸாவுக்கு ஜிப்ரில் (அலை) கூட்டிச் சென்றார்கள். அங்கு ஏனைய நபிமார்களுடன் இரு ரக்ஆத்களைத் தொழுதபின், அவ்விடத்தில் இருந்து அல்லாஹ்வைத் தரிசிப்பதற்காக ஸித்ரதுல் முன்தஹா வரை, முகம்மது (ஸல்) அவர்களை ஜிப்ரில் (அலை) கூட்டிச் சென்றார்கள். செல்லும் வழியில் முதலாம் வானத்தில் ஆதம் (அலை) அவர்களையும், இரண்டாம் வானத்தில் யஹ்யா (அலை), ஈஸா (அலை) அவர்களையும், மூன்றாம் வானத்தில் யூசுப் (அலை) அவர்களையும், நாலாம் வானத்தில் இத்ரீஸ் (அலை) அவர்களையும், ஐந்தாம் வானத்தில் ஹாரூன் (அலை) அவர்களையும், ஆறாம் வானத்தில் மூஸா (அலை) அவர்களையும், ஏழாம் வானத்தில் இப்றாஹிம் (அலை) அவர்களையும் சந்தித்து ஸலாம் கூறினார்கள். அதன் பின் ஸித்ரதுல் முன்தஹாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு தினந்தோறும் எழுபதாயிரம் மலக்குகள் தவாபு செய்கின்ற, பைதுல் மஉமூர் எனப்படுகின்ற, விண்ணுலகில் உள்ள க.்பா ஆலயமும், சுவர்க்கமும், நரகமும் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டன. அங்கு வைத்தே அல்லாஹ்வின் திவ்விய தரிசனத்தைப் பெறும் பாக்கியத்தையும் கண்ணியத்தையும் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். தினம் ஒன்றிற்கு ஐம்பது நேரத் தொழுகையை அல்லாஹ் அன்பளிப்பாக அங்கு வைத்து வழங்கினான். மீண்டு வரும் வழியில் மூஸா (அலை) அவர்களிடம் இவ்வன்பளிப்புப் பற்றிக் கூறிய போது, முகம்மது (ஸல்) அவர்களின் சமுதாயத்தினர் ஐம்பது நேரத் தொழுகையைத் தினந்தோறும் நிறைவேற்றச் சக்தியற்றவர்கள். ஆதலால் மீண்டும் அல்லாஹ்விடம் சென்று இவ்வெண்ணிக்கையைக் குறைத்து வருமாறு அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். அதற்குச் செவிமடுத்து முகம்மது (ஸல்) அல்லாஹ்விடம் சென்று முறையிட்ட போது, அல்லாஹ் பத்து நேரத் தொழுகையைக் குறைத்தான் இத்தொழுகையையும் நிறைவேற்றுவது சிரமம் என்று மூஸா (அலை) அறிவுறுத்தியதால் மீண்டும் மீண்டும் சென்று முறையிடவே, பத்துப் பத்தாகக் குறைத்து, ஈற்றில் ஐந்து நேரத் தொழுகையாகக் குறைத்துக் கொண்டார்கள். அதனையும் குறைக்குமாறு கேட்க அவர்கள் வெட்கப்பட்டார்கள். இவ்வைந்து நேரத் தொழுகையும் ஐம்பது நேரத் தொழுகயின் நன்மைகளைப் பொதிந்துள்ளன.

மி.்றாஜில் இருந்து மீண்டு வந்த பின், அல்லாஹ்வின் ஆற்றலை மறைக்க விரும்பாத முகம்மது (ஸல்) அவர்கள், ஹதிம் எனும் இடத்தில் இருந்த முத்இம் இப்னு அதி, அபூஜஹல் போன்றவர்களிடம் தன் விண்ணுலகப் பிரயாணம் பற்றி அறிவித்தார்கள். அங்கு கூடிய குறைசியர் அதனை நம்ப முடியாமல் வியப்பால் வாயடைத்து நின்றார்கள். நேற்று வரை நீர் கூறியவற்றை விடவும் நம்பமுடியாத ஒன்றையே இன்று நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூறுகின்றீர் என்று முத்இம் இப்னு அதி கூறி இறைதூதரை மிகப் பெரிய பொய்யர் என்று சாடினான். இருமாத ஒட்டகைப் பிரயாணத் தூரத்தைக் கொண்ட பைதுல் முகத்தஸ் நகருக்கும், அங்கு இருந்து விண்ணுலகுக்கும் ஓர் இரவின் ஒரு பகுதியில் சென்று வந்தார் என்ற கூற்றை அவர்களால் நம்பவே முடியவில்லை. இச்செய்தியை ஒருவர் அபூபக்ர் (றழி) அவர்களிடம் கூறி இதனையும் நம்புகிறீரா? என்று கேட்ட போது, முகம்மது (ஸல்) அவர்கள் அவ்வாறு கூறினாரா? என்று அபூபக்ர் (றழி) அவரைக் கேட்டபோது, ஆம் என்றார். அவ்வாறு அவர்கள் கூறினால் அதனை நான் நம்புகிறேன் என்று பகர்ந்தார்கள்.

முகம்மது (ஸல்) அவர்கள் ஒருபோதும் பைதுல் முகத்தஸுக்குச் சென்றிருக்கவில்லை என்பதை காபிர்கள் அறிந்திருந்தனர். ஆதலால் அவர்களின் பிரயாணத்தின் உண்மைத் தன்மை பற்றி அறிய, பைதுல் முகத்தஸின் அமைப்பு பற்றி முத் இம் இப்னு அதி அவரிடம் விசாரித்தான். அபூபக்ர் (றழி) அவகளும் இத்தகையதோர் வேண்டுகோளை விடுத்துள்ளார்கள். அச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ் பைதுல் முகத்தஸை அவர்களின் கண்களுக்குப் புலப்படச் செய்தான். அதனால் தன் கண்முன் இருக்கும் ஒன்றைப் பார்த்துக் கொண்டு பதில் சொல்வது போல, மிகத் தெளிவாகவும் அச்சொட்டாகவும் பதில் கூறினார்கள். இறைதூதரின் பதிலைக் கேட்டு, உங்களை இறைத்தூதர் என்று சாட்சியம் கூறுகிறேன் என்று அபூபக்ர் உண்மைப்படுத்தியதானாலேயே முகம்மது (ஸல்) அவர்கட்கு "அஸ்ஸித்தீக்" என்று அன்றைய தினம் நாமம் சூட்டினார்கள்.

முகம்மது (ஸல்) அவர்களின் "மி்ராஜ்" அனுபவத்தை முஸ்லிம்கள் முழுமையாக நம்பிய போதும், அவர்களில் பின்வந்தோரில் சிலர் இதனைக் கனவு நிலை அனுபவம் என்றும், மற்றுஞ் சிலர் ஆன்மீக அனுபவங்கள் என்றும் கூறுவர். எனினும் ஸலபுஸ்ஸாலிஹீன்கள் முதல் தற்காலம் வரையிலான, அறிஞர்களில் பெரும்பாலானோர், முகம்மது (ஸல்) அவர்கள் தம் உடலுடனே ஸித்ரத்துல் முன்தஹா வரை சென்று மீண்டார்கள் என்று நம்புவர்.

மி்ராஜ் ஒரு கனவு நிலை அனுபவம் என்று கொண்டிருப்பின், இதனைக் குறைசிக் காபிர்கள் நிராகரித்திருக்க மாட்டார்கள். மனிதர்களின் இயல்பு நிலை ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பல்வேறு அனுபவங்களை கனவு நிலையில் பெற முடியும் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். அஃதன்றி இஃது ஒரு கனவு நிலை அனுபவம் எனின், நபித்துவத்தை நிறுவும் ஒரு சாட்சியாக ஒரு முஃஜிதாவாக அதனைக் கொள்ள முடியாது என்பதும் நோக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இஃது ஓர் ஆன்மீக அனுபவம் என்பதுவும் எதுவிதச் சிறப்பு நிலை அந்தஸ்தையும் முகம்மது (ஸல்) அவர்களுக்கு வழங்குவதில்லை. ஆன்மீக ஞானிகள் கூட ஆன்மீக ரீதியான அனுபவங்களைப் பெறமுடியும். ஆன்மீகப் பிரயாணம் செய்வதற்கு அவர்கள் வருணித்தது போன்ற வாகனம் ஒன்று தேவைப்படுவதும் இல்லை. ரூஹை அன்றி உடலைச் சுமந்து செல்வதற்கு மட்டும் வாகனம் தேவைப்படுகிறது என்ற உண்மை புறக்கணிக்கத்தக்கதுமல்ல.

முகம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்தும் ஓர் அத்தாட்சியாக இம்முஃஜிதாவைக் கொள்வதாயின், அதனைக் கனவு நிலை அனுபவம் என்றோ, ஆன்மீக அனுபவம் என்றோ பிரகடனப் படுத்தி அவ்விலக்கை அடைய முடியாது என்பது நோக்கத்தக்கதாகும். மிஃராஜின் இயல்பு பற்றிய இவ்விரு வகைக் கருத்துக்களிலும் சிறப்பு நிலை ஏதும் இல்லை என்பதும் உண்மையாகும். அல்லாஹ்வின் ஆற்றலைப் பகிரங்கமாகக் கூறப் பயப்படும், அல்லது தயங்கும், அன்றேல் பகுத்தறிவுக்குப் பொருந்த முடியாததை ஏற்க மறுக்கும் தன்மையுடையவர்களே கனவுநிலை, அல்லது ஆன்மீக அனுபவங்கள் என்று வலியுறுத்த முனைகின்றனர் எனலாம்.

முகம்மது (ஸல்) அவர்கள் தங்களது உடலுடன் ஏழுவானங்களையும் தாண்டி, ஸிதரதுல் முன்த்ஹா வரை சென்று, ஒரே இரவின் ஒரு பகுதியில் மீண்டும் வந்தார்கள் என்று நம்புவதற்கான ஆதாரங்களை அல்குர்ஆனில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். அல்லாஹ் மிஃராஜ் பற்றிக் குறிப்பிட "அஸ்ரா" என்ற பதத்தையே கையாண்டுள்ளான். கஃபதுல்லாஹ்வில் இருந்து பைத்துல் முகத்தஸ் வரை சென்ற பயணத்தைச் சிறப்பாகவும், ஸித்ரதுல் முன்தஹா வரை சென்ற பயணத்தைப் பொதுவாகவும் இப்பதம் சுட்டி நிற்கிறது. தனது அடியாரை இராவழிப் பயணம் நடத்தினான் என்று அல்குர்ஆன் குறிப்பிடும் போது "அஸ்ரா", "அப்து" எனும் இப்தங்களைக் கையாண்டுள்ளது. இங்கு அப்து என்ற பதம் ரூஹை மட்டுமன்றி உடலையும் ரூஹையும் உள்ளடக்கிய மனிதன் என்ற பொருளைத் தாங்கி நிற்கிறது என்பதும், இராவழிப் பயணம் ஒரு வாகனத்தில் அமர்ந்தவாறு மேற்கொள்ளப்பட்டது என்று ஹதீஸில் விளக்கப்பட்டிருப்பதும் உடலுடன் சென்றார்கள் என்ற கருத்தை வலியுருத்துகிறது என்பர். இஸ்ராயீலின் சந்ததியினரை, பிர்அவ்னின் கொடுமைகளில் இருந்து காத்துக் கொள்வதற்காக, வெளியேற்றுமாறு மூஸா (அலை) அவர்களுக்குக் கட்டளையிடும் போது இவ்விருபதங்களையும் கையாண்டிருப்பதைக் காண முடிகிறது.

"பின்னர் மூஸாவுக்கு நாம் வஹி அறிவித்தோம். (இஸ்ராயீலின் சந்ததிகளாகிய என்னுடைய அடியார்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அழைத்துக் கொண்டு நீர் இரவுக்கு இரவே சென்று விடும்...."
(26:52)

பைத்துல் முகத்தஸ் வரை உடலுடன் இராவழிப்பயணம் நடாத்தி, அங்கு உடலைக் கிடத்தி விட்டு ரூஹ் மட்டும் விண்ணுலகு வரை வழிநடாத்தப்பட்டது என்று கொள்ளத் தேவையில்லை. அவ்வாறு ரூஹ் மட்டுமே செல்வதாயின், க.'பாவில் உடலைக் கிடத்திவிட்டு அங்கிருந்தே ரூஹ் மட்டும் வழிநடாத்தப்பட்டிருக்க முடியும் என்பதும் சிந்திக்கத்தக்கதாகும்.

தனது அத்தாட்சிகளைக் காண்பிப்பதற்றகாவே முகம்மது (ஸல்) அவர்களை அல்லாஹ் இராவழிப் பயணம் நடாத்தினான் என்ற கருத்தைக் கொண்டுள்ள 17:1 ஆம் ஆயத்தில் கையாண்டுள்ள "ருஉயா" (லிநுரியஹா) என்ற பதம் புறக்கண்ணால் பார்ப்பதையே குறிக்கின்றது என்று அல்குர்ஆன் விரிவுரையாளர்களுள் மிகச் சிறந்த ஒருவராகக் கருதப்படும் இப்னு அப்பாஸ் (றழி) சுட்டிக்காட்டியிருப்பது நோக்கத்தக்கதாகும்.

மி.'ராஜ் சென்று வந்தமை பற்றி முகம்மது (ஸல்) அவர்கள் அறிவித்தபோது, முஸ்லிம்களில் சிலரும் முஸ்லிம் அல்லாதோரும் அதற்கான அத்தாட்சியைத் தருமாறு கேட்டார்கள். தான் பைத்துல் முகத்தஸுக்கு செல்லும் வழியில் வர்த்தகக் கரவன் ஒன்றைச் சந்தித்ததாகவும், அக்கரவனின் ஒட்டகக் கூட்டத்தில் இருந்து வழிதவறிச் சென்ற ஒட்டகை ஒன்று இருக்கும் இடத்துக்கு அக்கரவனின் தலைவனைத் தாம் கூட்டிச் சென்று காட்டியதாகவும் அக்கரவனின் ஒட்டகைகளில் சுமந்துசென்ற தண்ணீர்க் கூசா ஒன்றில் இருந்து தான் நீர் அருந்தியதாக முகம்மது (ஸல்) கூறினார்கள். குறைசியர் அக்கரவனின் தலைவனைச் சந்தித்து விசாரித்த போது அவன் அவர்களின் கூற்றை உண்மைப்படுத்தினான் என்ற தகவல், முகம்மது (ஸல்) அவர்கள் உடலுடன் இந்த யாத்திரையை மேற்கொண்டார்கள் என்பதைக் காண்பிக்கின்றது.

இமாம் நவவி (றஹ்) அவர்கள் ஸஹீஹ் முஸ்லிமுக்கு எழுதிய விளக்கவுரையில், ஆரம்பகால புகஹாக்கள், முஹத்திஸ்கள், அறிஞர்கள் என்பவர்களில் மிகப் பெரும்பாலானோர் முகம்மது (ஸல்) தனதுடலுடன் விண்ணுலக யாத்திரை மேற்கொண்டார்கள் என்ற கருத்தை ஏற்றுள்ளார்கள் என்று குறித்திருப்பதும் சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

தனது முயற்சியால் சந்திரனில் சஞ்சரித்து மீண்டு வந்துள்ள வரலாற்றை கொண்டுள்ள தற்கால மனிதனைப் பொறுத்தவரை முகம்மது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

(ஸல்) உடலுடன் சென்று மீண்டார்கள் என்ற கருத்தை ஏற்கத் தயக்கம் காட்டத் தேவையில்லை. எதுவுமற்ற நிலையில் இருந்த அண்டசராசரங்களையும், அவற்றில் வாழ்வனவற்றையும் படைத்த அல்லாஹ், தன்படைப்புக்களில் ஒன்றை தன்பால் அழைத்துக் கொள்வதற்குச் சக்தியுடையவன் என்பதில் கொஞ்சமும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. அல்லாஹ் அழைத்த போது, முகம்மது (ஸல்) அவர்கள் பிரயாணம் செய்வதற்கான ஏற்படுகளை அல்லாஹ்வே ஒழுங்கு படுத்தி வழங்கிய போது, அவர்கள் விண்ணுலகம் சென்றார்கள். அல்குர்ஆனை, தன்னிடம் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக வழங்க அல்லாஹ் ஆற்றல் பெற்றிருந்ததை நம்பும் மனிதன், அல்லாஹ் இறைதூதரைத் தன்னிடம் அழைத்து, தனது அத்தாட்சிகளை அவர்களுக்கு காட்டினான் என்பதை நம்ப முடியாதிருப்பதற்கான நியாயங்கள் இல்லை.

அல்லாஹ் தனதத்தாட்சிகளைக் காண்பிப்பதற்காகவே முகம்மது (ஸல்) அவர்கள் இராவழிப் பயணம் நடாத்துவித்தான் என்பதை அல்குர்ஆன் 17:1 ஆம் ஆயத் காண்பிக்கிறது. அல்லாஹ்வின் ஆற்றல் மனிதனுக்கு முழுமையாகப் புலப்படுவதற்குத் தடையாக இருப்பது காலமும் மனிதனின் பலவீனமான புலன்களுமாகும். இவற்றின் தாக்கத்தில் இருந்து அவர்களை விடுவித்து, ஸித்ரதுல் முன்தஹாவில் இறை தரிசனம் வழங்கப்பட்டபோது, அவனது ஏகத்துவத்தினதும், அவனது படைப்புக்களினதும் முழுமைத் தன்மை அவர்களுக்குப் புலப்பட்டது. அவர்களின் கண்முன் அண்டசராசரங்களும், அனைத்துப் படைப்பினங்களும், மட்டுமன்றி, உண்மைக்கும் பொய்மைக்கும் இடையிலான போராட்டமும், சுவர்க்கமும் நரகமும் அவர்களுக்குத் தென்பட்டன. மிஃறாஜின் போது அவர்கட்குக் காண்பிக்கப்பட்ட மிகப் பெரும் அத்தாட்சி, அவை அனைத்தும் ஒரே நேரத்தில் முழுமையாகக் காண்பிக்கப்பட்டமை எனலாம். ஆன்மீக ஞானிகளும் அறிஞர்களும் இறைபடைப்பின் தன்மையை அவதானிக்க முடியுமாயினும், அது குருடர்கள் யானை பார்த்த கதையாகவே அமையும் என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

மிஃறாஜின் போது தொழுகை கடமையாக்கப்பட்டு, மனிதனின் ஆன்மீக எழுச்சிக்கும் மேம்பாட்டிற்கும் உரமிடப்பட்டது போலவே, மிஃறாஜ் நிகழ்ந்த காலகட்டத்தில் அருளப்பட்ட அல்இஸ்ரா என்ற அத்தியாயத்தில், எதிர்காலத்தில் அமையப் போகின்ற முஸ்லிம் சமுதாயத்தில் இருக்க வேண்டிய பண்புகள் பல சுட்டிக்காட்டப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அகபா உடன்படிக்கை

இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் தூதை மக்காவில் முன்வைத்த போது, ஒரு சிறு குழுவினர் அதனை ஏற்றுக் கொண்டனர். அதன் மூலம் அங்கு வாழ்ந்த அரேபியர்களில் இருந்து வேறுபடுத்தி இனங்காணத்தக்கதாக அவர்கள் பரிணமித்தார்கள். தமது நம்பிக்கைக்கு ஏற்ற ஒரு வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு, அக்குழுவினர் வளர்ந்த போது, தமது சிந்தனைப் போக்கு, நம்பிக்கை, வாழ்க்கை முறை என்பவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக அக்குழுவினர் இருப்பதை, பாரம்பரிய வாழ்க்கை முறையைப் பின்பற்றிய அரேபியர் இனங்கண்டு, அவர்களைத் துன்புறுத்தினர். இதனால் முஸ்லிம்களில் ஒரு குழுவினரை முகம்மது (ஸல்) அவர்கள் நுபுவ்வத்தின் ஐந்தாம் ஆண்டில் அபிசீனியாவுக்கு அனுப்பினார்கள். இஸ்லாத்தை ஏற்றவர்களின் இன்பதுன்ப நிகழ்வுகள், அவர்களின் பாதுகாப்பு, அவர்களின் சமூக வாழ்வு என்பவற்றிலும் அவர்கள் ஈடுபாடு காட்டினார்கள் என்பதை இந்நிகழ்வு காட்டுகிறது.

இஸ்லாமியக் கோட்பாடு பரவலாக ஏற்கப்படுவதற்கும், அதனை ஏற்றோர் பாதுகாப்பாக வாழ்வதற்குமான களங்களைத் தேடுவதற்குமாகவே முகம்மது (ஸல்) தாயிப் சென்றார்கள். இப்பயணம் தோல்வியில் முடிந்தபோதும் இம்முயற்சியை அவர்கள் கைவிடவில்லை. இவ்விலக்கை அடைவதற்காகவே, ஹஜ்ஜுக்காக யதரிபில் இருந்து வந்த அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தினருடன் தொடர்பு கொண்டார்கள். அத்தொடர்பு வலுவடைந்த போது, முகம்மது (ஸல்) அவர்கள் யதரிப் வாசிகளுடன் "அகபா" எனுமிடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள் இவ்வுடன்படிக்கையே அகபா உடன்படிக்கை என்றழைக்கப்படுகிறது. முஸ்லிம் சமூக அமைப்பு, அதன் பாதுகாப்பு என்பவற்றைப் பொறுத்தவரை, மிக முக்கியம் வாய்ந்த இவ்வுடன்படிக்கைதான் முகம்மது (ஸல்) அவர்கள் செய்து கொண்ட முதல் அரசியல் உடன்படிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அரசியற் பின்னணி:

இக்காலப்பகுதியில் மக்காவிலோ, யத்ரிப் நகரிலோ குடிமக்கள் எல்லோரையும் கட்டுப்படுத்திப் பரிபாலிக்கக் கூடிய "அரசு" என்று கருதத்தக்க அதிகாரம் உடைய ஒரு தாபனம் இருக்கவில்லை, இரு நாகர்களிலும் வாழ்ந்த முக்கிய கோத்திரங்கள் தமது உறுப்பினரைத் தம் கட்டுப் பாட்டில் வைத்திருந்தன. அக்கோத்திரங்கள், ஒன்றினை மிஞ்ச மற்றொன்று போராடுவதைக் காண முடிந்தது. நுபுவ்வத்தின் தோற்றத்திற்கு முன்பு, மக்காவில் உமையா ஹாசிமிக் கோத்திரங்கள் அதிகாரப் போராட்டத்தில் குதித்திருந்தன. ஆயினும், நுபுவ்வத்தின் பின் மக்காவாசிகள் தமது கோத்திரப் போராட்டத்திற்கு அப்பால் நின்று, வேறுபட்ட சிந்தனைப் போக்கிற்கும், வாழ்க்கை முறைக்கும் உரிமை கொண்டாடும் இரு குழுக்களாகப் பரிணமித்தன. மரபு ரீதியான சிந்தனையும் வாழ்க்கைப் போக்குமுடையவர்கள் தமது கோத்திரப் பகைமையையும் மறந்து, புதிய சிந்தனைப் போக்கை, வாழ்க்கை முறையை எதிர்ப்பதில் ஒன்றுபட்டனர்.

மக்காவின் பரிபாலனம், குறிப்பாக க..பாவின் பரிபாலனம், பொருளாதார வளம், ஆட்பலம் என்பன மரபுரீதியான வாழ்க்கைப் போக்குடையோரிடம் இருந்தன. வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பும் இவர்களிடமே இருந்தது. இதனால் மக்காவுக்கு வெளியேயுள்ள கோத்திரங்களிலும் இவர்களது செல்வாக்கை ஓரளவு காணமுடிந்தது. புதிய சிந்தனைப்போக்கைப் பின்பற்றிய முஸ்லிம்களை இவர்கள் வெறுத்தனர். தமது பாரம்பரிய வாழ்க்கை முறைக்குச் சவால் விடுபவர்களாக இவர்களைக் கருதி, மரபு ரீதியான வாழ்க்கை முறையைக் கைக்கொள்ளுமாறு வற்புறுத்தினர். மறுத்தோரைத் துன்புறுத்தினர். சமூக வாழ்வில் பங்கு கொள்ள இடமளிக்காது, "சி..பு அபுதாலிப்" என்னுமிடத்தில் மூன்று வருடங்களாக ஒதுக்கி வைத்தனர். எனினும் மரபு ரீதியான தலைமைத்துவத்தைத் தாங்கிய இக்குழுவுக்குப் பயந்து தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்க ஒருபோதும் முஸ்லிம்கள் தயாராக இருக்கவில்லை.

இப்புதிய குழாத்தினரின் தலைவரான முகம்மது (ஸல்) அவர்கள், தமது பகைவர்கள் தம்மைவிட இராணுவப் பலம் வாய்ந்தவர்கள் என்பதை அறிந்திருந்தார்கள். தனது கோத்திரமான பனூமுத்தலிப்களும் பனூ ஹாசிமிக்களும் குறைசிக் காபிர்களின் கொடுமைகளிலிருந்து தன்னைக் காக்கச் சக்தி பெற்று இருந்த போதும், தனது பகைவர்களான குறைசிக் காபிர்கள் மீது போர் தொடுக்க அவர்களிடம் போதிய பலம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இருக்கவில்லை என்பதையும், அத்தகையதொரு போராட்டத்தின் போது, முஸ்லிம்கள் அனைவரையும் பாதுகாகக்கூடிய சக்தி தம்மிடம் இல்லை என்பதையும் அறிந்திருந்தார்கள். இதனால்தான் சஹாபாக்கள் சிலரை அபிசீனியாவுக்கு அனுப்பினார்கள். மக்காவுக்கு வெளியே தாயிபில் களம் தேடினார்கள். யத்ரிப் வாசிகளான அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தாருடன் தொடர்புகளை ஏற்படுத்தினார்கள். முஸ்அப் இப்னு உமைர் (றழி) அவர்களை யத்ரிப்புக்கு அனுப்பி அங்கு சாதகமான சூழலை ஏற்படுத்தினார்கள். இவை இக்காலப் பகுதியில் குறைசிக் காபிர்களும் முஸ்லிம்களும் போட்டிக் குழுக்களாக வளர்ந்தனர் என்பதையும், தமது பலத்தைப் பயன்படுத்தி குறைசியர் முஸ்லிம் குழுவை நசுக்க முயற்சித்ததால், முஸ்லிம்கள் மக்காவுக்கு வெளியே வாழ்வதற்கான பாதுகாப்பான இடத்தைத் தேட வேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளாகியிருந்தார்கள் என்பதையும் காட்டுகின்றன.

யத்ரிபில் வாழ்ந்த குடிமக்களில் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவர்களும் யூதர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களில் யூதர்கள் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். சிரியாவில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் யூதர்கள் மீது படையெடுத்தனர். போரில் யூதர்களை முழுமையாக அழிக்க முடியாது போனதால் அவ்ஸ், கஸரஜ் கோத்திரத்தினரை அவர்களுக்கு எதிராகத் தூண்டி யூதர்களைப் படுகொலை செய்ய முயற்சித்தனர். இதனால் யூதர்கள் மதீனாவில் வைத்திருந்த செல்வாக்கு வெகுவாகக் குறைந்தது. இதன் விளைவாக யூதர்கள் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரங்களிடையே பகைமையை ஏற்படுத்த முயற்சித்தனர். ஒன்றிற்கு கெதிராக மற்றொன்றை மோதச் செய்வதில் வெற்றி கண்டனர். அவர்கள் யூதர்களின் தூண்டுதலால் அடிக்கடி மோதிக் கொண்டனர் அவர்களிடையே நடைபெற்ற "புஆத்" யுத்தம் மிகப் பயங்கரமானதாகும். ஒவ்வொரு குழுவும் மற்றக் குழுவை பூண்டோடு அழிக்கவே முயற்சித்தது. ஆரம்பத்தில் அவ்ஸ் கோத்திரத்தினர் தோல்விகண்ட போதும் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு கடுமையாக மோதியதால் கஸ்ரஜ் கோத்திரத்தினர் படுதோல்வி அடைந்தனர். இதனால் இரு கோத்திரங்களிலும் உயிர்ச் சேதம் பொருள் சேதம் ஏற்பட்டன. இதன் விளைவாக யூதர்கள் யத்ரிப் நகரில் தாம் இழந்திருந்த அரசியல், பொருளாதார செல்வாக்கை மீண்டும் நிலைநாட்டிக் கொண்டனர். அவர்கள் யத்ரிப் அரபிகளை அடிக்கடி அச்சுறுத்தினர். ஒரு புதிய நபி தோன்றப்போகிறார் என்றும் தாம் அவரை அழைத்து வந்து, ஆத், இரம் வாசிகள் முற்றாக ஒழிக்கப்பட்டதைப் போன்று இவ்வரபியரையும் பூண்டோடு அழித்து விடுவதாகவும் அடிக்கடி எச்சரித்தார்கள்.

அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவர்கள் யூதர்களின் சதிக்குள்ளாகித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாம் பேரிழப்படைந்ததாகக் கருதினர். தம்மிடையே மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்தி கஸ்ரஜ் கோத்திரத்தவரான அப்துல்லாஹ் பின் முஹம்மது என்பவரைத் தம் தலைவராக்கிக் கொண்டனர் இப்பின்னணியில் தான் ஹஜ்ஜுக்காக வந்த இடத்தில் யத்ரிப்வாசிகள் "அகபா" என்னுமிடத்தில் இறைதூதரைச் சந்தித்தனர். முகம்மது (ஸல்) அவர்கள் தன்னை இறைத்தூதர் என்று அறிமுகப்படுத்திய போது, யூதர்கள் இறைதூதரை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு தாம் ஏற்றுக்கொண்டு தம் கையைப் பலப்படுத்த வேண்டும் என்று கருதினார்கள்.

யத்ரிபில் யூதர்களுக்கு எதிராக தம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கருதிய அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவரும், மக்காவில் குறைசிக் காபிர்களின் கொடுமைகளிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வழிதேடிய முகம்மது (ஸல்) அவர்களும், ஹஜ் காலத்தின் போது கி.பி 621 இல் அகபா எனும் இடத்தில் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள். அடுத்த ஆண்டு அதே இடத்தில் அவ்வுடன்படிக்கைக்கு மேலும் ஒரு நிபந்தனையைச் சேர்த்துக் கையொப்பமிட்டார்கள். இவ்வுடன்படிக்கை இரண்டாம் அகபா உடன்படிக்கை என்றழைக்கப்படுகின்றது இப்பின்னணியில் இவ்வுடன்படிக்கையை நோக்கும் போது, ஒடுக்கப்பட்ட இரு குழுவினர் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்காக, தம்மிடையே செய்து கொண்ட ஓர் உடன்படிக்கையாக அது இருப்பதை அவதானிக்கலாம்.

### உடன்படிக்கை நியதிகள்:

யத்ரிப் வாசிகள் பன்னிரண்டு பேருக்கும் முகம்மது (ஸல்) அவர்களுக்குமிடையில் கி.பி. 621ல் முதலாம் அகபா உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதன் நிபந்தனைகள் பின்வருமாறு.

அ. அல்லாஹ்வுக்கு ஒருவரையும் இணையாக்குவதில்லை.
ஆ. களவு எடுப்பதில்லை
இ. விபசாரம் புரிவதில்லை
ஈ. தமது பிள்ளைகளைக் கொலை செய்வதில்லை
உ. அறிந்து கொண்டே தீமைகள் அல்லது பாவம் புரிவதில்லை.
ஊ. நன்மை தரும் இறை கட்டளைகள் எதற்கும் மாறு செய்வதில்லை.

அடுத்த வருடம் யத்ரிப் வாசிகள் இரண்டு பெண்கள் உட்பட எழுபத்து மூன்று பேர் முகம்மது (ஸல்) அவர்களுடன் அகபா எனும் அதே இடத்தில் சந்தித்து ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர். அதுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இஸ்லாத்தை ஏற்றிராத அப்பாஸ் (றழி) அவர்களும் முகம்மது (ஸல்) உடன் இருந்தார்கள். முதல் வருடம் செய்து கொண்ட உடன்படிக்கையின் நியதிகளுடன், பின்வரும் நியதியையும் இவ்வுடன்படிக்கையில் சேர்த்துக் கொண்டார்.

எ. தமது பெண்களையும் பிள்ளைகளையும் பாதுகாப்பது போல முகம்மது (ஸல்) அவர்களையும் தோழர்களையும் அவர்கள் பாதுகாப்பார்கள்.

## அதன் இலட்சியம்

இவ்வுடன்படிக்கையின் இலட்சியம் மிகத் தெளிவானது. அதன் நிபந்தனைகள் மட்டுமன்றி, அவ்வுடன்படிக்கை நடந்த காலமும் சூழலும் அவ்விலட்சியத்தை மேலும் தெளிவாக்குகின்றன. குறைசியர்களின் கொடுமையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வழியேதுமின்றி இருந்த ஒரு சந்தர்ப்பத்தில், முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புத் தருவதாகக் கூறி அழைப்பு விடுத்த போது, பாதுகாப்பே முக்கிய பிரச்சினை என்பதால் வேறு நிபந்தனைகள் இன்றி, அதனை ஏற்றிருக்க வேண்டும் அவ்வாறின்றி மேலும் சில கருத்துக்களுடன் இரு குழுவினரும் உடன் பட்டிருந்தனர் என்பது, இவ்வுடன்படிக்கை பாதுகாப்பை மட்டுமன்றி உயர்ந்ததோர் இலட்சியத்தைக் கருத்திற் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

முதலாம் அகபா உடன்படிக்கை இடம்பெற்ற அதே ஆண்டில்தான் மிஃறாஜ் நிகழ்ச்சி இடம்பெற்றது. இந்நிகழ்வு காலத்தில் அருளப்பெற்ற "பனூ இஸ்ராயில்" எனும் சூரா முஸ்லிம் சமூகத்தில் தென்பட வேண்டிய ஒழுக்க மாண்புகளை அழகாகச் சுட்டிக் காட்டியுள்ளது. குறிப்பாக அதன் 23 - 40 வரையிலான ஆயத்துக்களில் இவை விபரிக்கப்பட்டுள்ளன. இஸ்லாத்தின் அடுத்த வளர்ச்சிக் கட்டமான சமூக அமைப்புக்கு ஏற்பாடு செய்வது போன்ற, அல்லது அதற்குத் தகைமை ஆக்குதற்குத் தேவையான குர்ஆன் ஆயத்துக்கள் அருளப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் அகபா உடன்படிக்கை இடம் பெறுகிறது. ஆதலால்தான் அகபா உடன்படிக்கை பாதுகாப்பை மட்டுமன்றி யத்ரிபில் அமையப்போகும் சமூகத்தின் ஒழுக்க மாண்புகளைப் பற்றியும் பேசுகிறது. முன்மாதிரியான ஒரு சமூகத்தை உருவாக்குவதே அதன் முக்கியமான நோக்கமாக இருந்தது எனலாம். இவ்வுடன்படிக்கைக்கு ஏற்ப முகம்மது (ஸல்) யத்ரிப் சென்ற பின் எடுத்த நடவடிக்கைகள் எல்லாம் சமூக அமைப்பைக் கட்டியெழுப்புவதையே கருத்திற் கொண்டிருந்தன என்பதும் நோக்கத்தக்கதாகும். இவ்வுடன்படிக்கையின் விதிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. அதன் முதலாவது விதி மதீனாவில் அமையப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போகும் முஸ்லிம் சமூகம் அதுகாலவரை அரேபியாவில் இருந்த மரபுரீதியான கோத்திர அமைப்புச் சமூகமாக அமையாது, கொள்கை வழிச் சமூகமாக அமையும் என்பதை பிரகடனப்படுத்துகிறது. தவ்ஹீத் கொள்கையை ஏற்றவர்கள் அதன் உறுப்பினர்களாக இருப்பர். ஜாஹிலிய்யாச் சமுகத்தில் இருந்தது போன்ற இணைவைப்புக்கு அங்கு இடமில்லை என்பதை உணர்த்துகிறது. மேலே குறிப்பிட்ட பனூ இஸ்ராயீல் சூராவின் 23 ஆம் ஆயத்தும் இதனையே வலியுறுத்துகிறது.

இவ்வுடன்படிக்கையின் 2-5 வரையிலான விதிகள் இச்சமூகத்தின் வாழ்வோர் கொலை, களவு, விபசாரம் போன்ற கொடிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட மாட்டார்கள் என்பதை வலியுறுத்துகின்றன. அமையப் போகும் அச்சமூகத்தில் கடுமையான பாவமான காரியங்கள் இடம்பெற மாட்டா என்பதை இவ்விதிகள் உத்தரவாதப்படுகின்றன. ஜாஹிலியா சமூகத்தில் இத்தகைய பண்புகள் பாராட்டப்பட்டன. இதற்கு மாற்றமாக முஸ்லிம் சமூகத்தில் அவை முழுமையாக ஒழிக்கப்படும் என்பதையே பிரகடனப்படுத்துகின்றன. அதன் ஆறாம் விதி, இச்சமூகத்தவர் நன்மையான, பயன்தரும் காரியங்களைச் செய்வர். அதற்கு ஒருவருக்கொருவர் துணையாக இருப்பர் என்பதைப் பிரகடனப் படுத்துகின்றது. அல்குர்ஆன் பல இடங்களில் சமூகத்தில் இருக்க வேண்டிய இந் நல்லம்சங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதைக் காண முடியும். குறிப்பாக, ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்த பின் ஆண்களும் பெண்களும் இஸ்லாத்தில் நுழையலாயினர். அப்போது பின்வருமாறு "பைஅத்" செய்யுமாறு கேட்கப்பட்டார்கள்.

"நபியே! விசுவாசம் கொண்ட பெண்கள் உம்மிடம் வந்து (அல்லாஹ்வுக்கு யாதொன்றையும் இணைவைப்பதில்லை, திருடுவதில்லை, விபசாரம் புரிவதில்லை, தங்கள் கை கால்களுக்கிடையில் பாவம் செய்து (சோரம் போய் அதுபற்றி) கற்பனையான அவதூறு கூறுவதில்லை) என்று உம்மிடம் (பைஅத்) வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்டு, நீர் அவர்களுக்காக (முன்னர் அவர்கள் செய்த குற்றங்களுக்காக) அல்லாஹ்விடத்தில் மன்னிப்பைக் கோரும். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்போனும் கிருபையுடையோனுமாக இருக்கிறான்"

இக்குர்ஆன் ஆயத்தில் இஸ்லாமிய ஒழுக்க மாண்புகள், அவற்றின் சிறப்பியல்புகள் கூறப்பட்டுள்ளன. இவ்வாயத்தில், பைஅதுல் அகபா உடன்படிக்கை நிபந்தனைகளில் பெரும்பாலானவை சுட்டிக் காட்டப்பட்டுள்ளதையும் காணலாம்.

இவ்வுடன்படிக்கையின் ஏழாம் விதி, இச்சமூகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தலைமைத்துவத்திற்கு முற்று முழுதாகக் கீழ்படிவதையும், தமது உயிரை அர்ப்பணித்தேனும் தலைமைத்துவத்தைப் பாதுகாப்பது பற்றியும் பேசுகின்றது. இவ்விரு பண்புகளைப் பற்றிப் பேசும் அல்குர்ஆன் ஆயத்துக்கள் பல இருக்கின்றன.

இவற்றையெல்லாம் அவதானித்துப் பார்க்கும்போது, பைஅதுல் அகபா உடன்படிக்கை, இஸ்லாமியச் சமூக அமைப்பொன்றை உருவாக்குவதை முதன்மை இலட்சியமாகக் கொண்டிருந்தது எனலாம். இவ்விலட்சியத்துக்குச் செயல்வடிவம் கொடுக்கவே இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள். அங்கு சென்று உருவாக்கப்போகும் சமூகத்தைப் பாதுகாப்பதற்காக, அங்கு வாழ்ந்த குடிமக்களுடன் "மதீனா சாசனம்" என்ற ஓர் உடன்பாட்டை ஏற்படுத்தினார்கள். அதற்காகவே பல போர்களில் பங்கு கொண்டார்கள். அச்சமூகத்தை ஸ்திரப்படுத்தி, வியாபிக்கச் செய்வதற்காக ஹுதைபிய்யா உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள் என்பதை நோக்கலாம். இத்தகையதொரு முன்மாதிரியான சமூகம் யத்ரிபில் அமைந்து விட்டால் அது தமக்கு மிகப்பெரும் சவாலாக அமையும் என்பதாலேயே, குறைசிக் காபிர்கள் முகம்மது (ஸல்) யத்ரிப் செல்லமுன் அவரைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். அவர்கள் அங்கு குடியேறி, முஸ்லிம் சமூக அமைப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அச்சமூகம் ஸ்திரமடையுமுன் அதனை ஒழிக்கப் பல முறை போர் தொடுத்தார்கள் என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மதீனாவை நோக்கி

அகபா உடன்படிக்கை நிபந்தனைகளை ஏற்று, பைஅத் செய்த பின், மதீனாவில் இஸ்லாமியப் பிரசாரப் பணிக்குப் பொறுப்பாகப் பன்னிருவரை முகம்மது (ஸல்) நியமித்தார்கள். அவர்களுள் ஒன்பது பேர் "கத்ரஜ்" கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு:

### கஸ்ரஜ் கோத்திரத்தவர்கள்:

01 அபூ உமாமா அஸ்அத் இப்னு சுரார
02 ஸஅத் இப்னு ரபிஉ
03 அப்துல்லாஹ் பின் ரவாஹத்
04 ராபிஉ இப்னு மாலிக் இப்ல் இஜ்லான்
05 பராஉ இப்னு மஉரூர்
06 அப்துல்லாஹ் இப்னு அம்ரிப்னு ஹராம்.
07 உபாதத் இப்னு ஸாமித்
08 ஸஅத் இப்னு உபாதா
09 முன்திர் இப்னு அம்ரு

### அவ்ஸ் கோத்திரத்தவர்கள்:

10 அஸ்ஸத் இப்னு ஹுலைர்
11 ஸஅத் இப்னு ஹய்ஸமா
12 ருபாஆ இப்னு அப்துல் முன்திர்

இறைதூதருடன் செய்து கொண்ட இவ்வுடன்படிக்கையின் பின் யத்ரிப் வாசிகள் தம் கூடாரத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். மறுதினம் குறைசியர் இவ்வுடன்படிக்கை பற்றிக் கேள்விப்பட்டு, உண்மையை அறிந்துகொள்வதற்காகக் கத்ரஜ் கோத்திரத்தினரின் கூடாரத்துக்குச் சென்றார்கள். அவர்களில் இஸ்லாத்தை ஏற்றிராத யத்ரிப்வாசிகள் அப்படி ஓர் உடன்படிக்கை நடைபெறவில்லை என்று சத்தியம் செய்தார்கள். உண்மையிலே உடன்படிக்கை பற்றி அவர்கள் ஒன்றும் அறிந்திருக்கவில்லை. உடன்படிக்கை செய்து கொண்ட முஸ்லிம்கள், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தார்கள். அவர்கள் அது பற்றி ஒரு கருத்தும் தெரிவிக்கவில்லை. அதன் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள் அவ்ஸ் கோத்திரத்தின் கூடாரத்துக்குச் சென்றனர். அங்கு அப்துல்லாஹ பின் உபை இடம் விசாரித்தனர். அவனும் கஸ்ரஜ கோத்திரத்தவர்கள் கூறியது போலவே கூறினான். எனினும் குறைசியர் இவ்வுடன்படிக்கை பற்றித் தீவிரமாக விசாரித்து, அது உண்மை என்று அறிந்து கொண்டனர். அதன்பின் மீண்டும் யத்ரிப்வாசிகளைத் தேடிச் சென்றபோது ஸஅத் இப்னு உபாதா, முன்திர் இப்னு அம்ரு ஆகிய இருவரையும் தவிர மற்றையோர் சென்றிருந்தனர். இவ்விருவரும் தலைவர்களாக நியமிக்கப்பட்ட பன்னிருவருள் இருவர் ஆவார்.

குறைசியர் ஸஅத் இப்னு உபாதாவைப் பிடித்து, கைகளைக் கழுத்தில் கட்டி, அடித்துத் துன்புறுத்தி, தலைமுடியைப் பிடித்து மக்கா வரை இழுத்து வந்தனர். மக்காவாசிகள் மதீனாவூடாக பாதுகாப்பாகச் செல்ல வேண்டும் என்பதை ஞாபகமூட்டி துன்புறுத்தாது விட்டுவிடுமாறு கேட்டுக் கொண்டதனால் ஸஅதை விட்டு விட்டார்கள். இஸ்லாத்தை ஏற்ற யத்ரிப்வாசிகளதும், அங்கு அல்குர்ஆனை போதிக்கச் சென்ற முஸ்அப் இப்னு உமைர் (றழி) என்பவரதும் தீவிரப் பிரசாரம் காரணமாக யத்ரிபில் இஸ்லாம் துரிதமாகப் பரவலாயிற்று. இதனால் ஆத்திரமும் அச்சமும் அடைந்த குறைசியர் மக்காவில் வாழ்ந்த ஆதரவற்ற முஸ்லிம்களுக்குச் செய்யும் கொடுமைகளையும் துன்பங்களையும் இரட்டிப்பாக்கினர். மக்காவில் வாழ்வது சாத்தியமில்லை எனும் அளவு கொடுமை அதிகரித்தது. முஸ்லிம்கள் மதீனாவில் குடியேறி அமைதியாக வாழ்வதையோ, அங்கிருந்து அவர்கள் தம் பிரசாரப் பணியைப் புரிவதையோ குறைசியர் விரும்பவில்லை. தமது ஆதிக்கத்துக்கப்பால் அவர்கள் சென்றுவிடுவதால், அவர்களின் முயற்சியை எதிர்காலத்தில் தடுக்கவும் முடியாது போகும் என்று கருதினர். ஆதலால் இஸ்லாத்தில் இணைந்தவர்களைத் தமது கொடுமைகள் மூலம் மீண்டும் தமது பழைய நம்பிக்கையின்பால் ஈர்ப்பதனை, அன்றேல் அவர்கள் ஹிஜ்ரத் செல்வதைத் தடுப்பதை இலக்காகக் கொண்டே இவ்வாறு துன்புறுத்தினார்கள்.

ஸஹாபாக்கள் தாம் அனுபவிக்கும் துன்பதுயரங்களை முகம்மது (ஸல்) அவர்களிடம் முறையிட்டார்கள். முகம்மது (ஸல்) அவர்கள் யத்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்லக் கனவு கண்டதாகவும், யத்ரிபுக்கு ஹிஜ்ரத் செல்ல விரும்புபவர்கள் போகலாம் என்றும் அறிவித்தார்கள். ஸஹாபாக்கள் தத்தமது வசதிகளுக்கு ஏற்ப தனித்தும் கூட்டாகவும் சென்றார்கள். மவாலிகள், பலவீனமானோர் என்போர் இரகசியமாகவே சென்றனர். உமர் பின் கத்தாப் போன்ற வீரதீரமிக்கவர்கள் பகிரங்கமாக அறிவித்துவிட்டுச் சென்றார்கள். அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் சென்றிருந்த ஸஹாபாக்களும் மதீனாவுக்கு வந்து சேர்ந்தார்கள். மக்காவில் வாழ்ந்த முஸ்லிம் ஆண்கள், பெண்கள், பிள்ளைகள் என்போரில் மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பலவீனமானவர்களும், குறைசியர் தடுத்து வைத்திருந்த சிலரும், ஹஸரத் அபூபக்ர்(றழி), அலி (றழி) ஆகியோரும் தவிர்ந்த மற்ற எல்லோரும் மதீனாவுக்குச் சென்றிருந்தனர். அல்லாஹ்வின் அனுமதியை எதிர்பார்த்து முகம்மது (ஸல்) அவர்களும் ஹிஜ்ரத் செல்வதற்காகக் காத்திருந்தார்கள். இரண்டாம் அகபா உடன்படிக்கை நடைபெற்ற இருமாதங்களுக்கிடையில் முஸ்லிம்களில் பலர் மதீனாவுக்குச் சென்றுவிட்டனர். மக்காவாசிகள் மக்காவில் பாழடைந்து போகும் குடிமனைகளைக் கண்டு விசனமடையும் அளவு அவர்களின் உள்ளத்தில் இது பாதிப்பை ஏற்படுத்தியது. தங்களுக்கிடையில் வேற்றுமையை தோற்றுவித்து, தமது ஜமாஅத்தைக் கலைத்தவர் தம்மைச் சேர்ந்த ஒருவரே என்று கவலையடைந்தனர். தம் சமய, கலாசாரத்தைப் பேணுவதற்காகப் பிறந்த மண்ணை, உறவினரை, சொத்து செல்வங்களை உதாசீனம் செய்து செல்லும் முஸ்லிம்களின் துணிவு அவர்களிடையே கலக்கத்தையே தோற்றுவித்தது. ஆதலால் முகம்மது (ஸல்) அவர்கள் அங்கு செல்வதைத் தடுக்க வேண்டும் என்று குறைசியர் கருதினர்.

இதுபற்றிக் கலந்துரையாடுவதற்கு தாருந்நத்வாவில் ஒரு கூட்டத்துக்கு அழைப்புவிடுத்தனர். இக்கூட்டத்தில் உத்பா, ஷைபா, அபூசுப்யான், அபூ ஜஹ்ல், ஜுபைர் இப்னு முத்அம், நள்ரு பின் ஹாரிஸ், உமையா பின் கலப் முதலாம் பிரமுகர்கள் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் முகம்மது (ஸல்) அவர்களை ஆயுட்காலம் வரை சிறையில் அடைக்க வேண்டும், நாட்டை விட்டும் துரத்த வேண்டும், அவர்களைக் கொலை செய்ய வேண்டும் என்ற மூன்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. முன்னைய இரு ஆலோசனைகளையும் நிராகரித்து, ஆபூ ஜஹ்ல் முன்வைத்த மூன்றாவது ஆலோசனையை சபை ஏற்றுக் கொண்டது. ஹாசிமிக்களின் பழிக்குப் பழிவாங்கல் முயற்சியை வியர்த்தமாக்கும் நோக்குடன், ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து ஒவ்வொரு வாலிபனைத் தெரிவு செய்து, அவர்களைக் கொண்டு இறைதூதரின் வீட்டை முற்றுகையிடச் செய்து, அனைவரும் ஒரே முறையில் இறைதூதரைத் தாக்கிக் கொலை செய்ய வேண்டும் என்று அபூஜஹ்ல் கூறிய வழிமுறையைப் பின்பற்றுவதாகவும் முடிவெடுத்தனர். இறைதூதரை அவர்கள் கொலை செய்வதில் இவ்வாறு அனைத்துக் கோத்திரங்களும் பங்கு கொண்டால், அனைத்துக் கோத்திரங்களுடனும் போரிட ஹாசிமிக்கள் சக்தியற்றவர்கள் என்பதால், நஷ்டஈடைப் பெற்றுக் கொண்டு அமைதியாவர் என்று கருதியே இவ்வாறான திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த முயற்சித்தனர். இதனை அல்லாஹுதஆலா பின்வருமாறு அறிவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"நபியே உம்மைச் சிறைப்படுத்தவோ, அல்லது உம்மைக் கொலை செய்யவோ, அல்லது உம்மை (ஊரைவிட்டு) வெளியேற்றி விடவோ உமக்கு விரோதமாக நிராகரிப்போர் சூழ்ச்சி செய்து கொண்டிருந்த நேரத்தை நினைத்துப்பாரும். அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். (அவர்களுக்கு எதிராக) அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். ஆனால் சூழ்ச்சி செய்பவர்களில் எல்லாம் அல்லாஹ் மிக்க மேலானவன்" (8:30)

இத்தகையதொரு சூழலில் ஒருதினம் முகம்மது (ஸல்), அபூபக்ர் (றழி) அவர்களின் வீட்டுக்கு வந்து, மதீனாவுக்குச் செல்ல அல்லாஹ் அனுமதி வழங்கியிருப்பதாக அறிவித்தார்கள். தான் ஏற்கனவே தயார் நிலையில் வைத்திருந்த இரு ஒட்டகைகளில் ஒன்றை முகம்மது (ஸல்) பிரயாணம் செய்ய வழங்குவதாக அபூபக்ர் (றழி) கூறியபோது, அவ்வொட்டகத்தை இறைதூதர் (ஸல் ) விலை கொடுத்து வாங்கிக் கொண்டார்கள்.

குறைசியர் தம் திட்டத்தை நிறைவேற்ற முகம்மது (ஸல்) அவர்களின் வீட்டை இரவில் முற்றுகையிட்டனர். முகம்மது (ஸல்), அலி (றழி) அவர்களைத் தன் படுக்கையில் போர்த்திக் கொண்டு படுக்குமாறும், குறைசிக்காபிர்கள் தன்னிடம் அடைக்கலமாக வைத்திருந்தவற்றை உரியவரிடம் ஒப்படைத்து விட்டு மதினாவுக்கு வந்து சேருமாறும், கூறிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினார்கள். ஒரு பிடி மண்ணை எடுத்து, யாசீன் சூறாவில் முதல் ஒன்பது ஆயத்துக்களை ஓதி, காவலர் கண்முன்னே எறிந்து விட்டு, அவர்கள் அறியாதவிதமாக வெளியேறினார்கள். காவலர்களோ சுவர்களில் இருந்த ஓட்டைகளினூடாக அவர்களின் படுக்கையை அவதானித்தவாறு மறுநாள் காலைவரை காவலில் இருந்தனர். முகம்மது (ஸல்) வீட்டை விட்டு காலையில் வெளியேறும் போது அவர்களைக் கொலை செய்வதே வாலிபர்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.

முகம்மது (ஸல்) அவர்கள் நேராக அபூபக்ர் (றழி) அவர்களின் வீட்டுக்கு சென்று, அவர்களைக் கூட்டிக் கொண்டு, மக்காவை விட்டு வெளியேறி, "தௌர்" மலைக்குன்றின் குகை ஒன்றில் அடைக்கலமாயினர். அக்குகையின் வாயிலில், அல்லாஹ் கிளைவிட்டுப் படர்ந்த மரம் ஒன்றைப் படைத்து, குகை வாயிலில் சிலந்தி வலைகளைப் பிண்ணச் செய்து, புறாக்களைக் கூடு கட்டி வாழச் செய்யும் அற்புதம் ஒன்றை ஏற்படுத்தி வைத்தான். அபூபக்ர் (றழி) அவர்களின் மகன் ஒவ்வொரு தினமும் மாலை இருள் சூழ்ந்து வரும் போது, தன் மந்தையை அப்பகுதியால் ஓட்டிவரச் செய்து தேவையான பாலை அவ்விருவருக்கும் வழங்கி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறைசி வாலிபர்கள் மறுநாட் காலை முகம்மது (ஸல்) அவர்களின் படுக்கையில் இருந்து அலி (றழி) அவர்கள் எழுந்து வருவதைக் கண்டு, தம் திட்டம் பிழைத்து விட்டதை அறிந்து கொண்டனர். முகம்மது (ஸல்) அவர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். எனினும் வெற்றி காணவில்லை. மூன்று தினங்கள் "தௌர்" குகையில் தங்கியிருந்தபின், அபூபக்ர் (றழி) அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான, அதுவரை இஸ்லாத்தை ஏற்றிராத, அப்துல்லாஹ் பின் அர்கத் என்பவரை வழிகாட்டியாகக் கூட்டிக் கொண்டு, மதீனாவை நோக்கிப் பிரயாணமானார்கள். இவர்கள் செல்லும் வழியில் இருந்த உம்மு மஉபத் என்பவரது வீட்டில் பால்வற்றிய ஆடு ஒன்றின் பால் மடியை முகம்மது (ஸல்) தடவிவிடவே, பால் சுரந்ததால் அதை அருந்தித் தாகசாந்தி செய்து கொண்டார்கள். வழியில் வர்த்தகத்துக்காகச் சென்று மீண்டுவரும் சுபைர் இப்னுல் அவாம் அவர்களைச் சந்தித்தார்கள். அவர் முகம்மது (ஸல்) அவர்களுக்கும் அபூபக்ர் (றழி) அவர்களுக்கும் இரு வெண்ணிற ஆடைகளை அன்பளிப்புச் செய்தார். வர்த்தகத்தில் இருந்து மீண்டு வந்துகொண்டிருந்த தல்ஹா பின் உபைதுல்லாஹ்வும் முகம்மது (ஸல்) அவர்களுக்கு சில உடைகளை அன்பளிப்புச் செய்தார்கள். முகம்மது (ஸல்) நுபுவ்வத் பதின்மூன்றாம் ஆண்டில் றபிஉல் அவ்வல் பிறை எட்டாம் திகதி குபாவைச் சென்றடைந்தார்கள். அங்கு அம்ருபின் அவ்ப் கோத்திரத்தைச் சேர்ந்த குல்தூம் பின் ஹின்த் என்பவர் வீட்டில் தங்கியிருந்தாகள். அலி (றழி) அவர்கள் மக்காவில் மூன்று தினங்கள் தங்கி, அடைக்கலப் பொருட்களை உரியவர்களுக்குக் கொடுத்தபின் குபாவுக்கு வந்து சேர்ந்தார்கள். இதன் பின் முகம்மது (ஸல்) அவர்களதும், அபூபக்ர் (றழி) அவர்களதும் குடும்பத்துப் பெண்களை, சைது (றழி) அவர்களும் அப்துல்லாஹ் பின் அபீபக்ரு (றழி) அவர்களும் கூட்டிச் சென்றனர்.

குபாவில் தங்கியிருந்த போது அங்கு ஒரு மஸ்ஜிதைக் கட்டினார்கள். அதனைக் கட்டி எழுப்புவதற்காக முகம்மது (ஸல்) அவர்களும் தோழர்களுடன் சேர்ந்து உழைத்தார்கள் தோளில் கற்களைச் சுமந்து சென்றார்கள்.

குபாவில் சில தினங்கள் தங்கியிருந்த பின், வெள்ளிக்கிழமை காலையில் மதீனாவை நோக்கிப் புறப்பட்டார்கள். செல்லும் வழியில் பனூஸாலிம் எனப்படும் இடத்தில், ஜும்ஆத் தொழுகையை நிறைவேற்றினார்கள். இதுவே அவர்களது முதலாவது ஜும்ஆத் தொழுகையாகும். அங்கு அவர்கள் ஆற்றிய குத்பாப் பிரசங்கம் மிகவும் பிரபல்யமானதாகும். ஜும்ஆத் தொழுகையின் பின், முகம்மது (ஸல்) மதீனாப் பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். முகம்மது (ஸல்) அவர்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தோழர்களும், மதீனத்துப் பிரமுகர்களும் மதீனாவில் ஊர்வலமாகப் போனார்கள். மதீனாவாசிகள் ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் தங்குமாறு முகம்மது (ஸல்) அவர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். தான் பிரயாணம் செய்யும் வாகனம் எந்த வீட்டின் முன் நிற்கிறதோ, அதே வீட்டில் தான் தங்குவதாகக் கூறினார்கள். அவர்கள் ஒட்டகையின் கடிவாளத்தைத் தளர்த்தி சுயமாகச் செல்லவிட்டார்கள். ஒட்டகை அபூ அய்யூப் அல் அன்சாரி (றழி) அவர்களின் வீட்டின் முன்றிலில் தங்கியது. மதீனாப்பள்ளி வளவில் தனக்கான வீடு கட்டப்படும் வரை, முகம்மது (ஸல்) அவர்கள் அந்த வீட்டிலே ஏழு மாதங்கள் தங்கினார்கள்.

தனதுயிரைக் காத்துக் கொள்வதற்காக ஓடிப் போன ஒரு பிரயாணம் இந்த ஹிஜ்ரத், என்ற கருத்தைக் கீழைத்தேய ஆய்வாளர்களில் சிலர் முன்வைப்பதுண்டு. இது பொருத்தமற்ற ஒரு கருத்து என்பதைப் பின்வரும் அம்சங்கள் காண்பிக்க வல்லன. இரண்டாம் அகபா உடன்படிக்கையின் போது முகம்மது (ஸல்) அவர்களுக்கும் ஸஹாபாக்களுக்கும் மதீனாவில் குடியேறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்களைப் பாதுகாப்பதாகவும் மதீனாவாசிகள் வாக்குறுதி அளித்தனர். அதற்கேற்ப அகபா உடன்படிக்கை நடைபெற்றதற்கும் முகம்மது (ஸல்) ஹிஜ்ரத் செல்வதற்கும் இடையிலான நான்குமாத காலப்பகுதியில் ஆண்களும் பெண்களுமாகப் பலர் ஹிஜ்ரத் சென்றிருந்தனர். அதில் ஒரு தொடர் கட்டமாகவே முகம்மது (ஸல்) அவர்களின் பயணம் அமைந்தது. இறைதூதர் கூட மதீனாவுக்குச் செல்லும் ஏற்பாடுகளை முன்கூட்டிச் செய்த பின்னே தன் வீட்டில் இருந்து பிரயாணம் செய்தனர். தௌர் குகையில் உணவுக்கான ஏற்பாடு, மக்காவில் குறைசியர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கான ஏற்பாடு, ஒரு வழி காட்டியை உடன் கூட்டிச் செல்வதற்கான ஏற்பாடு, தன்னிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டுள்ள பொருட்களை உரியவர்களுக்கு ஒப்படைப்பதற்கான ஏற்பாடு என்பவற்றை எல்லாம் திட்டமிட்டு செய்துவிட்டே அன்றிரவு தன் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். முஸ்லிம்களின் ஹிஜ்ரத்தில் முகம்மது (ஸல்) அவர்களின் பயணம் ஒரு கட்டம் என்பதையும், முகம்மது (ஸல்) சென்ற பின், அவர்களதும் அபூபக்ர் (றழி) அவர்களதும் குடும்பத்தினரை மதீனாவுக்குக் கூட்டிச் செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன என்பதையும் அவதானிக்கும் போது இது ஒரு திட்டமிட்ட பிரயாணம் என்பது புலனாகும்.

ஹிஜ்ரத் செல்வதற்கான காரணிகள் பல இருந்தபோதும், குறைசியரின் கொடுமை காரணமாக மக்காவில் இஸ்லாத்தின் வியாபகம் தேக்கமடைந்தமையே அதற்கான முக்கிய காரணியாகும். பொருளாதார, அரசியல் நலன்களைப் பேணும் பிரபு வர்க்கத்தினர், கொடுமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்து மக்களை அச்சுறுத்தியதால் அவர்கள் இஸ்லாத்தில் இணையப் பயந்தனர்.

மக்காவில் போல மதீனாவில் சமயத்தின் பெயரால் சலுகைகளையும் முன்னுரிமைகளையும் பெற்ற ஒரு சமூகம் இருக்கவில்லை. எதிர்க்கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்க்கக்கூடிய அளவு மதீனாவாசிகள் மக்காவாசிகளை விடக் கலாசார முன்னேற்றம் கண்டிருந்தனர். மதீனாவாசிகள் மதீனாவில் வாழ்ந்த யூதர்களுடனும் கிறித்தவர்களுடனும் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்ததால் வஹி பற்றிய சிந்தனையும், ஏகத்துவம் பற்றிய கோட்பாடுகளும் அவர்களுக்கு அறிமுகமாகி இருந்தன. ஆதலால் இஸ்லாமியக் கோட்பாட்டை அணுகும் போது முழுவதும் அன்னியமானதோர் உணர்வுடன் செயற்பட வேண்டிய சூழல் அவர்களுக்கு இருக்கவில்லை.

அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தவர்கள் வருடக் கணக்கில் சண்டையிட்டு அலுத்துப் போயிருந்தனர். போலி கௌரவம் காரணமாக அவர்கள் தமக்கிடையில் நேரடியாக ஒற்றுமையாக விரும்பவில்லை. தமக்கிடையே நீதமாக சமாதானம் செய்து வைக்க நம்பத்தகும் ஒருவர் தேவைப்பட்டார். முகம்மது (ஸல்) அவர்களை அத்தகைய ஒருவராக நம்ப முடியும் என்று கருதியதால் அவ்விரு குழுவினரும் அவர்களுக்கு அழைப்பு விடுத்து இஸ்லாத்தில் இணைய முன்வந்தனர். அஃதன்றி மக்காவின் தலைமைத்துவத்துக்கு எதிராக மதீனாவின் தலைமைத்துவத்தை இறைதூதரின் துணையுடன் வளர்த்து விட முடியும் என்றும் அவர்கள் நம்பியிருக்க முடியும். முகம்மது (ஸல்) அவர்களின் பாட்டனின் தந்தையான ஹாசிம், கஸ்ரஜ் கோத்திரத்தில் விவாகம் புரிந்திருந்ததால், முகம்மது (ஸல்) அவர்களுக்கு மதீனாவுடன் இரத்த உறவும் இருந்தது. இவை மதீனா ஹிஜ்ரத் சாத்தியமாவதற்கான காரணிகளாக அமைந்தன.

ஹிஜ்ரத் இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். முகம்மது (ஸல்) அவர்களின் வாழ்வில் அது ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்தது. முஸ்லிம் பக்தர்கள் அனுபவித்த துன்பங்கள், துயரங்கள். சித்திரவதைகள், தோல்வி மனப்பாங்கு என்பன மறைந்து, கண்ணியம், கௌரவம், உபசரிப்பு, அங்கீகாரம் என்பன மூலம் புதுத் தெம்புடைய ஒரு சமூகமாக அவர்கள் பரிணமித்தனர். பிறந்த தாயகத்தில் இருந்து முகம்மது (ஸல்) துரத்தப்பட்டாலும், மதீனா அவரைத் தலைவராக ஏற்று, மாலை சூட்டி வரவேற்றது. தனது பரம்பரைப் பெயரான யத்ரிப் எனும் பெயரை மாற்றி ("மதீனதுன்னபி") மதீனா என்னும் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெயரையே சூட்டிக்கொண்டது. மக்கத்து முஹாஜிர்களுக்கு நிலபுலன்களையும், வீடு வாசல்களையும் வழங்கி கௌரவித்தது.

மக்காவில் முகம்மது (ஸல்) அவர்கள் ஒரு சமயபோதராக மட்டுமே செயற்பட்டார்கள். ஆயின், மதினாவிற் குடியேறியது முதல் அவர்கள் சமய போதகராக மட்டுமன்றி, அரசியற் தலைவராகவும் செயற்பட ஆரம்பித்தார்கள். மதீனாவில் வாழ்ந்த யூத, கிறித்தவ பாரம்பரிய சமய நம்பிக்கைகளுடைய குழுக்களும் அவர்களின் அரசியல் ரீதியான தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் அளவு இராஜதந்திரத்துடன் முகம்மது (ஸல்) நடந்து கொண்டார்கள். அகதிகளாக வந்து தங்கியுள்ள முஹாஜிர்களை அன்சாரிகளுடன் இணைத்து, சகோதரர்களாக்கி விட்டதுபோல, அரசியல் ரீதியாக மதினாவில் வாழ்ந்த முஸ்லிம்களையும் முஸ்லிம் அல்லாதவர்களையும் பிரசைகளாக்கி விட்டார்கள். இஸ்லாமியக் குடியரசின் ஒரு யாப்பாக அமைந்த இந்த மதீனா சாசனம் பாதுகாப்பு கேடயமாகவும் அமைந்தது. மக்காவில் பண்பட்ட தனிநபர்களை உருவாக்குவதில் வெற்றி கண்ட முகம்மது (ஸல்) அவர்கள், மதீனாவின் சமூகத்தை இஸ்லாமிய சமூகமாக மாற்றியமைப்பதிலும் வெற்றிகண்டார்கள். முன்மாதிரியான ஒரு நடுநிலைச் சமூகத்தை மதீனாவில் அமைப்பதில் அவருக்கு அல்குர்ஆன் துணைநின்றது.

28 JUN 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மதீனா சாசனம்

மதீனா நகரில் வாழ்ந்த முஸ்லிம்களுடனும் யூதர்களுடனும் தமதுரிமைகள், கடமைகள் பற்றிய ஓர் உடன்படிக்கையை நபிகளார் (ஸல்) அவர்கள் செய்து கொண்டார்கள். இவ்வுடன்படிக்கையே மதீனா சாசனம் எனப்படுகின்றது. இவ்வுடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட காலப்பருவத்தில் மதீனா வாசிகள் பல்வேறு குழுக்களாகவும் கோத்திரங்களாகவும் பிரிந்திருந்தனர். இக்குழுக்கள் ஒவ்வொன்றும் தத்தமக்கே உரிய பின்னணியில் தனித்துவமாகச் சிந்தித்தது. இக்காலப்பகுதியில் இங்கு வாழ்ந்த மிகப் பெரிய குழுவினர் முஸ்லிம்களாவர். இவர்கள் "முஹாஜிர்கள்" "அன்சாரிகள்" என்று ஹிஜ்ரத்தின் பின் இனங்காணப்பட்டிருந்தனர். இஸ்லாமிய நம்பிக்கை, அகபா உடன்படிக்கை, முஹாஜிர்களை அன்சாரிகளின் சகோதரர்களாக்கி (முஆ..காத்) மதினாவில் வாழச் செய்தமை என்பன இவ்விரு குழுக்களும் கருத்தொருமித்து வாழ வழிகோலின. இருந்த போதும், காலங்காலமாக அவர்களிடம் ஊறிப்போயிருந்த கோத்திர அடிப்படையிலான உணர்வுகள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் துளிர்க்க முடியும் என்று நபிகளார் (ஸல்) கருதியிருக்க

மதீனாவில் வாழ்ந்த காபிர்கள் அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களிடம் நீண்ட காலமாகப் பகைமையும், போராட்டமும் நிலவின. ஆயினும் மதீனாவின் புதிய சூழலில் இவர்களின் முதன்மை வெகுவாகக் குறைந்திருந்தது. மதீனாவில் முஸ்லிம்கட்கும் யூதர்களுக்கும் மத்தியில், தாம் சிக்குண்டு இருப்பதாக இவர்கள் உணர்ந்தனர். இதனால் முஸ்லிம்களையும் யூதர்களையும் ஒற்றுமைப்பட விடாது பிரித்து வைக்க முயற்சித்தனர்.

மதீனாவில் கணிசமான அளவில் யூதர்கள் வாழ்ந்தனர். பனூகைனுகாக் கோத்திர யூதர்கள் கைபருக்கு அருகேயும் வாழ்ந்தனர். இவர்கள் நபிகளார் (ஸல்) அவர்களின் தலைமையில் அரேபியாவில் வளரும் சக்தியைத் தமக்கு சார்பாகப் பயன்படுத்தி பலஸ்தீனில் இருந்து தம்மை வெளியேற்றிய கிறிஸ்தவர்களிடம் இருந்து பழிவாங்குவதை இலக்காக வைத்தே இவ்வாதரவை நல்கினர். அனைத்து மக்களின் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற விரும்பிய நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்களும் யூதத் தலைவர்களைத் தாமே சென்று நேரில் சந்தித்துக் கௌரவப்படுத்தியதுடன், "அஹ்லுல் கிதாப்கள்" என்றழைத்து அவர்களைக் கண்ணியப்படுத்தினார்கள். பைத்துல் முகத்தஸைத் தம் கிப்லாவாக முஸ்லிம்கள் கொண்டிருந்தமையும் யூதர்களுடன் நட்புறவு வளரத் துணையாகியது.

அவ்ஸ், கஸ்ரஜ் கோத்திரங்களுக்கிடையில் நடைபெற்ற "புஆத்" யுத்தத்தில் கஸ்ரஜ் கோத்திரத்தவர் வெற்றியடைந்த போதும், போரின் பயனை உண்மையில் அனுபவித்தவர்கள் யூதர்களேயாவர். இதனையுணர்ந்து, தம் பகைமையை மறந்து, ஹிஜ்ரத்துக்குச் சற்று முன் அப்துல்லாஹ் பின் உபையைத் தம் மன்னராக்க அவ்விரு கோத்திரத்தவரும் தீர்மானித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நபிகளாரின் மதீனா வருகையால் இது தடைப்பட்டது. இதனால் இத்தகையதொரு வாய்ப்பை மீண்டும் பெற அப்துல்லாஹ் பின் உபை முயற்சிக்கக்கூடும். நபி (ஸல்) அவர்களின் மதீனாக் குடியேற்றம் குறைஷியரின் சிரியாவுடனான வர்த்தகத்தைப் பெரிதும் பாதிக்கும் என்றும், முஸ்லிகளுடனான சமய அரசியல் ரீதியான பகைமை பெரும் போருக்கு வழி வகுக்க முடியும் என்றும், மதீனாவில் ஸ்திரமடையும் முன்பே தம்மீது குறைசியர் படையெடுக்க முடியும் என்று நபிகளார் (ஸல்) அவர்கள் கருதியிருப்பார்கள். அத்தகையதொரு வெளிநாட்டுப் படையெடுப்பை எதிர் கொள்ள, மதீனாவில் பல்வேறு குழுக்களுக்கிடையே ஐக்கியத்தையும், கருத்தொருமைப்பாட்டையும், கட்டுக்கோப்பையும் உருவாக்குவது தவிர்க்க முடியாத தேவையாகும் என்று நபிகளார் (ஸல்) கருதியிருப்பார்கள்.

மதீனாவில் ஹிஜ்ரத்துடன் உருவாகிய இஸ்லாமிய சமூகமும் அரசும் இன்னும் குழந்தை பருவத்தைத் தாண்டவில்லை. ஆயினும், இஸ்திரமான அரசு ஒன்றினால் மாத்திரம் எதிர்கொள்ள முடிந்த அச்சுறுத்தலை அது எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவற்றைக் கருத்திற் கொண்டு, பின்வரும் அம்சங்களில் முஹம்மது (ஸல்) உடனடிக் கவனம் செலுத்த வேண்டியேற்பட்டது.

அ. மதீனா அரசின் தலைவர் என்ற முறையில் தனதும், அவ்வரசின் பிரஜைகள் என்ற நிலையில் மதீனாவில் வாழ்ந்த குடிமக்களினதும் உரிமைகளையும் கடமைகளையும் நிர்ணயித்தல்.

ஆ. முஹாஜிர்களின் பொருளாதார இழப்புக்கு ஈடுசெய்து அவர்களின் வாழ்க்கைத் தேவைகட்கு ஏற்பாடு செய்தல்.

இ. அரசியல் நிர்வாகத்தை மேற்கொள்ளல்.

ஈ. இஸ்லாமிய அரசின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம்கள், யூதர்கள், அயலில் வாழ்ந்த ஏனைய கோத்திரத்தவர்கள் என்பவர்களுடன் மதீனா சாசனம் என்று வழங்கப்படும் ஓர் உடன்படிக்கையை முகம்மது (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி முதலாம் வருடத்தில் செய்து கொண்டார்கள்.

இவ்வுடன்படிக்கை இரு பெரும் பகுதிகளைக் கொண்டது. அதன் முதற்பகுதி முஹாஜிர்கள், அன்சாரிகள் என்றினங்காணப்பட்ட முஸ்லிம்களுடன் நபிகளார் (ஸல்) அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கை விதிகளை உள்ளடக்கி உள்ளது. அதன் இரண்டாம் பகுதி யூதர்களுடன் முஹம்மது (ஸல்) அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கை விதிகளை உள்ளடக்கியது.

மதீனாவின் குடிசனப் பரம்பல் கோத்திரப் பண்பு கொண்டது. குறித்த ஓர் இடத்தில் ஒரு கோத்திரத்தவர் மட்டும் வாழ்ந்தனர். அக்கோத்திரங்கள் தமக்கென்று "நகீப்" எனப்பட்ட தலைவரையும், "ஸகீப்" என்ற ஆலோசனை மண்டபத்தையும் கொண்டிருந்தன. இப்பண்பு அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் பொருந்துவதாகும்.

இவ்வுடன்படிக்கை விதிகள் முஸ்லிம்களையும் யூதர்களையும் வெவ்வேறாகக் குறிப்பதாக இருந்த போதும், ஒவ்வொரு கோத்திரமும் தனித்தனியாகப் பெயர் குறிக்கப்பட்டு, உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும். முஸ்லிம்களில் குறைஷியர், பனூ அவ்ப், பனூ ஹாரிஸ், பனூஸஅதா, பனூ ஜஸ்ஹம், பனூ நஜ்ஜார், பனூ அம்ரிப்னு அவ்ப், பனூ நாபித், பனூ அவ்ஸ், யூதர்களிலும் பனூ அவ்ப், பனூ நஜ்ஜார், பனூ ஹாரிஸ், பனூ ஸஅதா, பனூ ஜஸ்ஹம், பனூ அவ்ப், பனூ த..லா, பனூ ஜப்னா, பனூ சுபைதா, எனும் கோத்திரங்களின் பெயர்கள் குறித்துக் காட்டப்பட்டுள்ளன. மதீனா சாசனம் பற்றி எழுதப்பட்டுள்ள, வாசகர்களுக்குக் கிடைக்கும் மிகப் பழைய நூலான இப்னு ஹிசாமின் சீராவில் இவ்வுடன்படிக்கையின் விதிகள் இலக்கமிட்டு அட்டவணைப் படுத்தப்பட்டில்லை. பிற்கால வரலாற்றாசிரியர்கள், விமர்சனம் செய்வதற்கு வசதியாக இலக்கமிட்டு அட்டவணைப் படுத்தியுள்ளனர். அவற்றில் பின்வரும் விதிகள் குறிப்பிட்டுக் காட்டத்தக்கனவாகும்.

1. இவ்வுடன்படிக்கையில் பங்குகொள்வோர் அனைவரும் ஒரு குழுவினராகக் கருதப்படுவர்.
2. தத்தம் கோத்திரக் குற்றவாளிகள் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையைச் செலுத்தி, சிறைக்கைதிகளை விடுவிக்கும் பொறுப்பு அவ்வக்கோத்திரத்தைச் சேர்ந்ததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

3. ஒரு முஸ்லிம் குற்றவாளி செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை செலுத்த அவரது கோத்திரம் சக்தி பெறாவிட்டால், முஸ்லிம் சமூகம் அதனைச் செலுத்த வேண்டும்.
4 சமூக விரோதச் செயல்கள், கொடுமைகள் புரிபவர்கள் தம்மைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களைப் பகிரங்கமாகவே எதிர்த்து நிற்பது முஸ்லிம்களின் கடமையாகும்.
5. நிராகரிப்பவர் ஒருவருக்காகப் பழிவாங்க, ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமைக் கொலை செய்யக் கூடாது. ஒரு முஸ்லிமுக்கு எதிராக ஒரு காபிருக்கு உதவி செய்யக்கூடாது.
6. நபிகளார் (ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்ட யூதர்களுக்குதவுவது முஸ்லிம்களின் கடமையாகும்.
7. எந்த ஒரு முஸ்லிமும் மற்றொரு முஸ்லிமின் நலனை உதாசீனம் செய்து, எதிரிகளுடன் உடன்படிக்கை செய்து கொள்ளக் கூடாது.
8. ஒரு முஸ்லிமை வேண்டுமென்றே மற்றொரு முஸ்லிம் கொலை செய்தமை நிறுவப்பட்டால் இஸ்லாம் வழங்கும் தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படுவார்.
9. தமக்கிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளில் அல்லாஹ்வினதும், அவனது தூதரினதும் வழிகாட்டலையே நாட வேண்டும்.
10. உடன்படிக்கையில் கையொப்பமிடும் யூதர்களும் முஸ்லிம்களும் ஒரு சமூகத்தினராகவே கருதப்படுவர். முஸ்லிம்கள் தம் சமயத்தையும், யூதர்கள் தம் சமயத்தையும் பின்பற்றுவர். சமயம் தவிர்ந்த ஏனைய அம்சங்களில் முஸ்லிம்களும் யூதர்களும் ஒரு சமூகத்தினராகவே கருதப்படுவர்.
11. அவர்களில் எக்குழுவும் குற்றம் புரிந்தால் அல்லது உடன்படிக்கையை மீறினால் தண்டிக்கப்படுவர்.
12. மதீனாவை இரத்தம் சிந்தப்படக் கூடாத புனித நகரமாக அங்கீகரிப்பர்.
13. உடன்படிக்கையில் கையொப்பமிடும் எவரும் முகம்மத் (ஸல்) அவர்களின் அனுமதியின்றி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.
14. முஸ்லிம்களை அல்லது உடன்படிக்கைகளில் கையொப்பமிட்ட யூதர்களை மற்றெவரும் தாக்கினால், முஸ்லிம்களும் சேர்ந்து ஆக்கிரமிப்பாளர்களை எதிர்கொள்தல் வேண்டும்
15. மதீனா தாக்கப்பட்டால், முஸ்லிம்களும் யூதர்களும் சேர்ந்து மதீனாவைப் பாதுகாக்க வேண்டும். முற்றுகையாளர் முன்னேறும் பகுதியில் வாழ்பவர்கள் அப்பகுதியைக் காக்கும் பணியை உடன் ஆரம்பித்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

16. ஒவ்வொரு குழுவும் போருக்காகச் செலவிடும் தொகையை, அவ்வக்குழுவே பொறுப்பேற்றல் வேண்டும்.
17. மக்காக் குறைசியருக்கோ, அல்லது அவர்களின் ஆதரவாளர்களுக்கோ, அவர்களின் உடைமைகளுக்கோ, புகலிடமோ பாதுகாப்போ வழங்கக் கூடாது.
18. பிரச்சினைகள், கருத்து முரண்பாடுகள் என்பவற்றின் போது, நபிகளாரின் வழிகாட்டலே இறுதியானதாகக் கொள்ளப்படும்.

"ஸஹீபா" என்று வழங்கப்பட்ட மதீனா சாசனம் பற்றிய விபரங்களை இப்னு ஹிசாம் தனது "ஸீரா" எனும் நூலில் தந்துள்ளார். நபிகளாரின் வாழ்க்கை வரலாற்றைத் தந்துள்ள இப்னு ஹிசாம், ஹிஜ்ரத் பற்றி எழுதிய பின், அன்சாரிகள் முஹாஜிர்களுக்கிடையிலான முஆ..காத் பற்றி எழுதுவதற்கு முன்பே "ஸஹீபா" பற்றிக் குறித்துள்ளார். மதீனாப் பள்ளியைக் கட்டிய பின் இடம் பெறும் நிகழ்வு எனும் தோரணையில் அக்குறிப்பு அமைந்துள்ளது. உண்மையில் நபிகளார் (ஸல்) தமது சமூக, பொருளியல், அரசயல் பணிகளை ஆரம்பிக்க முன்பு, அவற்றைச் சாத்தியமானதாக்குவதற்காக இத்தகையதோர் உடன்பாட்டைக் காண விளைந்திருப்பார்கள். அரேபியாவின் சமூக, பொருளியல், அரசியல் துறைகளில் முன்னெப்பொழுதும் கண்டிராத ஒரு புரட்சியைத் தோற்றுவிக்கக் கருதிய நபியவர்கள், அதற்குத் தேவையான தளத்தை மதீனாவில் அமைப்பதன் அவசியத்தை உணர்ந்து, மதீனாவை அடைந்ததும் இதற்கு முதன்மை கொடுத்திருக்க முடியும்.

அன்சாரிகள் "பைஅதுல் அகபா" மூலம் நபிகளார் (ஸல்) அவர்களின் தலைமைத்துவத்தை அங்கீகரித்ததுடன், தம்மை அர்ப்பணித்தேனும் அதனைப் பாதுகாப்பதாக வாக்களித்தனர். அன்சாரிகளும் முஹாஜிர்களும் முஸ்லிம்கள் ஆதலால் மதீனா சாசனத்திற்குக் கையொப்பமிடுவதில் வியப்பில்லை. ஆயின், யூதர்கள் இதனை ஏன் ஏற்றுக் கையொப்பமிட்டனர் என்பது நோக்கவேண்டியதொன்றாகும். மதீனாவில் மொத்தம் பதினொரு யூதக் கோத்திரங்கள் இருந்தன. இவற்றுள் பனூ கைனுகா, பனூ நதீர், பனூ குறைழா, எனும் மூன்றுமே பிரதான கோத்திரங்கள். ஏனையன சிறிய கோத்திரங்களாகும். இவை இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் தமது பாதுகாப்புக் கருதி, அரேபிய மரபுப்படி, அரபுக் கோத்திரங்களுடன் பாதுகாப்புடன்படிக்கை செய்து கொண்டிருந்தன. (இதனாற்றான் மதீனா சாசனத்தில் கையொப்பமிட்ட யூதக் கோத்திரங்கள் தமது சொந்தப் பெயரில் குறிப்பிடப்படாது, பாதுகாப்புடன்படிக்கை செய்து கொண்டிருந்த அறபுக் கோத்திரங்களின் பெயர்களில் குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்) இம்மரபைப் பின்பற்றி, மதீனாவில் வளரும் புதிய அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சக்தியை இனங்கண்டு, மதீனா சாசனத்தில் யூதர்கள் கையொப்பமிட்டு இருக்க முடியும்.

அரேபியாவில் நபி ஒருவர் பிறப்பார் என்றும், அவரைத் தமக்காதரவாக்கிக் கொண்டு, மதீனாவில் தமக்கெதிரிகளாக உள்ள அரேபியர்களை ஒழித்துக் கட்டுவதாக மதீனத்து அரேபியர்களுடனான தமது போராட்டத்தின் போது யூதர்கள் கூறி வந்துள்ளனர். ஆதலால் மதீனாவில் அரேபியருக்கு எதிராகத் தமது நலன்களைப் பேணும் நோக்குடனும் இவ்வுடன்படிக்கையில் கையொப்பமிட்டு இருக்கலாம். தமதிந்த ஆசை நிறைவேறாது என்று பிற்காலத்தில் கண்டபோது, அவர்கள் இவ்வுடன்படிக்கையை மீறியமை இக்கருத்தை மேலும் வலியுறுத்தியது.

மதீனா சாசனம் முஹம்மத் (ஸல்) அவர்கள் அரசியல் துறையில் பெற்றுக் கொண்ட மிகச் சிறந்ததொரு சாதனையாகும். மதீனா நகர் முஸ்லிம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், மரபு ரீதியான நம்பிக்கைகளைப் பின்பற்றும் காபிர்கள் முதலானோரை உள்ளடக்கிய பல்லின, பல்சமயக் கலாசாரங்களைக் கொண்ட ஒரு நகராகும். இந்நகர மக்கள் நபிகளார் (ஸல்) அவர்களின் அரசியற் தலைமையை இவ்வுடன்படிக்கை மூலம் அங்கீகரிததுள்ளனர். அதன் வழி, சட்டரீதியான மக்கள் தலைவராக நபிகளாரை அவர்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையூடாக நாட்டின் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொண்ட கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட அறபுத் தலைவர்களைக் காண்பதரிது. இவ்வகையில் நபிகளாரின் அரசியற் சாதனை மகத்தானதும் முன்மாதிரியானதுமாகும். இரத்தம் சிந்தாமலே அதிகாரத்தை மக்களின் ஆதரவுடன் பெற்று, பசுமைப்புரட்சி ஒன்றை உருவாக்கும் அங்கீகாரத்தையும் அதன் வழி பெற்றுக் கொண்டார்கள்.

மதீனாவின் அரசியற் தலைமைத்துவத்தை யூதர்கள் ஏற்றதன் மூலம், மதீனாவின் குடியுரிமையை அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள். இக்குடியுரிமை எவ்வகையிலும் இரண்டாம் தரத்ததாக இருக்கவில்லை. "திம்மிகள்" போல அவர்கள் ஜிஸ்யா செலுத்துமாறு கேட்கப்படவில்லை. மதீனா அரசின் பிரஜைகள் என்ற நிலையில் முழுமையான சமயச் சுதந்திரத்தையும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும், வாழும் உரிமையையும் அவர்கள் பெறுகிறார்கள். மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பொறுத்தவரை, சமய, நிற, மொழி, பிரதேச வேறுபாடு நோக்காது, அனைவருக்கும் அவற்றை வழங்கிய முதற் சாசனம் இது எனலாம். எதுவிதப் போரட்டமும் நடத்தாமலே கி.பி. ஏழாம் நூற்றாண்டுப் பகுதியில் அடிப்படை மனித உரிமைகளை மதீனாக் குடிமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இச்சாசனம் மூலம் பெற்றுக் கொண்டுள்ளார்கள் என்பது நோக்கத்தக்கதாகும்.

அடிப்படை உரிமைகள் பற்றிய கருத்தோட்டத்தை கி.பி. 1215 இல் பிரிட்டனில் உருவாக்கப்பட்ட "மக்னாகாட்டா" எனும் பிரகடனத்தின் மூலம்தான் மனிதர்கள் பெற்றுக் கொண்டனர் என்று அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பதுண்டு. ஆயினும் இவ்வுரிமைகளை மிகத் தெளிவாக வழங்கிய மதீனா சாசனம் கையொப்பமிட்டு ஆறு நூற்றாண்டுகட்குப் பின்புதான் "மக்னா காட்டா" உருவாக்கப்பட்டது என்பது நோக்கத்தக்கதாகும்.

மதீனாக் குடியேற்றத்துக்கே தூண்டுகோலாய் அமைந்த "அகபா" உடன்படிக்கை, கொள்கை வழியில் அமைந்த, தீமைகள் நிகழாத சமூகம் ஒன்றை மதீனாவில் உருவாக்குவதை இலட்சியமாகக் கொண்டிருந்தது. அதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதாக மதீனா சாசனம் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. மதீனா சாசனத்தின் நியதிகளை வாசிக்கும் போது, அறேபியாவில் அதுவரை இருந்த கோத்திர அடிப்படையிலான சமூகப் பண்புகளைப் புறக்கணித்து, "உம்மா" எனப்படும் இஸ்லாமியச் சமூக அமைப்பை நோக்கி மக்களை இட்டுச் செல்ல இவ்வுடன்படிக்கையில் பங்கு கொள்வோருக்குக் கருத்துச் சுதந்திரம் வழங்கப்பட்டிருந்த போதும், இஸ்லாமிய கட்சியின் நலன்களைப் பாதிக்கும் வகைகளில் எவருடனும் உடன்படிக்கை செய்து கொள்வதற்கான உரித்து வழங்கப்படவில்லை. முஸ்லிம் ஒருவரின் நலவுரிமை பாதிக்கப்படக்கூடிய விதத்தில் உடன்படிக்கை செய்யவும் அனுமதிக்கப்படவில்லை. குறிப்பாக மக்காவில் வாழ்கின்ற குறைஷியருக்கோ, அவர்களது உடைமைக்கோ புகலிடமும் பாதுகாப்பும் வழங்கக் கூடாது என்று விதிக்கப்பட்டுள்ளது. தமது உறுப்பினர்கள் பாதிக்கப்பட்ட நிலையிலும் கூட, நபிகளாரின் அனுமதியின்றி எவருக்கு எதிராகவும் போர்ப் பிரகடனம் செய்யும் உரிமையும் மறுக்கப்பட்டுள்ளது. அதன் கருத்து இஸ்லாமியக் குடியரசின் வெளிநாட்டுக் கொள்கையை வகுக்கும் உரிமையை மதீனா சாசனத்தில் கையொப்பமிட்டவர்கள் இழந்து விடுகிறார்கள். அவ்வுரிமையை மதீனாவின் சமூகமே பெற்றுக் கொள்கிறது. குறிப்பாகச் சொல்வதாயின், வெளிநாட்டுக் கொள்கை வகுக்கும் உரிமை நபிகளாரிடமே விடப்பட்டுள்ளது.

மதீனா சாசனத்திற்குக் கையொப்பமிட்டதன் மூலம், இஸ்லாமிய அரசை உருவாக்கத் தேவையான ஆள்புல எல்லைகளைக் கொண்ட பிரதேசம் ஒன்று உருவாகியது. அதனை அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, அரசின் தலைவர் என்ற முறையில் நபிகளாரைச் சேர்ந்தது. அதனால் மதீனா சாசனத்தில் அப்பணிக்கும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சமய பொருளாதார அரசியல் ஏதுக்கள் காரணமாக மக்காக் குறைஷியரிடம் இருந்து கடும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள, உள்நாட்டில் அமைதியும், ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவுவது அத்தியாவசியத் தேவையாகும். அதனை ஏற்படுத்த மதீனா சாசனம் ஏற்பாடுகளைச் செய்திருந்தது போலவே மக்காக் குறைஷியரிடம் இருந்தும் மதீனாவவைக் காப்பற்றத் தேவையான விதிகளைத் தன்னுள் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. எதிரிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து மதினாவைப் பாதுகாக்கும் பொறுப்பு முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் உண்டு என்றும், அதற்கான செலவுகளிலும் இரு குழுவினரும் பங்கு கொள்ள வேண்டும் என்றும், குறைஷியர்க்கோ அவர்களின் ஆதரவாளர்களுக்கோ உதவக் கூடாது என்றும் மதீனா சாசனத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மதீனா சாசனத்தில் கையொப்பமிட்ட அனைவரும் கூட்டாக மதீனாவை எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பதற்கு தமதுயிர், உடமை என்பவற்றைத் தியாகம் செய்ய வேண்டும் என்று அது வலியுறுத்தியுள்ளது.

இறைதூதர் முகம்மது (ஸல்) அவர்கள் முதன் முதல் செய்து கொண்ட அகபா உடன்படிக்கை, முன்மாதிரியான முஸ்லிம் சமூகம் உருவாகுவதை இலட்சியமாகக் கொண்டிருந்தது. முஸ்லிம் சமூகத்தையும் இஸ்லாமிய அரசையும் அங்கீகரிக்கச் செய்து, எதிரிகளிடம் இருந்து அவ்விரண்டையும் பாதுகாப்பதை மதீனா சாசனம் இலட்சியமாகக் கொண்டிருந்தது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## உசாத்துணை நூல்கள்:

1. இப்னு ஹிசாம் (அறபு)
அஸ்ஸீரதுன் நபவிய்யா
சிர்கத்து மக்தபா வமத்பஆ - 1995
2. முகம்மது அல்கஸ்ஸாலி (அறபு)
பிக்ஹுஸ்ஸீரா
தாருல் அதப் அல் இஸ்லாமியா - 1982
3. முகம்மது அற்றிழா (அறபு)
முகம்மது (ஸல்)
4. முகம்மது பின் அப்துல்வஹாப் (அறபு)
மு··.தஸர் ஸீரதுற் றசூல்
மம்லகதுல் அறபிய்யதிஸ் ஸஊதிய்யா 1956
5. முகம்மது பின் முகம்மது (அறபு)
சீரதுன்னபவிய்யா - பீ - லவ்இல்
குர்ஆனி வஸ்ஸுன்னா
தொகுதி I கெய்ரோ - 1990
6. Abul Hasan Ali Nadvi
Muhammadu Rasulullah
Lukknow (India)
7. Gibb H.A.R. Mohammadanism
London 1953
8. Guillaume A
The life of Mumammed
London 1955
9. Haykal
The life of Mumammed
Nigera
10. Iqbal Afzal
Diplomacy in Early Islam
Delhi 1992
11. Margoliouth D.S.
Mohammad and The Rice of Islam
Londom 1905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

12. Maududi A.A
The Meaning of the Quran
Pakistan Vol 1 - 6
13. Muir Williom
The Life of Mohammed
Edenburgh
14. Shibli Numam
Sirat al Nabi
Pakistan
15. Siddiqu Abdul Hameed
The life of Mumammed
Pakistan 1969
16. Sayyid Sulaiman Sadvi
Mohammad The Ideal Prophet
Lackknow (Islam) 1977
17. Matt W.M.
Mohammed at Mecca
Oxford 1960

UNIVERSITY OF PERADENIYA
28 JUN 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF PERADENIYA
28 JUN 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media
605634

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்..

- இஸ்லாமிய சட்டக்கலை
- இஸ்லாமிய நாகரிகம் (தொகுதி 1)
- இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் அறிஞர் சித்திலெவ்வை
- அறேபியர் வாழ்வியல்
- இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் 1870-1915


ஏக விநியோகஸ்தர்கள்...

இஸ்லாமிய புக் ஹவுஸ்
இல.77,
ஸ்ரீ வஜிரஞான மாவத்தை,
கொழும்பு — 09.

PRINTED BY : MJM OFFSET PRINTERS-03546855



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org